விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 02 ஞாயிற்றுக்கிழமை (18.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 242

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# அரச சார்பற்ற நிறுவனங்கள் நவநீதம்பிள்ளைக்கு மகஜர்

### விரிவான விசாரணை கோரி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் அவசர மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளன. விரிவான விசாரணைக்கு வலியுறுத்தியே இம் மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 47 அரச சார்பற்ற நிறுவனங்கள் இவ்வாறு அவசர மகஜரை அனுப்பி வைத்துள்ளன. (19ஆம் பக்கம் பார்க்க)

## ஷிராணியை சந்திப்பார் நவநீதம்பிள்ளை

(கொழும்பு)

இலங்கைக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி வருகைதரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கும் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

கடந்த மார்ச் மாதம் நம்பிக்கையில்லாத தீர்மானம் ஒன்றின் மூலம் ஷிராணி பண்டாரநாயக்க பிரதம நீதியரசர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதன் பின்னர் அவர் கலந்து கொள்ளும் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தை இதுவாகும்.

அத்துடன் ஷிராணி பண்டாரநாயக்க பதவியில் இருந்து நீக்கப்பட்ட பின்னர், சந்திக்கும் முதல் சர்வதேச ராஜதந்திரி நவநீதம்பிள்ளை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் ஸ்கைப் மூலமாக சர்வதேச நீதிபதிகள் சங்கத்தின் கூட்டத்தில் உரையாற்ற பண்டாரநாயக்க தயாராக இருந்த போதிலும் தொழில்நுட்ப தடைகள் (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதா மீது ஹெல உறுமய பாய்ச்சல்

(கொழும்பு)

இந்திய சுதந்திர தினத்தில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இலங்கைக்கு எதிராக வெளியிட்டுள்ள கருத்துக்களை வன்மையாக கண்டிப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் ஊடக செயலாளர் நிஷாந்த சிறிவர்ணசிங்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் தொடர்ந்தும் இலங்கையின் இறையாண்மை மற்றும் சுதந்திரத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்.

தமிழக முதலமைச்சரின் கருத்துக்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தாதது சம்பந்தமாக ஜாதிக ஹெல (19ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய - இலங்கைப் பிரச்சினைக்கு இலங்கைக்கு ஆதரவு தரமுடியாது

### சீனா, ரஷ்யா அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்தியா இடையிலான முரண்பாடுகளின் போது தாம் இலங்கையின் பக்கம் சார்ந்திருக்க போவதில்லை என சீனாவும் ரஷ்யாவும் அறிவித்துள்ளதாக தெரியவருகிறது.

கச்சதீவு மற்றும் 13வது அரசியல் திருத்தச் சட்டம் சம்பந்தமாக இலங்கை செயற்பட்ட விதம் தொடர்பில் நூறு சத வீதம் இணங்க முடியாது என்றும் அந்த நாடுகள் கூறியுள்ளன.

அதேபோல் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஏற்படும் எந்த பிரச்சினையிலும் தாம் இலங்கைக்கு ஆதரவாக இருக்க முடியாது (19ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமரை அழைக்க நேரில் செல்கிறார் பீரிஸ்



(கொழும்பு)

இலங்கையில், நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்க வருமாறு இந்தியப் பிரதமர் மனமோகன்சிங்கிற்கு நேரில் அழைப்பு விடுக்க விருப்பதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

புதுடில்லிக்கு இன்று ஞாயிற்றுக் கிழமை விஜயம் செய்யவிருக் கின்ற இலங்கை வெளிவிவகார அமைசசர் ஜி.எல்.பீரிஸே அழைப்பிதழை வழங்கவிருக்கின்றார் என்று இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் நடைபெறவிருக்கின்ற பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது என்று தமிழக அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

ஆனால், உலக நாடுகள் பங்கேற்கும் இக்கூட்டத்தை அரசியல் காரணங்களைக் கூறி தவிர்க்கக் கூடாது என்று மத்திய அரசு கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## வடக்கில் முதலமைச்சர் பதவி ஐ.தே.கவுக்கு தேவையில்லை

(கொழும்பு)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயமாக வெற்றிபெறும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ.பெரேரா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சி முதலமைச்சர் பதவியை பெறும் நோக்கத்தில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவில்லை.

அடுத்து நடைபெறவுள்ள பிரதான தேர்தலில் அரசியலில் ஈடுபடுவதற்கு தேவையான பின்னணியை கட்டியெழுப்புவதற்காகவே அங்கு தேர்தலில் போட்டியிடுகிறோம்.

வடக்கு மாகாணத்தில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் அந்தப்பிரதேசத்தில் (19ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்த அரசை கலைக்கவே மதங்களுக்கிடையிலான தூண்டுதல்

### அமைச்சர் விமல் குற்றச்சாட்டு

(கொழும்பு)


போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்பும் இலங்கையில் ஸ்திரமற்ற நிலைமை காணப்படுவதாக சுட்டிக்காட்டுவதற்கு மிகவும் நுட்பமான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

மாத்தளையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் திட்டத்தின் பங்காளியாக செயற்பட்டு வருகிறது.

இலங்கையின் பொருளாதாரத்தை பல்தேசிய நிறுவனங்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில், ரணில் விக்ரமசிங்க தலைமையிலான வலுவற்ற ஐக்கிய



தேசியக் கட்சியின் ஆட்சியொன்றைக் கொண்டுவர முயற்சித்து வருகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி ஒன்று ஏற்பட்டால், பல்தேசிய நிறுவனங்களின் கைக்குள் இலங்கையின் பொருளாதாரம் செல்வதைத் தடுக்க முடியாது.

தற்போதைய அரசாங்கம் பல்தேசிய நிறுவனமான நியூசிலாந்தின் நிறுவனம் ஒன்று உற்பத்தி செய்யும் (19ஆம் பக்கம் பார்க்க)

## பொய்முறைப்பாடு செய்தால் வேட்பாளர் மீது நடவடிக்கை

### பிரதித் தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேர்தல் காலங்களில் தமக்கு அச்சுறுத்தல் என பொய்யான முறைப்பாடு செய்தால் அவ் வேட்பாளர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண பிரதித் தேர்தல் ஆணையாளர் சி.அச்சுதன் தெரிவித்தார்.

இவ்வாறு பொய்யானதான ஒரு முறைப்பாடு எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளது எனவும் அவர் கூறினார்.

வடமாகாண சபைத் தேர்தல் நடைபெறும் திகதி நெருங்கிக் கொண்டுள்ள நிலையில்,

ஒரு சில வேட்பாளர்கள் தம்மை இனந் தெரியாதவர்கள் அச்சுறுத்துகின்றனர். முச்சக்கர வண்டிகளில் வீட்டினைக் சுற்றித் திரிகின்றனர் என பொய்யான தகவல்களினை வழங்கி முறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறு முறைப்பாடு செய்பவர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# சொந்த நுட்பங்களை பயன்படுத்தி புலிகளை வென்றது இராணுவம்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் இலங்கை இராணுவம் தமது சொந்த நுட்பங்களையே பயன் படுத்தியதாக இராணுவத் தளப்தி லெப்டினட் ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கடற்படை மற்றும் கடல்சார் நிறுவனத்தின் புதிய அதிகாரிகளுக்கான பட்டமளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போரின் போது முன்னேற்றங்களும், பின்னடைவுகளும் இருந்தன. எதிரிகளுக்கு ஏற்ப தாக்குதல் வியூகங்களை கையாண்டோம்.நாம் ஒரு வட்டத்திற்குள் இருந்து சிந்தித்து, எமது முறைகளை கண்டுபிடித்து அதன் அடிப்படையில் வெற்றி பெற்றோம்.போர் முடிவுக்கு வந்து 4 ஆண்டுகள் கடந்துள்ளது. அதன் பின்னர் பல ஆச்சரியமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்றார்.(எ-11)


## நிரந்தர வேலைவாய்ப்புகள்

வளமான வாழ்விற்கு அதி உயர் சம்பளத்துடன் நிரந்தர வேலை வாய்ப்புகள் கொழும்பை அண்மித்த முன்னணி தொழிற்சாலைகளான ஜாம், குளிர்பானம், PVC, ஆடைத் தொழிற்சாலை, பிளாஸ்டிக் மெல்லிய கூரை, கோழி இறைச்சி தொழிற்சாலை, போன்றவற்றுக்கு உற்பத்தி உதவியாளர்/பொதியிடல்/லேபல் தரம்பிரித்தல் பிரிவுக்கு 18-50 வயதினர் (ஆண், பெண்) தேவை. உணவு, தங்குமிடம், சகாய விலைகளில்.

சம்பளம் 18000/-, 25000/-,30000/-

வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்புகள்

(C-4352)

தொடர்பு: 0775561883/0778430179


# தமிழ் இளைஞன் மீது கடுமையான தாக்குதல்

## பரந்தனில் சம்பவம்

சிங்கள இளைஞனுக்காக தமிழ் இளைஞர் ஒருவரைக் கட்டி வைத்து கடுமையாக தாக்கிய சம்பவத்தில் அவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு பரந்தன் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இதில் 160-ம் கட்டை பரந்தன் பகுதியைச் சேர்ந்த ச.பிரகாஷ் (வயது 27) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பரந்தன் பகுதியில் சிங்கள இளைஞர் ஒருவருக்கும் தமிழ் இளைஞர் ஒருவருக்கும் இடையில் முறுகல் நிலை காணப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பாக இருவரும் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர். பின்னர் இது தொடர்பாக சிங்கள இளைஞர் அருகிலுள்ள இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினருக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

இதன்பின்னர் அங்கு வந்த சிலர் அவரது கையை பின்னால் கட்டிவைத்து பொல்லுகளால் தாக்கியுள்ளனர்.

ஆயினும் பொதுமக்கள் ஒன்றுகூடவே அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர். படுகாயமடைந்த இளைஞரை பொது மக்கள கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். (எ-11)

# வெலிவேரிய சம்பவம் விசாரணை இடைநிறுத்தம்

(கொழும்பு)

வெலிவேரிய ரத்துபஸ்வல சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மனித உரிமை ஆணைக்குழு தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு முடிவடையும் வரையில் விசாரணைகளை இடைநிறுத்தி வைக்கத் தீர்மானித்துள்ளது.

இந்த சந்திப்பின் பின்னர் விசாரணைகள் தொடரும் என ஆணைக்குழுவின் தலைவர் நதவான் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

இரண்டு வாரங்களில் விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்படும் எனவும், தேவை ஏற்பட்டால் இராணுவத்தினர், காவல்துறையி னர், பிரதேச மக்கள், பௌத்த மதகுருமார் மற்றும் கிறிஸ்தவ மதகுருமார் ஆகியோரை சந்தித்து விசாரணை நடத்தவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதேச மக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் மதகுருமாரிடம் ஏற்கெனவே வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (எ-11)

# காயங்களுக்குள்ளானவர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

காயங்களுக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் சிகிச்சை பலன் இன்றி உயிரிழுந்துள்ளார்.குருநாகலைச் சேர்ந்த அப்புகாமி நிசாந்த (வயது 42) என்பவீரே உயிரிழந்தவராவார்.

விழுந்து காயமடைந்ததாகத் தெரிவித்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பிரஸ்தாப நபரின் பிரேத பரிசோதனையில் இவர் அடித்துக் கொலை செய்யப்பட்டதாகத் தெரிய வந்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவது,

கடந்த 7-ம் திகதி கீழே விழுந்ததால் காயம் ஏற்பட்டதாகக் கூறி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சிகிச்சை பலன்இன்றி உயிரிழந்துள்ளார்.

சடலத்தினை பிரேத பரிசோதனை செய்த போது குறித்த நபரை பலமாக அடித்ததன் காரணமாக உயிரிழந்ததாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-6,11)


## வடமாகாண சபைத் தேர்தல் 2013

### கிளிநொச்சி மாவட்டம்



தனிமாவட்டமாக்கிய
கிளிநொச்சியை
மீண்டும் தலை நிமிர்த்திட

**வீ.ஆனந்தசங்கரி**

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு**
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)



X 2


# ஓய்வுபெற்ற அதிபர் குத்திக் கொலை

(கொழும்பு)

சிலாபம் பிரதேசத்தில் 76 வயதுடைய ஓய்வு பெற்ற அதிபர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிலாபம் பிரதேசத்தில் உள்ள காக்காப்பள்ளி எனும் பகுதியிலேயே இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தையடுத்து கிடைத்த தகவலையடுத்து குறித்த இடத்திற்குச் சென்ற பொலிஸார் அவர் வசித்து வந்த வீட்டிலிருந்து அவரது சடலத்தை கைப்பற்றியுள்ளனர்.

குறித்த ஓய்வுபெற்ற அதிபர் தனது வீட்டில் தனியாகவே வசித்து வந்துள்ளார் எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

இக்கொலைக்கான காரணம் என்ன என்பது தொடர்பிலோ கொலையாளி தொடர்பான விபரங்களோ இதுவரை கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் கொலை செய்யப்பட்டவரின் மூத்த மகன் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும், அவர் தற்சமயம் பிரதேசத்தை விட்டு தலைமறைவாகியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

கொலை செய்யபட்டவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக சிலாபம் பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (எ-11)


## காணி - வீடு விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
பலாலி வீதியிலிருந்து 3/4 Km தூரத்தில்
ஈவினையில் 10 பரப்புக் காணியும்,
வீடும் அதனருகிலேயே மேலும்
28 பரப்புக் காணியும்
விற்பனைக்கு உண்டு

தொடர்பு :
0754161462 (3639)

## பிள்ளையார் இன்

சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும். 6 - 10 pm - 250/=

தினமும் **12 மணிமுதல் 3 மணிவரை** மிகச் சிறந்த சைவ, அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

(சி-4348)

**சைவ உணவு: 150/-** **அசைவ உணவு 180/-**

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

**Western Union** மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(C-4347)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 1984-03-28
விண்ணில் 2012-09-09

அமரர்
**பத்மநாதன் ஜென்சிலீன்**
(பிரபா)

அன்பின் திருவுருவாய்
பாசத்தைப் பொழிந்த
எம் அன்பு நெஞ்சமே
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எம் துயர்தான்
உன் அகண்ட நினைவுகளை
மனதில் சுமந்தபடி ....
என்றும் உன் நினைவுகளோடு..

உன் நினைவில் வாழும்
வ. பத்மநாதன் குடும்பத்தினர்
மாரியம்மன் வீதி, திருநெல்வேலி.

(3640)



## புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு

கொக்குவில் அச்சுக்கூட வீதியில் (Press Lane) அமைதியான சூழலில் நன்னீர், சுற்றுமதிலுடன் கூடிய 2 பரப்பில் அமைந்த புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு. இது.கே.கே.எஸ்.வீதிக்கும் ஆடிய பாதம் வீதிக்கும் மிக அண்மையாக உள்ளது.

**தொடர்புகளுக்கு: 0772470590**
**0771113142, 0778543106**

(3624)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொமர்ஷல் வங்கியில் திறமையான பிள்ளைகளுக்கு சிறப்பான பரிசுகள்




## தேசிய மட்டத்தில் சிறப்பாக சித்தியடைந்தோருக்கு

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் உங்கள் பிள்ளை அகில இலங்கை ரீதியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றால், பிள்ளைக்கு 18 வயதாகும் வரை மாதாந்தம் ஒரு தொகைப் பணம் புலமைப் பரிசாக வழங்கப்படும்.

1 ஆம் இடம் - மாதாந்தம் ரூபா.2,000 வீதம் அதிகபட்சம் ரூபா.170,000 வரை
2 ஆம் இடம் - மாதாந்தம் ரூபா.1,500 வீதம் அதிகபட்சம் ரூபா.127,000 வரை
3 ஆம் இடம் - மாதாந்தம் ரூபா.1,000 வீதம் அதிகபட்சம் ரூபா.85,000 வரை பரிசாக வழங்கப்படும்.

### மாவட்ட மட்டத்தில்

உங்கள் பிள்ளை மாவட்டத்தில் முதலிடம் பெற்றால் ரூபா.50,000 பணப் பரிசு வழங்கப்படும்.

### பாடசாலை மட்டத்தில்

சிறப்பாக சித்தியடைந்தோருக்கு அனைத்துப் பாடசாலைகளிலும்.
1 ஆம் இடம் - ரூபா.10,000
2 ஆம் இடம் - ரூபா.7,500
3 ஆம் இடம் - ரூபா.5,000 பரிசாக வழங்கப்படும்.

**இச் சலுகைகளைப் பெற செய்யவேண்டியது யாதெனில், 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும் தினத்தின் போது அருணலு கணக்கில் ஆகக் குறைந்தது ரூபா. 5,000 ம் மீதி இருக்க வேண்டும்.**

* தேசிய மட்டத்தில் சிறப்பாக சித்தியடைந்தோருக்கு புலமைப்பரிசில் தொகை 6ஆம் வகுப்புத் தொடக்கம் பிள்ளைக்கு 18 வயதாகும் வரை மட்டுமே வழங்கப்படும்.
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

Arunalu
Children's Savings Account

COMMERCIAL BANK

+ 94 112 353 333 www.combank.lk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் தொற்றா நோய்களின் தாக்கம் அதிகரிப்பு





யாழ்.மாவட்டம் உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் தொற்றாத நோய்களின் தாக்கம் அதிகரித்து வருவதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றாத நோய் களுக்கான தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் வை. யோ கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் அனுசரணையுடனும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனையின் ஒத்துழைப்புடனும் 512 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் பாஷையூர் சென். அன்ரான்ஸ் ஆர்.சி.மகளிர் வித்தியாலய மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மருத்துவ முகாமில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தற்போது சகல மாவட் டங்களிலும் தொற்றாத நோய்களின் பரம்பல் அதிகரித்து வருகின்றது.

தொற்று நோய்களின் தாக்கத்துடன் ஒப்பிடக் கூடிய வகையில் தொற்றாத நோய்களின் தாக்கமும் அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக, 35 வயதுக்கு மேற்பட்டவர் களுக்கு தொற்றாத நோய்களின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது.

இந்த வயதுக்கும் மேற்பட்டவர்களில் 10 பேரில் 4 பேருக்கு உயர் குருதி அழுத்த நோய்த் தாக்கமுள்ளமை கண்டறியப்பட்டுள் ளது.எதிர்வரும் 2020 ஆண்டில் இந்நிலை மேலும் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க் கப்படுகிறது.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 10 பேரில் 6 பேருக்கு தொற்றாத நோய்களின் பாதிப்பு ஏற்படும் வாய்ப்புள்ள தாக இருக்கும்.

இருதய நோய், சுவாச நோய், நீரிழிவு போன்ற தொற்றாத நோய்களின் தாக்கம் இலங்கையில அதிகரித்து வருகின்றது.

இதற்கு முக்கிய காரணம் உடல் உழைப்பின்மையும் பழம், இலைகறி வகைகளை உண்ணும் வீதம் குறைந்ததும் உப்பின் அளவு அதிகரிக்கப் பட்டதுமேயாகும் என அவர் தெரிவித்ததோடு தொற்றாத நோய்களின் தாக்கத்தைக் கட்டுப் படுத்த ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டுமெனவும் வேண்டு கோள் விடுத்தார்.

இந்த மருத்துவ முகாம் நிகழ்வானது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் முடியப்பு றெமீடியஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 51 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் அபேயநாயக்க மற்றும் இராணுவ உயரதிகாரிகள், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வைத்திய அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

# வாரம் ஒரு தகவல்

## தூங்க முடியவில்லை

"டாக்டர் நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்"

"என்ன பிரச்சினை உங்களுக்கு?"

"மனுசன் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை"

"ஒரு மனுசன் தன் வாழ்நாளில் மூன்றிலொரு பகுதியைத் தூங்கித் தான் கழிக்கின்றான். தெரியுமல்லவா"

"அவர்கள் கொடுத்து வைத்தவர்கள்"

அது இருக்கட்டும். ஒருவன் எப்படித் தூங்குகின்றான் என்பதை வைத்துக்கூட அவனுடைய மனதைப் புரிந்து கொள்ளலாம்"

"அது எப்படி?"

"ஒரு காலை நிமிர்த்தியும் இன்னொரு காலை மடக்கியும் வைத்துக் கொண்டு தூங்குபவர்களுக்கு இரண்டு விதமான குணங்கள் உண்டாம். இவர்களெல்லாம் சில நேரங்களில் தங்களைப் பலசாலிகளாகக் காட் டிக் கொள்வார்களாம். ஆனால் அதுவே அவர்களுடைய குணம் இல் லையாம்: மனதுக்குள்ளேயே பதுங்குவார்களாம்"

"அப்படியா?"

"ஆமாம்! மனதுக்குள் ஒரு தவிப்பு அல்லது பயம் உள்ளவர்கள் பந்து மாதிரிச் சுருண்டு படுத்துக் கொள்வார்கள். அந்தப் பயம் போனதற்குப் பின் நன்றாக நிமிர்ந்து படுத்துத் தூங்குவார்களாம்"

"டாக்டர் நீங்கள் சொல்வதெல்லாம் தூங்குபவர்களைப்பற்றி, என்னைப் போல் தூங்க முடியாதவனுக்கு ஏதாவது வழியுண்டா?"

"உங்களால் ஏன் தூங்கமுடியவில்லை?"

"மனைவி தொண தொண என்று பேசிக் கொண்டிருந்தால் எப்படித் தூங்க முடியும்?"

"எங்கள் வீட்டிலும் அதே பிரச்சினைதான். அதற்கு வழி இதுதான். பெற்றுக் கொள்ளுங்கள்"

"என்ன டாக்டர் இது?"

"தூக்க மாத்திரை"

"ரொம்ப நன்றி டாக்டர். இதை நான் எப்படி பாவிக்க வேண்டும்"

"இது உங்களுக்கு இல்லை. உங்கள் மனைவிக்கு"

.தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# உருக்களின் உலகம் கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை அதிகரிப்பதற்கு உதவும் நோக்குடன் நூலக விழிப்புணர்வு நிறுவனம் உருக்களின் உலகம் (Word of Objects) தொனிப் பொருளில் அமைந்த சான்றாதார கல்விக் கண்காட்சி 'ஒன்றை நாளை திங்கட்கிழமை மறுநாள் செவ்வாய்க்கிழமை யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் நடத்துவதற்கு தீர் மானித்துள்ளது.

இக் கண்காட்சி பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய மூன்று பிரிவினருக்கும் பயன் தரும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (அ)

# இராசி பலன்

18.08.2013
(ஆவணி 02, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
துவாதசி பிற்பகல் 2.59 மணிவரை
பூராடம் மாலை 5.31 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
முதலாம் ஆவணி ஞாயிறு,
பிரதோச விரதம், சித்தாமிர்தம்

**மேடம்** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும் நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பயணங்களால் பலனுண்டு, மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.

**இடபம்** வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், அடுத்தவர் விவகாரத்தில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வெளியூர் பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

**மிதுனம்** பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நட்பு வட்டம் விரிவடையும், தொழில் நன்மை கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**கடகம்** சச்சரவை விட்டு சாதித்துக் காட்டுவீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், சிவாலய வழிபாடு சிறப்பினைத் தரும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிங்கம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், பிறருக்கு உதவி செய்யும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், பயணங்களால் பலனுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** இனிய அனுபவங்கள் ஏற்படலாம், எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க சகோதர வழியில் உதவிகள் கிடைக்கலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** குடும்ப வளர்ச்சி கூடும், தன வரவு திருப்திகரமாக அமையும், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**தனுசு** ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், வேலைச் சுமை கூடும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது.

**மகரம்** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், வீட்டை அழகுபடுத்துவதில் அக்கறை காட்டுவீர்கள், அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் பெறுவீர்கள்.

**கும்பம்** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், எடுத்த முயற்சியால் ஆதாயம் கிடைக்கும், உறவினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**மீனம்** பெரிய மனிதர்களின் தொடர்பு உங்கள் தகுதியை உயர்த்தும், எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 80 |
| தக்காளி | 40 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 |
| கோவா | 70 | 100 | 100 |
| கரட் | 100 | 120 | 140 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 140-160 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 140 |
| பாகற்காய் | 40 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 100 |
| பயற்றங்காய் | 160 | 120 | 100 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 40 | 40 | 40 |
| கறிமிளகாய் | 60 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 80 | 120 | 120 |
| போஞ்சி | 120 | 100 | 240 |
| கத்தரிதம்புள்ள | -- | -- | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 190 | 200 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40-45 | 30-40 |
| இராசவள்ளி | 80 | 120 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனை

அரியாலை கனகரட்ணம் வீதியில் அமைந்துள்ள சாஸ்திரியார் லேனில் இல.24/6 என்ற கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ள:0750427521



## கடை வாடகைக்கு

யாழ்.கொக்குவில் பிறவுண் வீதியில் (Brown Road) கடை வாடகைக்கு 300 sq feet (சதுர அடி) யாழ்.பல்கலைக்கழகம், Technical College, மருத்துவ பீடம், கொக்குவில் Railway Station, அண்மையில்

தொடர்பு: 0757605071 (4358)


# "ஆழக்கடல் வென்றவர்கள்" மீள் பதிப்பு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ந.சிவரத்தினம் ஆக்கிய **ஆழக்கடல் வென்றவர்கள்** எனும் நூலின் மீள் பதிப்பு வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு வல்வெட்டித்துறைச் சந்தியில் அமைந்துள்ள பழைய நகராட்சி மன்றக் கட்டடத்தில், வல்வெட்டித்துறை கலை, கலாசார இலக்கிய மன்றத் தலைவர் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலைச் சிகரம் ஆ.அதிரூபசிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி செ.செல்வசுகுணா, வாழ்நாள் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூலின் வெளியீட்டுரையை யா/சிதம்பராக் கல்லூரி அதிபர் கே.இராசதுரைஆற்ற,வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கத்தினர், கலை, கலாசார இலக்கிய மன்றத்தினர் ஆகியோர் வெளியிட்டு வைப்பர்.

நூலின் மதிப்பீட்டுரையை யாழ். உயர் கல்லூரி விரிவுரையாளர் சைவப்புலவர் பொன். சுகந்தன் நிகழ்த்துவார். (செ-2)


## STUDY & WORK IN CANADA

UK, NEWZEALAND, AUSTRALIA, MALAYSIA

SWEDEN, GERMANY, FRANCE, INDIA, UKRAINE, DUBAI, CYPRUS, ITALY, CARIBIEN COUNTRIES, SINGAPORE & SCHENGAN COUNTRIES

CANADA we assist you for
- Student Visa
- Work Permit Visa
- Super Visa
- Skill Migration
- Federal Skill Workers

UK we assist you for Student Visa Minimum Qualification O/L with IELTS 4.0
- Holiday Maker Visa
- Family Sponsor
- Tourist Visa

MBBS/ MD/ BDS/ NURSING/ PHARMACY in Caribien Countries (America) Ukraine, Russia, Belarus, Georgia

Minimum Qualification: A/L with 2B, 1C or Equivalent

Aug, Sep, Oct Intake in Progress

We Assist for New Zealand, Canada, Australia & Shengan Countries Wok Permits 100% Legal Assistance Work Permits Available Easy Payment

ALL EMBASSY FORM FILLING ONLINE FORM FILLING AND DOCUMENTATION

## SIEG INTERNATIONAL

111/2, Brown Road, Kokuvil East, Jaffna. (Near Technical College)

Mobile: 077 3502612, 072 3502611


அன்பு வாசகர்களே!

நல்லூரான் உற்சவகால பாமாலைக்காக தங்களிடமிருந்து தரமான கவிதைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. தங்கள் கவிதைகளை நல்லூர் கந்தன் பாமாலை, ஆசிரியர்,வலம்புரி, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். (ஆ-ர்)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து(Na)<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா :64 சூ, செ 12<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L<br>பெயின்ரர்<br>தொ.இ:B2250 | பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா :94 செவ் 8<br>தகைமை/தொழில்: HNDA, BCom<br>பிரான்ஸ்<br>தொ.இ:G1045 |
| பிறப்பு: 1979 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா :19.5 , செவ் 2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>வியாபாரம்<br>தொ.இ:B2252 | பிறப்பு: 1984 இந்து(V)<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா :50 செவ் 2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc<br>Programme Assistant<br>தொ.இ:G1048 |
| பிறப்பு: 1987 இந்து(V)<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா :9.75<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: CIMA<br>Accounts Executive தனியார்<br>தொ.இ:B2253 | பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: பரணி 2<br>கி.பா :35 செவ் 2<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BA<br>ஆசிரியை<br>தொ.இ:G1049 |
| பிறப்பு: 1978 இந்து(V)<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா : 6 சூ, செ 6<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSc,MSc<br>கணக்காளர் அவுஸ்திரேலியா Citizen<br>தொ.இ:B2254 | பிறப்பு: 1985 இந்து(V)<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா :13<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc, Following MSc Junior Executive<br>தொ.இ:G1050 |

சகல தொடர்புகளுக்கும்:-

## கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி




## மாமனிதர் குமார் பொன்னம்பலம்

## அவர்களது 75 ஆவது பிறந்த தின நினைவுப் பேருரை

**'தற்கால சர்வதேச சட்ட மற்றும் அரசியல் ஒழுங்கில் போருக்கு பின்னரான தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம்'**

**உரையாற்றுபவர் :** குமாரவடிவேல் குருபரன், சட்டத்துறை விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

காலம் : 18.08.2013 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் : பி.ப.3.30 மணி - 6 மணிவரை

இடம்: திருமறைக்கலா மன்றம் (கலைத்தூது மண்டபம்), பிரதான வீதி. யாழ்ப்பாணம்.

மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

(3630) **மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தக் குழு , தொடர்புகளுக்கு: 0776068834**

## ஜோதிலிங்க இரதபவனி

காசி விஸ்வநாதர்- வடமராட்சி
காலை 6.00- நண்பகல் 12.00
உடுப்பிட்டி வீரபத்திரர் கோயில்
மாலை 6.00-7.30 இள்ளைஞர் நிகழ்வு
முற்பகல் 10.00 பெண்கள் வலுவூட்டல் நிகழ்வு
பிற்பகல் 1.00-3.00
கெருடாவில் கந்தசுவாமி கோவில்
பிற்பகல் 4.00- 6.00
தொண்டைமானாறு சித்தி விநாயகர் கோயில்
இரவு-தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம்
ஸ்ரீ சோமநாதர்-வலிகாமம்
காலை 7.00-பிற்பகல் 5.00
மாகியப்பிட்டி சிவன் கோயில்
காலை 8.00 இளைஞர் நிகழ்வு பிற்பகல் 5.00-இரவு
அளவெட்டி நாகவரதநாயனார் கோயில்-காலை 6.00-10.00
கூழா நின்ற குளத்து முருகன் கோயில்
காலை 8.30 இளைஞர் நிகழ்வு
இராமேஸ்வரம்-கிளிநொச்சி/தென்மராட்சி
முற்பகல் 11.00 பிற்பகல் 1.30-வரணி காட்டுவளவுக் கந்தசாமி கோயில்
பிற்பகல் 4.00-இரவு- மந்துவில் கேலத்து அம்மன் கோயில்





புதிய சுவை! புதிய அனுபவம்! புதிய தொழில்நுட்பம்!

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100% சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில் நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம். பெறுமதி மிக்க பரிசில்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

## ஷைலோ ஐஸ்கிறீம்

No.231 , Temple Road, Nallur, Jaffna. T.P. 021 4926003

(3587)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உப்பு வீதியை விரைவில் புனரமைத்து தாருங்கள்


(கரணவாய்)

கரணவாய் தெற்குப் பகுதியிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கு சொந்தமான உப்பு வீதியை புனரமைப்பு செய்யும்படி முன்னதாக கோரிக்கை விடுத்தும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையென மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ் வீதியைப் புனரமைத்துத் தருமாறு கரவெட்டி பிரதேச சபையினருக் கும், வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கும் மக்கள் அறிவித்தல் கொடுத்திருந்தும் எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி வீதியை அங்குள்ள சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

போக்குவரத்தை மேற்கொள்ளமுடியாதுள்ள இவ் வீதியை புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் பிரதேச மக்கள் மீண்டும் வலி யுறுத்தியுள்ளனர். (அ-9-60)




நன்றி:-அததெரண

# காப்பெற் வீதிகள் மீது சின்னங்கள் வரைந்து சிலர் தேர்தல் பிரசாரம்

## நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறது பொலிஸ்தரப்பு

(யாழ்ப்பாணம்)

**காப்பெற் வீதிகளின் மீது சின்னங்களை வரைந்து தேர்தல் பிரசாரம் செய்வோர் பொலிஸாரின் கண்களில் அகப்படின் கைது செய்யப் படுவர் என யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார்.**

யாழ்.நகர், புறநகர் பகுதிகளில் காப்பெற் இடப்பட்ட வீதிகளில் பிரசார நோக்குடன் வேட்பாளரின் சின்னங்கள் வரையப்பட்டுள்ளமை தொடர்பில் அத்தியட்சகரிடம் கேட்டபோது,

காப்பெற் வீதிகளில் தேர்தல் பிரசாரம் செய்வது சட்டவிரோதமான செயலாகும். யாழ்.நகர் பகுதி உள்ளிட்ட பல இடங்களில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெற்றுள்ளன என எமக்கு தகவல் கிடைத்துள்ளது.

இவ்வாறு வீதிகளில் பெயர்களையும் தேர்தல் சின்னங்களையும் வர்ணம் தீட்டுகின்றமைக்கு அவை சார்ந்த வேட்பாளர்களே பொறுப்புக் கூறவேண்டும்.

காப்பெற் வீதிகளில் வர்ணம் தீட்டி பிரசாரம் செய்வோர் திருட்டுத்தமான முறையிலேயே தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

அதாவது பொலிஸார் இரவு நேரங்களில் பணிமுடிந்து அவ்விடத்தை விட்டு அகன்றதும் இவ்வாறான செயற்பாடுகளில் பலர் ஈடுபட்டுவருகின்றனர்.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையிலும் பொலிஸார் ரோந்துப் பணிகளில் ஈடுபடுகின்ற இடங்களிலும் ஆளுங் கட்சி வேட்பாளரது பெயர்கள், சின்னங்கள் வர்ணம் தீட்டப்பட்டுள்ளன.

இதனை பொலிஸார் கண்டுகொள்ளவில்லையா? என அத்தியட்சகரிடம் கேட்கப்பட்ட போது,

பொலிஸார், வீதிகளில் வரைபவர்களை மட்டும் கண்காணித்து கொண்டிருக்கமுடியாது. அவர்களுக்கு மேலதிகமான வேலைகள் இருக்கின்றன. தற்போது நல்லூர், செல்வச் சந்நிதி, பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய திருவிழாக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகையால் அவ் விழாக்களிலும் பொலிஸார்தான் பாதுகாப்பு வழங்க வேண்டியுள்ளது.

அவ்வாறாயின் வீதிகளில் வர்ணம் தீட்டப்பட்டுள்ள வேட்பாளரது பெயர்கள், சின்னங்கள் தேர்தல் விதிமுறைப்படி அழிக்கப்படுமா? என கேட்டபோது,

பொலிஸார் கூலி வேலை செய்து கொண்டிருக்க முடியாது. அதனை அவற்றுக்குரியவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

அதற்கு உரியவர்கள் யாவர்? என வினவிய போது அத்தியட்சகர் பதிலளிக்கவில்லை.

இதேவேளை, பொலிஸாரின் முன்னிலையிலேயே ஆளுங்கட்சி வேட்பாளர்களது பெயர்கள், சின்னங்கள் வீதிகளில் வர்ணம் தீட்டப்படுகின்றன என சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர். (அ-4)

# கொக்குவில் காமாட்சியிடம் வீழ்ந்தது சாவகச்சேரி வின்டோஸ் அணி





(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் கிரிக்கெட் இறுதியாட்டத்தில், சாவகச்சேரி வின்டோஸ் அணியை 45 ஓட்டங்களால் வெற்றி பெற்று கொக்குவில் காமாட்சி அணி சம்பியனாகியது.

மைக்கல் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய அணிக்கு 5 ஓவர் 6 பேர் கொண்ட கிரிக்கெட் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் சாவகச்சேரி வின்டோஸ் அணியை எதிர்த்து கொக்குவில் ஸ்ரீ காமாட்சி அணி மோதியது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய காமாட்சி அணி 5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ரம்மிய ராகுலன் 35 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அமலன் 2, செந்தூரன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.


பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வின்டோஸ் அணி 5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களை இழந்து, 35 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அமலன் 16 ஓட்டங்களைப் பெற்றார்.

காமாட்சி அணியின் பந்து வீச்சில் கிருபவன், நிஷா தலா 2, ரம்மிய ராகுலன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இறுதியில் சாவகச்சேரி வின்டோஸ் அணியை வெற்றி பெற்று கொக்குவில் காமாட்சி அணி சம்பியனாகியது.

போட்டியின் ஆட்டநாயகனாக காமாட்சி அணியின் ரம்மிய ராகுலன் தெரிவு செய்யப்பட்டார். (அ-9-24)




## சந்நிதி தேர்த் திருவிழாவை முன்னிட்டு பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் தேர்த்திருவிழாவை முன்னிட்டு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பாதையாத்திரை இடம்பெறவுள்ளது.

இதனடிப்படையில், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு ஆவரங்கால் சிவன் கோயிலிலிருந்து ஆரம்பமாகும் பாதயாத்திரை அச்சுவேலி-இடைக்காடு வீதியூடாக தொண்டைமானாறு செல்வச் சந்நிதியை சென்றடையும்.

பாதயாத்திரையில் கலந்து கொள்ளவிரும்பும் அடியார்கள் குறித்த தினத்தன்று ஆவரங்கால் சிவன் கோயிலில் ஒன்று கூடு மாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப் பாதயாத்திரை பண்டிதர் வே.பேரின்பநாயகம் மற்றும் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மென்பொருள் வெளியீட்டு விழா

சிவகுமாரன் சிவசன் ஆக்கிய CHILD MINDER மென்பொருள் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் செ.கண்ணதாசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக கணனி விஞ்ஞான சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் ஜுயின் சார்ள்ஸ் ஆற்றவுள்ளார்.

முதற்பிரதியை சுந்தர்சன் நிறுவன உரிமையாளர் பெற்றுக்கொள்ள், மதிப்பீட்டுரையை தீவக வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் நா.அம்பிகைபாகன் ஆற்றவுள்ளார். (அ)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

### இலங்கை

### வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

### அறிவித்தல்
### பட்டச் சான்றிதழ் வழங்கல்

1. கலைமாணி (சிறப்பு/பொது)
2. வணிகமாணி
3. இசைமாணி
4. நடனமாணி

மேற்படி பட்டக் கற்கை நெறிகளில் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ்கள் 21.08.2013 (புதன்கிழமை) தொடக்கம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உரியவர்கள் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் நேரடியாக வந்துபெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி பட்டச் சான்றிதழ்களுக்கான கட்டணமாக ரூபா 500/- இனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து பட்டச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்
14.08.2013

## நிர்வாக கிராம அலுவலர் நேர்முக பரீட்சை

(கும்பளை)

நிர்வாககிராமஅலுவலர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை திங்கட்கிழமை காலை 10.30 இற்கு சுதந்திர சதுக்கம் கொழும்பு-07 இல் உள்ள பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு யாழ். மாவட்டத்திலிருந்து 22 கிராம அலுவலர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர்கள் தரம் -1 சிறப்பு அதி விசேட சித்தி எய்தியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-9-19)

சாந்திகம்

## பதவிவெற்றிடம் - திட்ட இணைப்பாளர்

கடந்தபலவருடங்களாகஉளவளத்துணைமற்றும் சமுதாயமட்டஉளமருத்துவ - உளசமூகத் துறையில் சேவைபுரியும் எமதுநிறுவனம் மருதங்கேணி, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் உளசமூகமேம்பாடு தொடர்புடைய நடவடிக்கைகளைச் செயற்படுத்த உள்ளது. இவற்றைப் பொறுப்பெடுத்துச் செயற் படுத்தக்கூடிய ஒரு பொருத்தமான திட்ட இணைப்பாளரை நாம் உள்ளீர்க்க விரும்புகிறோம். இத்திட்டம் USAID நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் ஒருநிகழ்ச்சித் திட்டமாகும்.

### தகுதிகள்

- ✔ அங்கீகரிக்கப்பட்டபல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரியாக இருத்தல்.
- ✔ சமுதாய மட்ட உளசமூகப் பணிகளில் குறைந்தது இரண்டு வருட அனுபவத்தினை உடையவராக இருத்தல்.
- ✔ சாந்திகம் நிறுவனத்தையும், அதன் விழுமியங்களையும் புரிந்து அவற்றை represent செய்யக்கூடியவராக இருத்தல்.
- ✔ மேற்குறிப்பிடப்பட்ட இடங்களில் தங்கியிருந்துவேலைசெய்யக்கூடியஆர்வம் உடையவராக இருத்தல்.
- ✔ ஒருதிட்டத்தைப் பொறுப்பெடுத்து, முகாமைத்துவம் செய்து, பொருத்தமான அறிக்கைகளைத் தயாரித்து, நிறைவுசெய்வதற்குத் தேவைப்படும் திறன்களைக் கொண்டிருத்தல்.
- ✔ கணனியைக் கையாளும் திறனுடன், ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் மற்றும் எழுதும் ஆற்றல் உடையவராயிருத்தல்.
- ✔ வாகனஓட்டுநர் அனுமதிப்பத்திரம் மற்றும் சிங்களமொழியில் பேசும் ஆற்றல் என்பனவற்றைமேலதிகத் தகைமைகளாகக் கொண்டிருத்தல்.

முழுநேர ஒப்பந்த அடிப்படையில் உள்ளீர்க்கப்படும் இந்தப் பணியாளருக்கு மாதாந்தம் ரூபா 35,000/- வழங்கப்படும். அதனுடன் ஊழியர் சேமநிதியும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்புநிதியும் மேலதிகமாகவழங்கப்படும்.

### விண்ணப்பிப்பதற்கான இறுதித்திகதி : 23.08.2013

(குறிப்பு : ஏற்கனவே இப்பதவிக்குவிண்ணப்பித்தவர்கள் இவ்விளம்பரத்தினை கருத்திற்கொள்ளத் தேவையில்லை)

பொருத்தமானவர்கள் எனக் கருதப்படும் விண்ணப்பதாரிகள் எழுத்து, செயன்முறை மற்றும் நேர்முகத் தேர்வுகளுக்குஅழைக்கப்படுவார்கள்.

மேலதிகவிபரங்களுக்கும், சுயவிபரங்கள் அடங்கியவிண்ணப்பங்களைக் கையளிப்பதற்கும் அல்லதுதபால் மூலம் அனுப்புவதற்கும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**திரு. எஸ்.வி.சங்கரப்பிள்ளை,**
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
சாந்திகம்,
இல. 8 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.: 021-2229720
மின்னஞ்சல் முகவரி: psych@sltnet.lk


# விசா பெற்றுக்கொள்ள இருப்பவர்கள்

**UK, Australia, Canada, USA, New Zealand , Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway**
Switzerland, Sweden etc... மற்றும் ஏனைய நாடுகளுக்கு எமது பல வருட அனுபவமுள்ள UK, USA, CANADA போன்ற நாடுகளில் பயிற்சி பெற்ற சட்டதரணிகளால் புதிய நிபந்தனைகளும், விதிமுறைக்கமைய விசா பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் செய்து கொடுக்கப்படும்.

## Student Visa

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு சென்று படிப்பதற்கும் பகுதி நேர வேலைவாய்ப்பு மற்றும் அந்த நாட்டில் Settle ஆக விரும்புகின்றவர்களுக்காக:

- படிப்பதற்கு வயது எல்லை இல்லை. சரியான காரணமே போதுமானது.
- Minimum Qualification O/L மற்றும் ஏதாவது பாடநெறி படித்திருந்தால் நன்று இடைவெளி இருந்தால் கவலைப்பட தேவையில்லை.
- IELTS தகைமை தேவையில்லை, இருந்தால் மிக நன்று
- உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப மிகக் குறைவான செலவில் TOP University, A Grade College செல்வதற்கான வாயப்பு.
- உங்களுடன் உங்கள் உதவிக்கு யாராவது உறவினர்களை அழைத்து செல்ல விரும்புகின்றீர்களாயின் அதற்கான வசதிகள் செய்து தரப்படும்
- உங்கள் கல்வி செலவுக்கு போதுமான பணத்தை அரசவங்கியினூடாக கடனாகப் பெற்றுத்தரப்படும்.
- வங்கியில் பணவைப்பு, Airport Pickup, Accommodation, மற்றும் உங்கள் ஏனைய குறைபாடுகள், தேவைகள் நிவர்த்தி செய்யப்படும்.



## Visit Visa

சுபகாரியங்களுக்கும், திருமணங்களுக்கும், மங்கள, அவமங்கள காரியங்களுக்கும் மற்றும் அவசரமாக செல்ல இருப்பவர்களுக்கும் விசேடமாக உடனே விசா பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

தாமதமாகிய விசாக்கள் - திரும்பிய விசாக்கள் உள்ளதா? விசா பெற்றுக் கொள்வதில் பிரச்சனை உள்ளதா?

*Refused? Rejected?*

- ✔ உங்கள் ஆவணங்களை சரியான முறையில் சமர்பிக்கத் தவறி விட்டீர்களா?
- ✔ உங்கள் வீசா முடிந்ததும் இலங்கைக்கு திரும்பி வருவீர்கள் என்ற சந்தேகமா?
- ✔ உங்கள் வங்கியில் சேமிப்பு பணம் பற்றாக்குறையா?
- ✔ உங்கள் ஆவணங்கள் திருப்தி தரக்கூடியதாக இல்லையா? மற்றும் ஏதாவது காரணங்கள் இருப்பின் இது நிவர்த்தி செய்து சரியான முறையில் VISA பெற்றுக் கொடுக்கப்படும்.



- ✔ விசா சம்பந்தமான சகல ஆலோசனைகள் வழங்கப்படும்.
- ✔ வீசா விண்ணப்பபடிவம் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.
- ✔ Embassy கடிதங்கள் மொழி பெயர்த்துத் தரப்படும்.
- ✔ Ticket, Hotel Booking, Travels Insurance செய்து தரப்படும்.
- ✔ வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் Sponsor கடிதங்களுக்கு விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
- ✔ வெளிநாட்டில் உள்ள உறவினர்களிடம் செல்வதற்கான வசதிகள் செய்து தரப்படும்.



## வங்கியில் பணவைப்பு

Saving book, Fixed Deposit, Statement
3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின் ) பணவைப்பு

**Migration / Skill Migration / Work Permit / Visit Visas / Student Visas / Dependent / Family Visas / Business / Investment / Rejection Appeals / New Applications etc...**

எவ்வித முற்பணம் இல்லாமல் எம்மிடம் வந்து கதைத்து உண்மையான, நேர்மையான, நம்பிக்கையான முறையில் ஆலொசனைகளை பெறலாம்.
**(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).**

FLEX Graphic

ஐரோப்பிய 25 நாடுகளில் (SENAGON COUNTRY) 5 வருட அல்லது 2வருடத்திற்கான வதிவிட விசா (RESIDENT VISA) தனியாக அல்லது முழுக்குடும்பத்துடன் குறுகிய காலத்திற்குள் செல்வதற்கு விசா பெற்றுக்கொள்வதற்கான உதவிகள் செய்து தரப்படும்.

SKYWALK Visa Solutions

## ஸ்கைவோர்க் வீசா சொலூஷன்

No.65, 1/1, Galle Road, Dehiwala (Food City 1st Floor)

**07777 11905**

(சி/4359)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துமீறி இடம்பெறும் மீன்பிடியை தடுக்க இலங்கையும் இந்தியாவும் இணையவேண்டும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



(கொழும்பு)

**பாக்குநீரிணை கடற்பரப்பில் அத்துமீறி இடம்பெறும் மீன்பிடி யைத் தடுப்பதற்கு இலங்கையும் இந்தியாவும் இணைந்து கண்காணிப்பு பொறிமுறையொன்றை உருவாக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாக கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் கலாநிதி ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.**

இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் சம்பவங்கள் அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ளன. இவ்வாறு நுழைபவர்களைத் தடுப்பதற்கு இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் இந்திய கடலோர பாதுகாப்பு பிரிவினருடன் இணைந்து கண்காணிப்புப் பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்த வேண்டியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ் விடயத்தில் இலங்கை அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தியிருப்பதாக தெரிவித்திருக்கும் அமைச்சர் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீன்வர்கள் 265 பேர் கடந்த எட்டு மாதங்களுள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் கூறினார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 118 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அத்துமீறி நுழையும் மீனவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால், சிறைகளில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதுடன், கடல் வளங்களும் சூறையாடப்படுகின்றன. இவற்றைத் தடுப்பது தொடர்பில் கடற்படைத் தளபதியுடனும் தான் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கை மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையை மீறி செல்வதைத் தடுப்பதற்கு தாம் கடும் நடவடிக்கை எடுத்துள்ளதால் கடந்த காலங்களில் இலங்கை மீனவர்கள் எவரும் இந்திய கடலோரப் பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்படவில்லை என்றும் கூறினார்.

இலங்கை- இந்திய கடற்பரப்பில் அத்துமீறி இடம்பெறும் மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுப்பது தொடர்பிலான கலந்துரையாடல்களை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நடத்தவேண்டுமென இந்திய- இலங்கை இணைந்த கூட்டு செயலணிக்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர், இதுவரை ஒரு சந்திப்பும் இடம்பெறவில்லை. இவ்விடயத்தில் இந்தியா அக்கறை செலுத்தவில்லை.

கடந்த மாதம் புதுடில்லியில் இணைந்த கூட்டுச் செயலணியின் கூட்டத்தை நடத்துவதாக அறிவிக்கப்பட்ட போதும், இந்திய அரசாங்கம் இதில் அக்கறை செலுத்தவில்லையென்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவதைத் தடுக்குமாறு இந்திய அரசாங்கத்திடம் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும், அவர்களிடமிருந்து இதுவரை எந்தவிதமான சாதகமான பதில்களும் கிடைக்கவில்லையென்றும் அவர் தெரிவித்தார். (அ-2)







மானிப்பாய் சிற்றி லயன்ஸ் கழக இரத்ததான முகாம் நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது இளைஞர்கள் இரத்ததானம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மானிப்பாய் சிற்றி லயன்ஸ் கழகத்தினரையும் படங்களில் காணலாம்.

## அனல்மின் நிலையம்

(கொழும்பு)

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் செயற்பாடுகள் மூன்று வாரங்களுக்கு நிறுத்தி வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் நுரைச் சோலை அனல்மின் நிலையம் மூன்று வாரங்கள் மூடப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அனல்மின் நிலையத்தை 2 ஆம் கட்டத்துடன் இணைக்கும் நோக்கில் பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தல் நடவடிக்கைகள் இடம் பெறவுள்ளதாக இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது. (அ-2)

## இந்தோ.படகு விபத்தில் பலியான இலங்கையர்கள் விபரம் அறிவிப்பு

(கொழும்பு)

இந்தோனேசிய படகு விபத்தில் உயிரிழந்த இலங்கையர்களின் விபரங்களை இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இறந்தவர்களின் உறவினர்களைக் கண்டறிவதற்கு பொதுமக்களின் உதவியை வெளிவிவகார அமைச்சு கோரியுள்ளது.

இவ்விபத்தில் உயிரிழந்த யாழ்ப்பாணம் சுன்னாகத்தைச் சேர்ந்த அல்பிரட்பன்ங் அன் செலானின் சடலம் அவரின் உறிவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

திவ்யா (ஒன்றரை வயது), றொனால்ட் (33 வயது), இன்ஜா (7 வயது), டனிசன் (5 வயது) ஆகியோரது சடலங்கள் கிடைக்கப் பெற்றிருப்பதுடன், இவர்களது உறவினர்கள் உடனடியாக வெளிவிவகார அமைச்சுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

20 வயதுடைய பெண் ஒருவரின் சடலம் இன்னமும் அடையாளம் காணப்படவில்லையென வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு கொன்சியூலர் பிரிவு இல. 14, சார்பாரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 1 என்ற முகவரிக்கோ அல்லது 0112437635 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது 0112473899 என்ற தொலைநகல் இலக்கத்துடனோ அல்லது consular@sltnet.lk என்ற மின்னஞ்சல் ஊடாகவோ விபரங்களை அறிந்து கொள்ளமுடியுமென்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவின் மேற்கு ஜவாகி சியான்ஜர் கடற்பரப்பில் கடந்த ஜூலை 23 ஆம் திகதி இடம்பெற்ற படகு விபத்தில் உயிரிழந்தவர்களுள் இலங்கையர் என்று சந்தேகிக்கப்படுபவர்களின் விபரங்களையே வெளிவிவகார அமைச்சு இவ்வாறு வெளியிட்டுள்ளது. (அ-2)

### 2014 வரவு செலவு திட்டத்தில்

## தொழில் முயற்சியாளர்களின் கருத்துக்களைப்பெற ஆலோசனை

(கொழும்பு)

2014 வரவு செலவுத் திட்டம் தயாரிப்பதற்கென தனியார் தொழில் முயற்சியாளர்களின் கருத்துக்களையும் யோசனைகளையும் பெற்றுக் கொள்வது தொடர்பான பேச்சுவார்த்தையொன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரிமாளிகையில் நடைபெற்றது.

விவசாயம், கால்நடை, நகை, மாணிக்கக்கல், அலங்காரப் பொருட்கள், ஒப்பனை அடங்கலான பல்வேறு துறைகளுடன் தொடர்புடையவர்கள் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர். துரித பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்படும் 2014 வரவு செலவுத்திட்டத்திற்காக இதன்போது ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

நாட்டில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு வீதிகள் அடங்கலான உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ள நிலையில், தமது கைத்தொழில்களை இலகுவாக மேற்கொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்ட தனியார் தொழில் முயற்சியாளர்கள், நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்கு தாம் முழு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் குறிப்பிட்டனர். தமது துறையுடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்தும் அவர்கள் ஜனாதிபதிக்கு அறிவித்தனர்.

உள்நாட்டு உற்பத்திகளை மேம்படுத்தி உள்நாட்டு கைத்தொழிலாளர்களை பாதுகாக்கும் கொள்கையினடிப்படையிலேயே அரசாங்கம் சகல முடிவுகளையும் எடுப்பதாக ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு முன்னர் அரசாங்கம் சகல தரப்பினரதும் கருத்துக்களையும் யோசனைகளையும் பெற்று வருவதோடு எதிர்காலத்தில் மேலும் பலதுறையினரை ஜனாதிபதி சந்தித்து பேசவுமுள்ளதாக ஜனாதிபதி செயலகம் கூறியது. இந்த சந்திப்பில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ உட்பட பல அமைச்சர்கள் பங்கேற்றனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆயிரத்து 300 மில்லியன் ரூபா செலவில் சுன்னாகத்தில் உப மின்நிலையம்

## மின்சக்தி அமைச்சர் பவித்ரா

(கொழும்பு)

**வடபகுதிக்கு எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் முழுமையாக மின்சார வசதி அளிக்கப்படவுள்ளதாக இலங்கையின் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்டத்திற்கு தடையின்றி சீராக மின்சாரம் வழங்குவதற்காக 3 ஆயிரத்து 300 மில்லியன் ரூபா செலவில் சுன்னாகத்தில் உபமின் நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செப்டெம்பர் மாதம் இதனைத் திறந்து வைக்கவுள்ளதாகவும் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் வரை ஒரு இலட்சத்து 32 ஆயிரம் வோல்ட் கொண்ட அதி உயர் மின் அழுத்த மின் விநியோக மார்க்கம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு, ஏற்கனவே வழங்கப்படும் மின் விநியோகம் அதி உயர் அழுத்த மின்சாரத்தை கொண்டதாக மாற்றப்படவுமுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் புதிய மின்விநியோக மார்க்கத்தினூடாக பரீட்சார்த்தமான மின்சாரம் வழங்கப்பட்டதாகவும் மின்சக்தி எரிசக்தி அமைச்சு கூறியது.



இதேவேளை, யுத்தம் காரணமாக வடக்கின் அநேக பகுதிகளின் மின் விநியோக கட்டமைப்பு முழுமையாக சேதமடைந்திருந்தது. தற்போது மின்சாரத்தை முன் எப்பொழுதும் கண்டிராத பல பகுதிகளுக்கு புதிதாக மின்சார வசதி அளிக்கப்பட்டுவருகிறது. யுத்தம் முடிவடைந்த பின் முதலில் அநுராதபுரத்திலிருந்து.வவுனியா வரை மின்விநியோக மார்க்கம் அமைக்கப்பட்டது.

தற்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ள சகல நகரங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்பவற்றுக்கு 100 வீதம் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ், கிளிநொச்சி பகுதிக்கு 67 வீதமும் யாழ். மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு தலா 90 வீதமும் மன்னார் மாவட்டத்திற்கு 80 வீதமும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 50 வீதமும் மின்சார வசதிகள் வழங்கப்பட்டுள்ளன என்றார். (அ-2)

## பேருந்துக் கட்டணத்தை
# அரசாங்கத்தின் அனுமதியின்றி அதிகரிக்க முடியாது- அமிலா

(கொழும்பு)

அரசாங்கத்தின் அனுமதியின்றி எவரும் பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்கமுடியாது. பேருந்துக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கமே முடிவெடுக்க வேண்டும் என மேல் மாகாண போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் அமிலா ரணமண்டல தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அனுமதியின்றி செப்டெம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து பேருந்து கட்டணங்களை உயர்த்தப் போவதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் அறிவித் திருந்தமைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பற்றி தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவும் கடந்த வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொண்டன.

இதன்போதே அவர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கெமுனு விஜேரட்ன நினைத் தால் மட்டும் பேருந்து கட்டணத்தை கூட்டவோ, குறைக்கவோ முடியாது. அவரின் சொந்த பேருந்து கட்டணத்தை கூட அவரால் அதிகரிக்க முடியாது.

இதுதொடர்பாக அரசாங்கமே முதலில் தீர்மானமெடுக்க வேண்டும். எவரும் தமது தனிப்பட்ட முடிவுகளினால் பொது மக்களை அசௌகரியப்ப டுத்த முடியாது.

அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பின்னர் பேருந்து கட்டணம் உயர்வு தொடர்பில் சகல மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். இதன் பின்னரே பஸ் கட்டண உயர்வு தொடர்பில் முடிவெடுக்கப்படும்.

இதைவிடுத்து தாம் நினைத்தபடி எவரும் பேருந்து கட்டண உயர்வினை செய்யமுடியாது என அவர் மேலும் குறிப்பிட்டார். (செ-2)

# மனிதாபிமான தினத்தை முன்னிட்டு இலங்கைக்கு பிரிட்டன் உதவி

(கொழும்பு)

இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை பிரித்தானியா வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


இதன்படி 2011 ஆம் ஆண்டு முதல் பிரித்தானியாவால், இலங்கைக்கு 20 மில்லியன் ஸ்ரெலிங் பவுண்ட் உதவி அளிக்கப்பட்டுள்ளது.

உலக மனிதாபிமான தினத்தை முன்னிட்டு இலங்கைக்கான பிரிட்டன் உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீன் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இயற்கை மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை பிரிட்டன் மனிதாபிமான அடிப்படையில் தொடர்ந்தும் வழங்கி வருவதாக தெரிவித்துள்ளார்.

போர் நிறைவடைந்துள்ள நிலையிலும் மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க வேண்டிய தேவை இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிலக்கண்ணி வெடி அகற்றுதல், இடம்பெயர் மக்கள் மீள் குடியேற்றம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு பிரிட்டன் தொடர்ந்தும் உதவிகளை வழங்கி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)



தேசிய மட்டத் தமிழ்த் தினப் போட்டியில் யா/ மூளாய் சைவப் பிரகாச வித்தியாலய மாணவி ஜீவராசா அபிராமி பிரிவு II கட்டுரைப் போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார். அதிபர் திருமதி சிவமலர் பாரதி, பொறுப் பாசிரியர் திருமதி எஸ். அற்புதமலர் ஆகியோருடன் மாணவி நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:- தும்பளைச் செய்தியாளர்)

# பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த 70 உறுப்பினர்கள் இலங்கை வருகை

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளும் அரச தலைவர்களின் ஏற்பாடுகள் குறித்து அறிந்து கொள்வதற்காக 15 இற்கும் அதிகமான பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த 70 உறுப்பினர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

பொதுநலவாய உச்சிமாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை வரவிருக்கும் அரச தலைவர்களின் ஏற்பாடுகளை அறிந்து கொள்வதற்காகவே குழுவொன்று தற்பொழுது இலங்கை வந்துள்ளது.

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற விருக்கும் நெலும் பொக்குன மஹிந்த ராஜ பக்ஷ கலையரங்கம், பிரதான மாநாடு நடை பெறவிருக்கும் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம், வோட்டேர்ஸ் எட்ஜ் உள்ளிட்ட இடங்களுக்குச் சென்று விழா ஏற்பாடுகளை இக்குழுவினர் பார்வையிடவுள்ளனர்.

அதேநேரம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், மத்தள மஹிந்த ராஜ பக்ஷ சர்வதேச விமான நிலையம் ஆகிய வற்றுக்குச் சென்று இக்குழுவினர் பயண ஏற்பாடுகளையும் அறிந்து கொள்ளவிருப்பதாக பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டுக்கான செயலகம் அறிவித்துள்ளது.

மூன்று நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு வந்துள்ள இக் குழுவினர் அரச தலைவர்கள் மாநாட்டுக்கு சமாந்தரமாக நடைபெறவிருக்கும் பொதுநலவாய இளைஞர்கள் பேரவை மற்றும் பொதுநலவாய வர்த்தக மாநாடு ஆகியவை நடைபெறவிருக்கும் இடங்களையும் நேரில் சென்று பார்வையிடவுள்ளனர். (அ-2)

## எதிர்க்கட்சி தலைவர் இந்தியாவுக்கு விஜயம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் அங்குஇந்திய அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வுள்ளார்.

எவ் விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்பது குறித்து அறிவிக்கப்படவில்லை. இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிசும் அடுத்த வாரம் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார். (அ-2)

# பழந்தமிழர் பற்றிய ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பிக்கலாம்

பழந்தமிழர் இயக்கத்தின் இரண்டாவது வருடாந்த மாநாட்டு எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

பழந்தமிழர் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் அதன் சாராம்சத்தையோ அல்லது அவ்வாய்வுக் கட்டுரையையோ எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக ம.வித்தியானந்தநேசன், (புள்ளி விபரவியலாளர்) நிறுவுநர், பழந்த மிழர் இயக்கம், இல: 7, கலைமகள் வீதி, அரியாலை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு நிறுவுநர் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள 0777642379 எனும் தொலைபேசி இலக்கத்துடனும் mvithiyananthanesan @ gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியுடனும் தொடர்பு கொள்ளலாம். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு புதுமை லட்சுமி அம்மன் கோயில்



ஆன்மீகம் 89

சித்திரா பௌர்ணமியன்று முறையான மூல மந்திரங்களைச் சொல்லி மனமுருகில் பூசை செய்தால் அந்த பத்மகமலத்திலிருந்து ஒரு தெய்வச்சுவடி வெளிப்படுமாம். அதில் கூறிய தேவ கட்டளைகளை சிரமேற்கொண்டு நடந்தால் இவனின் மானிட வாழ்வுக்கு விமோசனம் கிடைக்கும். தெய்வீக வாழ்வு அமையும். இந்த அருவியின் கீழ் பாலாம்பிகை தீர்த்தம் இருக்கிறது. இதன் அருகிலே அம்பாள் குகை இருக்கிறது. இந்த குகை ஒரு ஆள் குழந்தையைப் போல் தவழ்ந்து நுழையும் அளவுக்கே அமைந்திருக்கும். மிகவும் சிரமத்தோடு ஓரளவு தூரம் முன்னேறினோம். ஆனால் குகை மிகவும் நீண்டு சென்று கொண்டிருப்பதை உணர்ந்தோம். மேலும் செல்ல அச்சமாக இருந்தது. ஆதேலால், மேலும் இந்த வழி இன்னும் எவ்வளவு தூரம் போகிறது எனத் தெரிந்து கொள்ளும் ஆவலில் ஒரு பெரிய கற்பூரக் கட்டியை கொளுத்தி அந்த குகையில் உருட்டி விட்டோம். கற்பூரமும் எங்கள் ஆசையை பூர்த்தி செய்வதற்கு செல்வது போல, விரைந்து சென்று மறைந்தது. அடுத்த வினாடி குகையிலிருந்து ஆயிரக்கணக்கான வௌவால்கள் குகையின் உட்புறத்தினின்று வெளிப்பட்டு வழியில் தவழ்ந்து கொண்டிருந்த எங்களை உரசியவாறே வெளியேறின. இதை எதிர்பார்க்காத நாங்கள் அதிர்ச்சியில் உறைந்து போனோம். இந்த வௌவால்கள் சாதாரண உயிரினங்கள் அல்ல, அம்பாள் குகையில் தவமிருக்கும் சித்தர்கள் முனிவர்கள் என்பதை ஆசான் சொல்ல கேட்டு அக மகிழ்ந்தேன்.



ஸ்ரீல ஸ்ரீ தலையாட்டி சித்தருடன் காக புஜண்டர் நாடிரமணி குருஜி

அம்பாள் குகையில் இறங்கிய நாங்களும் எங்களுக்காக இடம் கொடுத்து வெளியேறிய, பெரியவர்கள் விட்டதவத்தை தொடர்ந்து மேற்கொண்டோம். தெய்வீக சூழ்நிலையால் ஆழ்நிலையில் உடனே நான் ஆழ்ந்து போனேன். ஆஹா என்ன ஆனந்தம்! என்ன ஆனந்தம்! வர்ணிக்க வார்த்தையே இல்லையே. கண்டவர் விண்டிலர் விணடவர் கண்டிலர், என்ற பழைய சொல்வழக்கின் உண்மைபொருள் எனக்கு அப்போது தான் விளங்கியது. கண்டோர்க்கு ஏற்படும் பேரானந்தம் அது கிடைக்கப்பெற்ற மனிதருக்கே உரிய அனுபவம். அதை அப்படியே விளக்கமாக சொல்ல அவர் முயன்றால் கேட்பவருக்கு புரியாது. சர்க்கரை இனிக்கும், வேம்பு கசக்கும், பாக்கு துவர்க்கும், எலுமிச்சை புளிக்கும் என்பதெல்லாம் எல்லா மாந்தரும் உணர்ந்த பொதுருசிகள். ஆனால், இந்த ஞான தெய்வீக ருசிகள் அப்படியன்று. இது அவரவர் அனுபவித்தால் தான் உணர முடியும். ஒருவன் தன்னுள்ளே உணர்ந்திருப்பவனை, அவன் தானே உணர முடியும். காணமுடியும். அப்படியே அவன் சொன்னாலும், இவன் கதை அளக்கிறான் என்று நம்பமாட்டார்கள். இதனால்தான் கண்டவர் விண்டதில்லை என்று கூறினார்கள்.

தொடரும்

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# தமிழ் தனி ஈழ அரசு என்ற தீர்வுக்கு மாற்று...?

வரலாற்றுக் காலம்தொட்டு இலங்கைத்தீவின் வடக்கு-கிழக்கு நிலப்பரப்பு என்பது தமிழர்களின் தாயகமாக தமிழீழம் என்ற பெயரில் இருந்து வருகிறது என்பதை சிங்கள கட்சிகளில் எந்த ஒன்றாலும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதில்லை. அது ஐக்கிய தேசிய கட்சியினாலும், சுதந்திர கட்சியினாலும் ஜனதா விமுக்தி பெரமுனா கட்சியினாலும் அல்லது சிங்கள மக்களிடம் வாக்குகள் பெறும் எந்த கட்சியாயினும் அதன் நிலைப்பாடு என்பது இதுதான். இது, சிங்களவர்களின் அரசியல் நிலைப்பாட்டை தெரிவிக்கும் ஒரு அடிப்படையான உண்மை. (ஆனால் சிங்களவரின் தாயகத்தை தமழிழர் தரப்பு ஒப்புக்கொள்கிறது என்பதும் சிங்களவரின் அத்தாயக நிலப்பரப்பில் எதன் மீதும் தமிழர் தரப்பு உரிமை கோரவில்லை என்பதும் இங்கு ஈண்டு இணைத்துப் பார்க்கத்தக்கது.) இவ்வாறு தமிழர் தாயகத்தை சிங்கள தரப்பு ஏற்றுக்கொள்ள மறுப்பதுதான், தமிழர்- சிங்களவர் தரப்பினரிடையே எந்த தீர்வையும்கண்டடைய முடியாமைக்கான முட்டுக்கட்டையாக இருந்துவரும் முழுமுதற் காரணமாகும்.



எந்தவொரு கூட்டாட்சி நாட்டிலும் அங்கம் வகிக்கும் மாநிலங்கள் என்பன, அந்நாட்டில் உள்ள மக்கள் கூட்டத்தாரின் தாயகத்தை ஏற்றுக்கொள்ளும் பொழுது, அங்கு அமையும் அவர்களின் அரசினை ஏற்றுக்கொள்ளுதல் என்பது இயல்பானது. சிங்களவர்களோ அல்லது சிங்கள அரசியல் கட்சிகளோ அவ்வாறு தமிழர்களின் தாயகத்தை ஏற்றுக்கொள்ள முன்வருதல் என்பது இந்த 60 ஆண்டுகளில் நிகழ்ந்துள்ளதா என்பதுதான் கேள்வி. இல்லை என்ற பதில், அரசியல், அரசியல் தீர்விற்கு யார் உடன்பட மறுத்து வருகின்றனர் என்ற கேள்விகான பதிலாகவும் அமைகின்றது.

இலங்கை அரசின் கருத்தாளர்களில் முக்கிய நபரான ரோகண குணரத்னா, இலங்கை அரசு தமிழர்களுடனான பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில்; இறைமைப் பகிர்வை ஏற்றுக்கொண்ட தீர்விற்கு ஒருபோதும் சம்மதிக்கக் கூடாது என்று சமீபத்தில் குறிப்பிட்டுள்ளது கவனத்திற்குரியது. இந்நபரின் கட்டுரைகளைத்தான் இந்து குழுமத்தால் வெளியிடப்படும் ஃபிரண்ட் லைன் என்ற ஆங்கில இருவாரஏடு அவ்வப்பொழுது ஏந்திவருகிறது

இத்துடன், இலங்கைத்தீவில் தமிழர்கள் ஒரு சிறுபான்மையினராக வாழ மட்டுமே தங்களால் அனுமதிக்க முடியும் என்று ஈழப் போரின் முடிவின்போது, சிங்கள ராணுவத் தளபதி சரத்பொன்சேகா அறிவித்ததும் இணைத்துப் பார்க்கத்தக்கது. அதன்பொருள், ஈழத்தமிழர்களின் தாயகத்தை அங்கீகரித்து அவர்களது அரசியல், பொருளாதார, பண்பாட்டு உரிமைகள் கொண்ட மற்றொரு தேசிய இனமாக தமிழர்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதாகும். மாறாக, அவர்களை தாயகம் இல்லாத சிறுபான்மை மக்கள் கூட்டத்தினராக அறிவிப்பதாகும். அதனையேதான் வேறு மொழியில் முழுதீவும் இலங்கையர் அனைவருக்கும் உரியது என்று மஹிந்த ராஜபக்ச கூறுவது. இதன் பொருள் என்ன? முழு தீவும் சிங்களவரின் ஆதிக்கத்திற்குட்பட்டது என்பதாகும். இந்த அரசியல் ஆதிக்க உரிமையில் எந்த பகிர்வுக்கும் தாங்கள் முன் வரமாட்டோம் என்று அறிவிப்பதாகும்.

ஆனால், இந்தபோக்கு கொண்ட சிங்களத்தவரால் முழுமையாக ஆதிக்கம் செய்யப்பட்டுவரும் இலங்கை அரசு, ஈழத்தழிழர்களுடன் ஒரு கூட்டாட்சி தீர்வுக்கு எப்பொழுதும் தயாராக இருந்து வருவதாக காட்டுவதுதான் இந்திய தரப்பின் நோக்கம். இதனை இந்திய அரசு, இந்திய கட்சிகள் மற்றும் இந்திய ஊடகங்கள் இன்றுவரை சிறப்பாகவே செய்து வருகின்றன. இந்த கருத்து பரப்பல் வேலையில் முதன்மை பணியினை இந்து ஏடும் அதன் குழுமத்தினைச் சார்ந்த மற்ற ஏடுகளும் தொடர்ந்து இன்றுவரை முழுவீச்சில் நடத்தி வருகின்றன.

இவ்விடத்தில் இந்தியாவின் கூட்டாட்சி அரசியலமைப்ப முறை செயல்பட்டுவருவது குறித்து புரிந்து கொள்வது தேவைப்படுகிறது. தங்களைத்தாங்களே பாராட்டிக் கொள்வது போன்று, இந்திய கட்சிகளும், இந்திய ஊடகங்களும் இந்தியாவின் கூட்டாட்சி குறித்து பெருமைப்பட்டுக் கொள்கின்றன. இங்கு அனைத்து இனத்தாரின் நலன்களும் உறுதிசெய்யப்பட்டிருப்பதாகவும் அதன் மூலம் மக்களாட்சி முறை சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் தொடர்ந்து பாராட்டு பத்திரங்களை வாசித்துக் கொள்கின்றன. ஆனால், இந்தியாவின் பல மாநிலங்களிலும் பல இனத்தார்கள் தொடர்ந்து நடத்திவரும் போராட்டங்கள் இந்திய கூட்டாட்சி முறை செயல்படுவதன் லட்சணத்தை காட்டுகின்றன.

தொடரும்

ஆய்வாளர் சு. அருணாச்சலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

549

## ஆற்றின் வஞ்சகம்



"ஏ! வஞ்சக ஆறே! எங்களில் யாரை விழுங்கினாய்? விழுங்கியவனை மீண்டும் தந்துவிடு. இல்லையேல் தண்ணீர் இல்லாமல் நீ வறண்டு போவாய். ஏ! பாவி ஆறே! விழுங்கியவனைத் தந்துவிடு" என்று புலம்பினார். சீடர்களும் அவருடன் சேர்ந்து அழுது புலம்பினார்கள். "குருவே! இந்த ஆறு வஞ்சகமான ஆறு. தூங்குவதுபோல் நடித்து இருக்கிறது. நாமும் இதன் நடிப்பில் ஏமாந்து விட்டோம். சூழ்ச்சி செய்து நம்மில் ஒருவனை விழுங்கிவிட்டது" என்று அழுதான் பேதை.

"ஆற்றின் சூழ்ச்சியை அறிந்த உன் தந்தையே ஏமாந்தாரா? அவர் எப்படி ஏமாந்தார்? விளக்கமாகச் சொல் என்று பரபரப்புடன்" கேட்டார் குரு. "குருவே! என் தந்தை உப்பு வணிகம் செய்து வந்தார். அவரிடம் கழுதை ஒன்று இருந்தது. அதன் மீது உப்பு மூட்டையை ஏற்றினார். அதை ஓட்டிக்கொண்டு ஒவ்வொரு ஊராகச் செல்வார். உப்பை விற்றுவிட்டுத் திரும்புவார்.

ஒருநாள் அவர் சாக்குமூட்டை ஒன்றை எடுத்தார். அந்த மூட்டையில் எங்கும் ஓட்டை இல்லை. நன்றாகத் தைக்கப்பட்டு இருந்தது. அந்த மூட்டைநிறைய உப்பைக் கொட்டினார். அதை நன்றாகக் கட்டினார். அந்த மூட்டையை கழுதையின் முதுகில் ஏற்றினார். கழுதையை ஓட்டிக்கொண்டு புறப்பட்டார். நல்ல வெயில் அடித்துக் கொண்டு இருந்தது. அவர் உடலெங்கும் வியர்வை வழிந்தது.

வழியில் ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. அதில் இடுப்பளவு தண்ணீர் இருந்தது. கழுன்தயை ஓட்டிக்கொண்டு ஆற்றில் இறங்கினார். சிறிது தொலைவு சென்றார். ஆற்றில் நீராடினால் வெயிலுக்கு இதமாக இருக்கும் என்று நினைத்தார். அங்கேயே மூழ்கி நீராடினார். கழுதையும் ஆற்றில் விழுந்து புரண்டது. நீண்டநேரம் அவரும் கழுதையும் தண்ணீரிலேயே கிடந்தார்கள். மாலைநேரம் வந்தது. கழுதையை எழுப்பினார் அவர். அதுவும் தண்ணீருக்குள் எழுந்தது. அதன் முதுகில் காலிச் சாக்குத்தான் இருந்தது. அதற்குள் சிறிதும் உப்பு இல்லை. இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார் அவர். அந்த மூட்டையில் ஏதேனும் ஓட்டை உள்ளதா என்று பார்த்தார். ஓட்டை ஏதும் இல்லை.

"ஏ! ஆறே! நான் உனக்கு என்ன தீங்கு செய்தேன்? என் வாழ்க்கையில் மண்ணை அள்ளிப்போட்டு விட்டாயே. தோலிருக்க சுளையை விழுங்கியதுபோல் என்பார்களே. அதுபோல சாக்கிருக்க உப்பை எல்லாம் திருடி விட்டாயே. நான் இனி என்ன செய்வேன்?" என்று அழுது புலம்பினார். புலம்பியபடியே கழுதையுடன் கரையேறினார்.

அங்கு வந்த ஒருவர், "ஏன் அழுது புலம்புகிறீர்கள்? என்று கேட்டார். நடந்ததை எல்லாம் சொன்னார் என்

### பரமார்த்தகுரு கதைகள்

தந்தை. அதற்கு அவர், உப்பைத் தின்ற ஆறு உம்மையும் கழுதையையும் விழுங்காமல் விட்டதே. நல்ல காலம் என்று நினைத்து மகிழ்ச்சியுடன் வீடு செல்லும்" என்றார். உப்பை இழந்த வருத்தத்தில் வீடு வந்தார் என் தந்தை. என்னிடம் நடந்ததை எல்லாம் சொன்னார்.


"மகனே! மட்டி! ஆறுகள் அனைத்தும் சூழ்ச்சி நிறைந்தவை. அவற்றின் சூழ்ச்சியை யாராலும் அறிய முடியாது. எப்படிப்பட்டவரையும் அது ஏமாற்றிவிடும். ஆற்றைக் கடக்கும் போது கவனமாக நடந்து கொள் என்று அறிவுரை சொன்னார்" என்றான்.

"மட்டி! இதை ஏன் முன்னரே சொல்லவில்லை. சொல்லி இருந்தால் நாம் கவனமாக இருந்து இருக்கலாமே. நம்மில் ஒருவனை ஆறு விழுங்கி இருக்காதே என்று வருத்தத்துடன் சொன்னார் குரு.

"குருவே! எல்லாம் அறிந்தவர் நீங்கள். உங்களுக்குத் தெரியாதது ஏதும் இல்லை. நான் ஏதாவது பேசினால் அதிக பிரசங்கித்தன மாக இருக்கும். அதனால்தான் ஏதும் பேசாமல் அமைதியாக இருந்தேன்" என்றான் மட்டி.

"நீ சொல்வதும் உண்மைதான் என்று வருத்தத்துடன்" சொன்னார் அவர். ஆற்றங்கரையில் அவரும் சீடர்களும் அழுதுகொண்டு இருந்தார்கள். பொழுது புலரத் தொடங்கியது. அப்பொழுது குதிரையில் ஒருவன் வேகமாக வந்தான். அவர்கள் கண் எதிரிலேயே ஆற்றைக் கடந்து சென்றான். இதைச் சீடர்களும் குருவும் பார்த்தார்கள்.

அங்கிருந்த பேதை, "ஆ! இப்படிப்பட்ட குதிரை நம் குருவிடம் இல்லையே. இருந்திருந்தால் ஆற்றை எளிதாகக் கடந்திருக்கலாமே. நம்மில் ஒருவரை இழந்திருக்க வேண்டாமே" என்று புலம்பினான்.



"ஆமாம். குதிரை இருந்திருந்தால் இந்த இழப்பு வந்திருக்காது. நாம் எல்லோரும் பிழைத்து இருப்போம் என்று அவர்கள் புலம்பிக் கொண்டு இருந்தார்கள்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஏழைகள் எங்களை படைக்காது நிறுத்திவிடு

பிறப்பிலோ சமனிலை
பிழைப்பிலோ ஏழ்மை நிலை
காலை என்று வந்து விட்டால்
கை எந்தி கால்கடுக்க
காத்து நிற்பு
சுட்டெரிக்கும் வெயிலிலே
துடிதுடிக்க பல்லிழிப்பு
கையேந்தும் எங்கள் நிலை
காண்பவர்க்கெல்லாம்
எள்ளி நகைப்பு
மாலை என்று
வந்துவிட்டால்
மரத்தடியில்
வீற்றிருப்பு
இரவைக் கழிப்பதற்கு
இமைமூடா காத்திருப்பு
ஆடை அலங்கோலம்
நாம் படும் அவலங்களோ
ஏராளமையா
பணம் படைத்த
மனிதர்களை
படைக்கின்ற இறைவா
வறுமை புகையை சுவாசித்து
கூழைக்குடித்து
நாளைக் கழிக்கும்
ஏழைகள் எங்களை
படைக்காது நிறுத்திவிடு

சி.கலாமணி
மண்டைதீவு

## நரக நாகரிகம்

தெருவுக்கு தெரு
வெட்டு, இரத்தம், கொலை
வேலிக்கு வேலி
வெடித்து சிதறும் பகை மொழி
கிரகங்கள் கண்ட மனிதன்
மீண்டும் பாழும்
கிணறுகளுக்குள்ளே வீழ்கிறான்
வறியவனுக்கு
வயிற்றுப்பிரச்சினை
வசதியானவனுக்கு
வருமான வரிப்பிரச்சினை
நாட்டுக்கு நாடு
மட்டுமல்ல
வீட்டுக்கு வீடு எதிராகவே
அணு ஆயுதம் ஏவும்
அவசர பகைமை அடைந்துள்ளது
இவர்களுக்கிடையில்
முறைதவறிய உறவுகளில்
தலை திரம்பிய சாராய
போதைகளில்
பணம் திரம்பிய மனிதர்
வாழ்க்கையில்தான்
வக்கிரமும் வன்முறையும்
நாற்காலி போட்டு
அமர்ந்திருக்கிறது
மனிதனே
மனிதத்தைக் காப்பாற்று
பகுத்தறிவு தொலைத்த
ரகுலாக்களின்
முகமூடிகளை கழற்றி
சாக்கடையில் வீசு

எம்.நேதா, நெடுந்தீவு

## வரம் ஒன்று கேட்கின்றேன்

உடல் தந்தாய்
உயிர் தந்தாய்
உயிர்வாழ
உதிரம் தந்தாய்
உன் பசி மறந்தாய்
என் பசி போக்க
உன் நலன் மறந்தாய்
என் நலனுக்காய்
உயர்ந்த வாழ்வுக்காய்
ஒளிதந்தாய்
அன்பை தந்தாய்
அறிவைத் தந்தாய்
அகிலத்தில் நான் வாழ
அனைத்தும் தந்த தாயே
உன் உயிரை
மீட்க முடியாத
பாவியானேன்
விற்கும் பொருள் என்றால்
உன் உயிரை
விலை கொடுத்து
வாங்கிவிடுவேன்
அது முடியாத காரியமே
உன் மகளாய்
நான் பிறக்க
வரம் ஒன்று
கேட்கின்றேன்

கலாநாதன்,
வவுனியா

## தம்பியுடையான்...



தம்பி எழுந்தான்
இரக்கமில்லாமலே- தன்
தந்தையின் பணத்தை
இலகுவாய் எடுத்துக்கொண்டு
இயல்பாய் நடக்கின்றான்
தியேட்டர் வாசலுக்கு
தலைவா தலைவா என
கூச்சலிட்டபடி
பள்ளியில் கற்ற கலை
பாண்ட் வாத்திய வித்தைதனை
வீதியில் காட்டுகிறான்
வீரம்மிக்க இனம்
வீரியமிழந்து போவதறியாமல்

மாவை. நா. கஜேந்திரன்


## சேமிப்பு

பல்தேசிய தாராளவாத
கோலமயமாக்கல் யுகத்திலே
நுகர்வுக் கலாசாரமே
பரவியுள்ளது செகத்தில்
என் எதிர்கால
பன்முக வாழ்வுக்காக
அன்புள்ளம் கொண்டவர்களே...
எனக்காக சேமியுங்கள்
தேசிய சேமிப்பு வறட்சி
பேசிய வார்த்தைதான் இது...
நடுத்தர ஏழை மக்களின்
நுகர்விலிருந்து தூண்டுகின்றது
சேமிப்பை நோக்கி
உலக வங்கி சர்வதேச நிதியத்தின்
கலக நிதிச் சூழலிலிருந்து
மீள எனக்காக சேமியுங்கள்
உழைக்கும் போதே சேமிப்பதால்
தழைக்கும் நல்வாழ்வு...
சேமிப்பு தழைத்தால்...
பூமியில் வங்கி வளம்கூடும்
வங்கி வளர்ந்தால்
நாடு செழிக்கும்...
நாடு செழித்தால்
நாமெல்லாம் வாழலாம்

புத்தூர் கு.குகன்

# கவிதைக் கலசம்

# மௌனத்தின் தேடல் - 167



## யாசகம்

கையேந்தும் அன்னை
வீதியோரத்தில்
இவர் துயர் துடைக்க
யார் வருவார் அருகோரத்தில்
வளம் படைத்த இப்பூமிதனில்
இன்றுமுளர் ஏழைபலர்
இந்நிலை என்று மாறிடுமோ
ஏழை வாழ்வுதனில்

ரி.விஜிதா
மயிலிட்டி

## இது விதியா?

எத்தனை பேருக்கு
அமுதளித்து அரவணைத்து
அன்பு காட்டிய தாயின்று
ஒருகை ஊனமுற்றுச்
செயலற்றுக் கிடக்க
யாருமற்ற நிலையில்
கையேந்திப் பிச்சையெடுக்கின்றாள்
இது விதியா அன்றிச் சதியா?

துரை
தென்மட்டுவில்

## சொல்லம்மா உன் சோகத்தை

ஏனம்மா கைநீட்டி
யாசகம் கேட்கின்றாய்...
தாலி கட்டியவன் தவிக்க விட்டானா?
சோலியென்று உன் பிள்ளைகள்
காலைத்தான் வாரி விட்டார்களா?
சொல்லம்மா உன் சோகத்தை...
காட்டிலிறைத்த நிலவாயுன்
தியாகங்கள் கரைவது கண்டு
கல்மனமும் மெள்ளக்
கலங்குதிங்கே

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

## கருணை காட்டுங்கள்

உரல் பிடித்தாலும்
உழைத்து வாழலாம்
விரல்களைக் கொடியபோர்
பறித்து விட்டதே
வரம் கேட்கலாமென்றால்
இறைவனும் எதற்காகவோ
மறத்துப்போய்விட்டார்
துரத்தும் ஊழ்வினையால்
தவிக்கும் மூதாட்டிக்கு
மரணத்தை வெல்ல
கருணை காட்டுங்கள்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## ஏன்?

கருவில் சுமந்தது
தெருவில் விட்டதா
கைபிடித்த கணவன்
கைவிட்டுப் போனதாலோ
கைகொடுப்பார்
யாருமின்றி
தன்கையே தனக்குதவி
என்றதாலோ- தாயே

இணுவில் வாகீசன்

## அவலம்

வெளிநாட்டில் மகனோ
முதியோர் இல்லம் சென்று
அன்னதானம் வழங்கி
அன்னையர் தினம்
கொண்டாடுகின்றான்

ம.சுமதி, வதிரி

## எதைக்கேட்கிறீர்கள்?

வயோதிபமே! எதைக்கேட்கிறீர்கள்
கண்ணை இமை காப்பது போலக் காத்து
வளர்த்த உங்கள் பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள் எங்கே?
நீங்கள் பிச்சையா கேட்கிறீர்கள்
வயோதிபமே உங்களை வாட்டுகின்றதா?
எதைக்கேட்கின்றீர்கள் பணமா? பாசமா?

## ஏன் இந்த நிலைமை?

பெத்த மனம் பித்து
பிள்ளை மனம் கல்லு
என்பதற்கு எடுத்துக்காட்டாய்
இன்று ஆளாகிவிட்டாய்
தாயே, நீதானே

சி.தீட்சாயினி
முள்ளியவளை

## ஒரு தாயின் வலி

கையிலே விரல் இல்லை
கைகொடுக்க யாருமில்லை
பெற்றதோ ஆறு பிள்ளை
கடைசியில்
கொள்ளி போடவோ
நாதியில்லை

எம்.பிரதீபன்
திக்கம்

## குடியிருந்த கோயில்

பிள்ளைகள் பல பெற்று
தாயான அம்மா மூதாட்டியே!
அம்மா பிச்சையென
தெருவில் கையேந்த
நீ பெற்ற பிள்ளைகள்
வீதியில் விட்டனரோ!
அன்னை என்பது
குடியிருந்த கோயில்!
அலைய விடுவது
ஆகவே ஆகாது

க.முத்துராசா
கட்டைக்காடு

## சேதி கேளீர்

தாயே உன் விதி நடுவீதி எனின்
ஏதிலிப் பெண்ணே
ஏழ்மையின் சுவடா நீ?
ஓ மாந்தரே! ஓர் சேதி கேளீர்
ஏழ்மையின் எடுகோளாய்
இன்னொரு நிழற்படம்
உங்கள் பார்வைக்காய்

க.ஞானசிலன்
கொற்றாவத்தை

## இடிப்பின் கொடுமை

அம்மா உன் பிள்ளைகள்
உயிருடன் இருந்திருந்தால்
நீ அவர்கள் உயிர்
இரங்கும் மனங்கள்
இரை தேடிச்செல்ல
உன் மனம் இன்னல் அடைகின்றது
எதை நீ கொண்டு வந்தாய்
கொண்டு செல்வதற்கு
இத்தாய்க்கு செல்வத்தை அளி
நீ செல்வந்தனாய் வாழ்

க.கபில்ஸ்ரன்

## அன்னைக்கு அன்னமிடு

கோடியாய் பணம் திரட்டி
கோபுரங்கள் பல கட்டி
ஆண்டவனை அழகுபார்க்கும்
அர்ப்பத்தனம் வேண்டாம்
ஆதாரம் ஏதுமின்றி
அந்தரித்து நடுத்தெருவில்
இரையினை இரக்கும்
அன்னைக்கு அன்னமிடு
அதுபோதும்

இணுவை சுகந்தி

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் - 168



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 22.08.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 47 அரச சார்பற்ற நிறுவனங்கள் நவநீதம்பிள்ளைக்கு அவசர மகஜர்

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு 47 அரசசார்பற்ற நிறுவனங்கள் அவசர மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளன.**

முன்னாள் புலி உறுப்பினர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களை நேரில் சென்று பார்வையிடுமாறும் நவநீதம்பிள்ளையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதோடு மேலும் வடக்கு மக்களைத் தனிப்பட்ட ரீதியில் சந்தித்து விசாரணை நடத்துமாறும் நீதிமன்ற அறிக்கை, பொலிஸ் அறிக்கை மற்றும் அரசாங்கத்தின் இரகசிய ஆவணங்களைப் பார்வையிடுமாறும் அதில் கோரியுள்ளனர்.

வடக்கு விஜயத்தின்போது இலங்கை இராணுவத்தினதோ அல்லது பொலிஸாரினதோ உதவியைப் பெற்றுக்கொள்ளக்கூடாது எனவும் தெரிவித்துள்ளனர்.

பாரிய குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 800 புலிச்சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த மகஜரை அனுப்பி வைத்த நபர் சிங்கப்பூரிலிருந்து செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நவநீதம்பிள்ளை முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவையும் சந்திக்கவுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் குற்றப் பிரேரணை ஒன்றின் மூலம் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பணி நீக்கப்பட்டிருந்தார்.

பணி நீக்கம் செய்யப்பட்டதன் பின்னர் சர்வதேச பிரதிநிதி ஒருவரை ஷிராணி பண்டாரநாயக்க சந்திக்கும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இதற்கு முன்னர் சர்வதேச நீதவான்கள் சங்க அமர்வில் ஸ்கைப் தொழில்நுட்பம் மூலம் இவர்கள் இருவரும் உரையாற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் இறுதி நேரத்தில் தொழில்நுட்ப பிரச்சினைகள் கார ணமாக இந்த முயற்சி தடைப்பட்டது.எவ்வாறெனினும் எந்த இடத் தில் எப்போது இந்த சந்திப்பு நடை பெறும் என்பது இன்னமும் அறி விக்கப்படவில்லை.

நவநீதம்பிள்ளை யாரை சந்திக்கவேண்டும்? யாரைச் சந்திக்கக்கூடாது? என்பது குறித்த தீர்மானங்களை எடுக்கும் உரிமை அரசாங்கத்திற்கு கிடையாது என இராஜதந்திர தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# ஆசன வாயிலில் இரத்தினக்கற்கள்

(கொழும்பு)

ஆசன வாயிலில் 80 இலட்ச ரூபா பெறுமதியான இரத்தினக்கற்களை மறைத்து வைத்து கடத்திய இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பீட்டுள்ளார். சிங்கப்பூரிலிருந்து விமானம் மூலம் இலங்கை பயணித்த நபரே இவ்வாறு இரத்தினக் கற்களை கடத்தியுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் குறித்த நபரை கைது செய்துள்ளனர்.

இவரிடமிருந்து நீலப் பவளம், வைடூரியம் உள்ளிட்ட பெறுமதி மிக்க இரத்தினக்கற்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஆணுறைகளில் இரத்தினக் கற்களை நிரப்பி ஆசன வாயிலில் மறைத்து வைத்து இவர் கடத்தலில் ஈடுபட்டுள்ளார். சந்தேக நபரிடம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-2)

# தேர்தலில் நற்பண்புள்ளவர்களை தெரிவு செய்யுங்கள் - பிரதமர்

(கொழும்பு)

மத்திய மாகாண சபைக்கான தேர்தலில் வேட்பாளர்களை வெற்றி பெறவைக்கின்ற போது மக்களுக்கு சேவையாற்றக்கூடிய நற்பண்புகளும் நல்லொழுக்கங்களுமுள்ள மக்களின் நன்மதிப்பை பெற்றவர்களையே வெற்றிபெற வைக்க வேண்டும் என பிரதமர் டி.எம். ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

புஸல்லாவ நகர சபையில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

மத்திய மாகாண சபைத் தேர்தலானது மக்களது மாகாணத்திற்குள்ளான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கும் அவர்களுக்கு சிறந்த சேவையாற்றக் கூடிய பிரதி நிதிகளைத் தெரிவு செய்து கொள்வதற்கானதாகும்.

எனவே, தேர்தலின் போது உறவினர்கள், குடும்பத்தவர்கள், நண்பர்கள் என்ற உறவுமுறை நட்புகளைப் பார்த்து வாக்களிக்காது, தம் மாகாணத்திற்கு சேவையாற்றக் கூடிய நல்லொழுக்கம், நற்பண்புகளைக் கொண்டவர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

அவ்வாறு சேவையாற்றக் கூடியவர்கள் தெரிவாகும் பட்சத்தில் தான் மக்களுக்கானதும் தம் மாகாணத்திற்குமான சிறந்த சேவைகள் கிட்டுவதுடன் அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுக்கவும் ஏதுவாகும் என்றார். (அ-2)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மேற்கு ஞான வைரவர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறவுள்ளது. (அ-5)

# பாலத்தை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(பருத்தித்துறை)

வடமராட்சி மாலுசந்தி வியாபாரி மூலை வீதியின் அல்வாய் பகுதியில் பழைமை வாய்ந்த பாலமொன்று சேதமடைந்து ஆறு மாத காலமாகியும் இதுவரை புனரமைத்துத் கொடுக்கப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப்பாலம் சேதமடைந்து போக்குவரத்து மேற்கொள்ளமுடியாதிருந்த போது அப்பகுதி மக்களால் கிரவல் மண் போடப்பட்டு தற்காலிகமாக புனரமைக்கப்பட்டது.

ஆயினும், மழையினால் மண் கரைந்தோடி பாலம் சேதமடைந்துள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தினருக்கு பாலத்தை புனரமைக்குமாறு மக்கள் அறிவித்தபோதும் இதுவரை புனரமைக்கப்படவில்லை.

எனவே, இப்பாலத்தை புனரமைத்து போக்குவரத்தை சீர்செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-10)

# ரயிலில் மோதி துறவி மரணம்

(கொழும்பு)

புகையிரதக் கடவையில் புகையிரதம் மோதி பெண் பௌத்த துறவி ஒருவர் உயிரிழந்துள்ளார் என மகரகம பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை மகரகம ஸ்ரீ தேவானந்த வீதியிலுள்ள புகையிரதக் கடவையில் இடம்பெற்றுள்ளது. பாதுக்கவில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற புகையிரதம் மோதியே இவர் பலியாகியதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

உயிரிழந்த பெண் பௌத்த துறவியாவார். சடலம் களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-2)




* 1201 - லாத்வியாவின் ரீகா நகரம் அமைக்கப்பட்டது.
* 1868 -பிரெஞ்சு வானியல் நிபுணர் பியேர் ஜான்சென் சூரிய கிரகணத்தை ஆராயும்போது ஹீலியம் என்ற தனிமத்தைக் கண்டுபிடித்தார்.
* 1877 - செவ்வாய்க் கோளின் ஃபோபோஸ் கண்டுபிடிக்கப்பட்டது.
* 1917 - கிறீசில் தெசலோனிக்கி என்னும் நகரில் இடம்பெற்ற தீவிபத்தில் நகரின் பெரும் பகுதி அழிந்தது. 70 ஆயிரம் பேர் வீடுகளை இழந்தனர்.
* 1924 - பிரான்ஸ் ஜேர்மனியில் இருந்து தனது படைகளைத் திரும்ப அழைக்க ஆரம்பித்தது.
* 1938 - நியூயோர்க்கையும் கனடாவின் ஒண்டாரியோவையும் இணைக்கும் ஆயிரம் தீவுகள் பாலத்தை அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட் திறந்து வைத்தார்.
* 1950 -பெல்ஜியம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஜூலியன் லாஹூட் படுகொலை செய்யப்பட்டார்.
* 1958 - விளாடிமீர் நபகோவ் எழுதிய லொலிட்டா என்ற புதினம் அமெரிக்காவில் வெளியிடப்பட்டது.
* 1971 - வியட்நாம் போர்: அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியன தமது படைகளை திரும்ப அழைக்க முடிவு செய்தன.

**பிறப்பு**

* 1750 - அந்தோனியோ சாலியரி, இத்தாலிய இசையறிஞர் (இ. 1825)

**இறப்புகள்**

* 1227 - செங்கிஸ் கான், மங்கோலியப் பேரரசின் மன்னன்
* 1850 - ஹோனர் தெ பல்ஸாக், பிரெஞ்சு எழுத்தாளர் (பி. 1799)
* 1945 - நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்,
* 2009 - கிம் டாய் ஜூங், தென்கொரியக் குடியரசுத் தலைவர் (பி. 1924)

**சுபாஷ் சந்திர போஸ்**



நேதாஜி (தலைவர்) என்று இந்திய மக்களால் மரியாதையுடன் அழைக் கப்படும் சுபாஷ் சந்திரபோஸ் இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவராவார். இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற போது வெளி நாடுகளில் போர்க் கைதிகளாய் இருந்த நூற்றுக்கணக்கான இந்தியர்களை ஒன்றுதிரட்டி இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கி அப்போது இந்தியாவை ஆட்சி செய்த ஆங்கிலேயருக்கு எதிராகத் தாக்குதல் நடத்தியவரும் இவரே.

இவர் 1945 ஒகஸ்ட் 18 அன்று தாய்வான் நாட்டில் ஒரு விமான விபத்தில் இறந்து விட்டதாக கருதப்பட்டாலும், அவர் அப்போது இறக்கவில்லை என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. அவர் ரஷ்யாவிற்கு சென்று 1970 களில் இறந்துவிட்டதாகவும், அல்லது ஒரு துறவியின் வடிவில் வட இந்தியாவில் மறைமுகமாக வாழ்ந்து 1985இல் இறந்து விட்டதாகவும் பல கருத்துக்கள் உள்ளன. 1945 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 14 முதல் செப்டெம்பர் மாதம் 20 வரை எந்த விமான விபத்தும் தாய்வானில் ஏற்படவில்லை என அந்நாட்டு அரசு தெரிவித்திருப்பது போஸ் அவ்வாண்டு இறக்கவில்லை என்ற நேதாஜி அவ்விமான விபத்தில் இறக்கவில்லை எனத் தெரிவித்து விட்டது. ஆனால் இந்திய அரசு அவ்வறிக்கையை ஏற்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தின் இனப்படுகொலையை மூடி மறைக்கும் மூன்று பேர்!





பாகிஸ்தானைப் போலவே இலங்கையும் பிரிவதுதான் இந்திய நலனுக்கு உகந்தது என்கிற இந்திராகாந்தியின் தொலைநோக்குப் பார்வைக்கும் இலங்கை ஒரே நாடாய் இருப்பதுதான் இந்தியாவுக்கு நல்லது என்கிற ராஜீவ், சோனியா பார்வைக்கும் சம்பந்தமே இல்லை.

ஆயிரமாயிரம் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட பிறகு, மனித நேய அடிப்படையில் இலங்கை தொடர்பான தெளிவான முடிபை எடுத்தார் இந்திரா அம்மையார். அந்த மண்ணின் பூர்வீகக் குடிகளான தமிழர்களுக்கு சுய நிர்ணய உரிமை இருப்பதை இந்தியா மனப்பூர்வமாக ஏற்கிறது என்பதை அவரது நடவடிக்கைகள் வெளிப்படையாக உணர்த்தின. அவர் ராஜீவ் காந்தியைப் போல மூடுமந்திரமாகவே இருந்தவர் அல்ல. வெளிப்படையானவர். நல்லதோ கெட்டதோ ஒளிவு மறைவில்லாமல் பேசியவர். செயற்பட்டவர். அதுதான் இந்திராகாந்தி.

டூன் ஸ்கூல் மற்றும் ஹார்வர்டு மேதாவிகளின் வழிகாட்டுதல் அடிப்படையிலோ என்னவோ, தாயின் நிலைக்கு எதிர்மாறான நிலையை எடுத்தார் ராஜீவ். போராளிகளைக் கூப்பிட்டு மிரட்டினார். ஜெயவர்த்தனேவைப் பார்த்து மிரண்டார். 13-வது திருத்தம்தான் தீர்வு என்று ஜெயவர்த்தனேவுடன் தன்னிச்சையாக ஒப்பந்தம் செய்து கொண்டார்.

அடுத்த நாளே 13- ஐ எதிர்த்துப் பேசிய ஜெயவர்த்தனேயிடம் இந்தியாவை முட்டாளாக்கப் பார்க்கிறீரா என்று கேட்டிருக்க வேண்டாமா ராஜீவ்? கேட்கவில்லை. மாறாக ஒப்பந்தத்தை ஏற்கிறாயா இல்லையா என்று தமிழர்களுக்காக உண்மையாகப் போராடியவர்களை மிரட்டிக்கொண்டிருந்தார்.

நீண்டகாலம் போராடிச் சுதந்திரம் பெற்ற ஒரு நாட்டின் பிரதமர் என்பதை மறந்து, ஒரு மெய்யான சுதந்திரப் போரை நசுக்க அனைத்து வழிகளிலும் முயன்று தோற்றார். தன்னுடைய அரசியல் அறியாமையால் ராஜீவ் மேற்கொண்ட தமிழர் விரோத நடவடிக்கைகளுக்கும் சோனியாவின் தமிழின விரோத நடவடிக்கைகளுக்கும் அடிப்படையில் ஒரு வித்தியாசம் இருக்கிறது.

பின்னதில் தனிப்பட்ட முறையில் பழிவாங்கும் மனப்போக்கும் அரசியல் வக்கிரமும் தூக்கலாக இருக்கின்றன. லட்சக்கணக்கான தமிழரின் இனப்படுகொலையை விட தனது கணவரின் படுகொலைதான் தனக்கு முக்கியம் என்கிற சுயம் சார்ந்த நிலையை எடுத்தார் சோனியா.

இந்தியாவில் பிறந்த இந்திராவின் புதல்வருக்கே ஈழத்தின் வேதனையையும் வலியையும் புரிந்துகொள்ள முடியாதுபோன நிலையில் இத்தாலியில் பிறந்த இந்திராவின் மருமகளால் மட்டும் அதைப் புரிந்து கொண்டுவிடமுடியுமா?

இனப்படுகொலை என்பது அம்பலமாகிவிட்டால் இலங்கையுடன் சேர்ந்து தானும் சிக்கலில் மாட்டிக்கொள்ளும் என்கிற அச்சத்தில் ஜெனீவாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் துடித்துக் கொண்டிருக்கிறது இந்தியாவின் இதயம்.

தனி நபராக இருந்தாலும் சரி, ஒருநாடாக இருந்தாலும் சரி, தவறான நபர்களை நம்புவதாலும் நாசம் வரும், சரியான நண்பர்களைச் சந்தேகிப்பதாலும் நாசம் 'வரும்.

இப்போது அந்த நிலையில் தான் இருக்கிறது இந்தியா. உண்மையான நண்பர்களாகவும் இந்தியாவுக்குப் பாதுகாப்பாகவும் இருந்திருக்கக் கூடிய ஈழப் போராளிகளைப் பகைத்துக் கொண்டது. தனக்கு முந்தானை விரித்தபடியே சீனாவுக்கும் பாய் விரிக்கும் இலங்கையை நண்பனாக ஏற்ற தன் பலனை இப்போது அனுபவிக்கிறது. இந்தியாவின் வாலில் வந்து சீனாவை உட்கார வைத்திருக்கிறது இலங்கை. நல்ல நட்பு, நல்ல இராஜதந்திரம்!

இந்தியா அளவுக்கு இல்லாவிட்டாலும் இலங்கையில் நடந்த இனப்படுகொலையை மூடி மறைப்பதில் அதில் பாதி அளவுக்காவது சர்வதேசம் பங்கெடுத்துக் கொள்கிறது. சர்வதேசம் என்பதில் ஐ.நா.வும் உலக நாடுகளும் அடக்கம்.

அவற்றில் பல நாடுகள், இலங்கை என்கிற இனப்படுகொலைக் குற்றவாளிக்கு ஆயுதம் கொடுத்தவை. அங்கே நடந்த விடுதலைப் போரை-பயங்கரவாதம் என்று இலங்கையும் இந்தியாவும் கயிறு திரித்தபோது கண்டிக்காதவை. அங்கே போர்தான் நடக்கிறது என்கிற பொய்ப் பிரச்சாரத்தை நம்பியவை.

ஐக்கிய நாடுகள் சபை, கொல்லப்படுவோரின்- கற்பழிக்கப்படுவோரின் எண்ணிக்கையை அது நிகழ்ந்தபோதே அம்பலப்படுத்தியிருந்தால் சர்வதேசத்தில் பெரும் சலசலப்பு எழுந்திருக்கும். அதனாலாவது இலங்கை தனது திட்டமிட்ட இன அழிப்பை நிறுத்த வேண்டியிருந்திருக்கும்.

இலங்கைக்குத் துணை நிற்பதில் இந்தியாவுக்கு இணையாக நின்றது ஐ.நா. உரிய நேரத்தில் தகவல் எதையும் வெளியிடவேயில்லை. அங்கே என்ன நடக்கிறது என்பதை அறிந்தும் வாயைத் திறக்கவேயில்லை. ஐ.நா. என்கிற அமைப்பு சர்வதேசத்தின் மீதும் நிகழ்த்திய நம்பிக்கை மோசடி அது.

சர்வதேசம் எப்படி மௌனம் சாதித்தது என்பதையும் நடந்த படுகொலைகளைத் தடுக்கும் பொறுப்பை எப்படித் தட்டிக் கழித்தது என்பதையும் அண்மையில் அமெரிக்கக் குழு ஒன்று அமெரிக்க அரசுக்குத் தெரிவித்துள்ளது. அந்த 2 உறுப்பினர் குழுவில் முன்னாள் வெளியுறவு அமைச்சர் மேடலின் ஆல்பிரைட்டும் ஒருவர்.

படுகொலைகளைத் தடுத்து நிறுத்தும் பொறுப்பைப் பற்றிக் கவலைப்படாமல் வெறுமனே கவலை தெரிவித்ததோடு நின்றுவிட்டது சர்வதேச சமூகம். சரியான நேரத்தில் தலையிட்டு நடவடிக்கை எடுக்கும் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டார்கள்.

அந்தக் காலகட்டத்தில் அது குறித்து விவாதிக்க ஐ.நா. பாதுகாப்பு சபையோ, பேரவையோ மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டமோ கூட்டப்படவேயில்லை என்று அந்தக் குழுவின் அறிக்கை ஒன்றரை லட்சம் பேர் கொன்று குவிக்கப்பட்டு 4 ஆண்டுகள் முடிவடைந்தபிறகு குற்றஞ் சாட்டுகிறது.

விஜய் நம்பியார் ஒருவருக்குத்தான் களத்திலிருந்த ஐ.நா. பணிப்பாளர்கள் மூலம் ஈழத்தில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பது உடனுக்குடன் தெரிந்திருக்கும். எதற்காக அவர் அதை மூடி மறைத்திருப்பாரென்று நினைக்கிறீர்கள்?

ஒரு விடுதலை இயக்கத்தை நசுக்குவதற்காக எத்தனை லட்சம் மக்கள் செத்தாலும் பரவாயில்லை என்கிற முடிவோடுதான் தமிழின அழிப்பைத் தொடங்கியது இலங்கை. அதன் பின்னணியில் இந்தியாதான் இருந்தது என்பது திட்டவட்டமான உண்மை.

இனப்படுகொலை நடப்பது வெளியே தெரிந்துவிட்டால் அதை நிறுத்த நேரும் என்பதால் அதை மூடி மறைக்கும் வேலை விஜய் நம்பியாரிடம் ஒப்படைக்கப்பட்டது. சர்வதேசத்தின் முகத்திலும் அவர் கரிபூசிக் கொண்டிருந்தார். ஒன்றரை லட்சம் உயிர்களுக்கு உலை வைத்தது இந்த நாசகாரக் கூட்டணி அன்று வேறெது?

இன்றைக்கு நடந்தது, இனப்படுகொலை என்பது அம்பலமாகிவிட்டால் இலங்கையுடன் சேர்ந்து கூண்டில் நிற்க வேண்டியிருக்கும் என்கிற அச்சத்தில் அதை மூடி மறைக்கும் வேலையில் முழுமூச்சாக இறங்கியிருக்கிறார்கள் இவர்கள்.


(முற்றும்)

-புகழேந்தி தங்கராஜ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாதத இராசி பலன்கள்

## 17.08.2013-16.09.2013



## சிம்மம்

**மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்**

**இனிய வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பும் சிம்ம இராசி நேயர்களே!**

**சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள்!**

# சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள்!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் சூரியன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பது யோகம்தான். உடல்நலம் சீராகும். உற்சாகம் உள்ளத்தில் குடிகொள்ளும். கடமையிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். கல்விக்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக் கசப்புக்கள் நீங்கி சேமிப்பு உயர அவர்களே வழி சொல்வார்கள்.

செவ்வாய் மற்றும் குரு இரண்டும் இணைந்து 12 இல் சஞ்சரிப்பது யோகம் தான். 4 ஆம் இடத்திற்கு அதிபதியான செவ்வாய் 5 ஆம் இடத்திற்கு அதிபதியான குருவுடன் கூடி லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, சொத்து விற்பனையால் லாபம் கிடைக்கும். சொந்த, பந்தங்கள் போற்றும் விதத்தில் வாழ்க்கைத்தரம் உயரும். விரிசல் ஏற்பட்ட உறவுகள் மீண்டும் வந்திணையும். வெளிநாட்டு முயற்சிகளில் ஒருசிலருக்கு வெற்றி கிட்டும்.

2 ஆம் இடத்தில் சுக்ரன் நீச்சம் பெற்று மாதம் தொடங்குகிறது. எனவே, உடன்பிறப்புக்கள் வழியில் ஒருசில பிரச்சினைகள் ஏற்பட்டு மறையும். கூட்டாளிகள் ஒத்துழைப்புச் செய்தாலும் கூடயிருக்கும் உடன்பிறப்புகளும் உறவினர்களும் ஒத்துழைப்புச் செய்ய மறுப்பர். எதையும் பெரிதுபடுத்திக் கொள்ளாமல் காரியத்திலேயே கண்ணும் கருத்துமாக இருப்பது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

சனி வக்ர நிவர்த்தியாகி சகாய ஸ்தானத்தில் பலம் பெற்று விளங்குகிறார். எனவே, இனி ஒவ்வொரு முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். எதிரிகள் விலகுவர். ஏமாற்றங்கள் அகலும். உதிரி வருமானங்கள் பெருகவும் உள்ளத்தில் நினைத்தவைகள் இல்லத்தில் நடைபெறவும் சிவாலய வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது. சர்ப்ப பரிகாரம், குரு வழிபாடும் அற்புத வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

குரு மங்கள யோகம் இருப்பதால் குழந்தைகளின் கனவுகளை நனவாக்குவீர்கள். கொடுக்கல்- வாங்கல்கள் சிறப்பாக இருக்கும். கடன்சுமை பாதிக்கு மேல் குறைந்ததென்று சொல்லி மகிழ்வீர்கள். பழைய இடங்களை விற்றுவிட்டுப் புதிய இடங்களை வாங்கும் சூழ்நிலை உருவாகும்.

**கடகச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 19 ஆம் திகதி கடக இராசியில் செவ்வாய் சஞ்சரித்து நீச்சம் பெறப் போகிறார். தாய், தந்தை வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பயணங்கள் அதிகரிக்கும். பக்குவமாகப் பேசிக் காரியங்களை சாதித்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகும். உச்சம்பெற்ற சனியின் மீது கடகச் செவ்வாயின் பார்வை படுவதால் வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். வாய்ப்புகளில் ஒன்றிரண்டு கைநழுவிப் போகலாம். இழப்புகளை ஈடுகட்ட எடுத்த முயற்சிகளிலும் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். எச்சரிக்கையுடன் செயற்படுவது நல்லது. பொதுவாக விரயங்கள் குறைய விழிப்புணர்ச்சி தேவை.

**உச்ச புதனின் சஞ்சாரம்!**

செப்ரெம்பர் 2 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம்பெறப் போகிறார். இதன் விளைவாக பணப்புழக்கம் அதிகரிக்கும். பழகிய சிலரின் ஒத்துழைப்போடு புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். காலங்காலமாக செயற்படுத்த முடியவில்லையே என்று நினைத்த காரியம் ஒன்று செயற்படப் போகிறது. வரவு திருப்திகரமாக இருக்கும்.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

செப்ரெம்பர் 7 ஆம் திகதி துலாம் இராசியில் சுக்ரன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக மின்சாதனப் பொருட்கள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்பு கிட்டும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தொழில் வளர்ச்சியில் புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள்வீர்கள். அரசு வழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும்.

இம்மாதம் விஷ்ணு வழிபாடு உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும்.

## சிவல்புரி சிங்காரம்



## கன்னி

**உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

**அமைதியாக இருந்துகொண்டே அரிய பணிகள் பலவும் செய்யும் கன்னி இராசி நேயர்களே!**

**செவ்வாய்- சனி பார்வை!**

**செயல்களில் கவனம் தேவை!**

# பொன்னான வாய்ப்புகள் கண்ணெதிரில் வந்து சேரும்!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது 10 ஆம் இடத்தில் குருவின் சஞ்சாரம் உள்ளது. மேலும் அது பலம்பெற்ற செவ்வாயுடன் இணைந்து செயற்படுவதால் தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். தொகை வரவு திருப்திகரமாக இருக்கும். வெளிவட்டார பழக்க வழக்கம் விரிவடையும். வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரும். கோவில் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். கொடுக்கல்- வாங்கல்களை சீர்செய்து கொள்ளும் எண்ணம் மேலோங்கும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் போதுமான ஆதாயம் கிடைக்கும்.

விரயாதிபதி சூரியன் விரய ஸ்தானத்தில் பலம் பெற்றிருப்பதால் எதிர்பாராத நல்ல சில விரயங்களையும் சந்திக்க நேரிடும். திடீர் விரயங்கள் ஏற்பட்டு திகைப்படையாமல் இருக்க வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளலாம். பழைய பொருட்களைக் கொடுத்துவிட்டுப் புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

2 ஆம் இடத்தில் சனி இராகு சேர்க்கை இருப்பதால் கொடுத்த வாக்கைக் கடைசி நேரத்தில் காப்பாற்றுவீர்கள். நம்பிக்கைக்கும் நாணயத்தறிக்கும் உரியவர் நீங்கள் என்பதை நிலை நாட்டுவீர்கள். என்ன இருந்தாலும் மாதத் தொடக்கத்தில் தனாதிபதி நீச்சம் பெறுகிறார். எனவே, பண வரவில் சிறு சிறு தடைகள் இருந்து கொண்டேதான் இருக்கும். ஒரு தொகை செலவழிந்த பிறகு மற்றொரு தொகை வந்து சேரலாம்.

மாதத்தின் மையப்பகுதியில் தனாதிபதி சுக்ரன் பலம் பெறுகிறார். எனவே, மாதக்கடைசியில் நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய இயலும். மாதத்தின் முற்பகுதியில் நினைத்தது நிறைவேறும் மாதமாகவும் அமைய கிரகங்கள் வழிவகுக்கின்றன. இம்மாதத்தில் ஆனைமுகப்பெருமான் வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். 2 இல் ராகுவும் 8 இல் கேதுவும் இருப்பதால் சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்வது நல்லது. அப்பொழுதுதான் தடைகள் அகலும்.

**கடகச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 19 ஆம் திகதியில் கடக இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். கடக இராசிக்கு செவ்வாய் நீச்ச வீடாகும். அங்கிருந்து கொண்டு அதன் பார்வையைச் சனியின் மீது பதிக்கிறார். இது ஒரு வழிக்கு நன்மை தான். என்றாலும் விரயங்கள் கூடுதலாகவே இருக்கலாம். 6 க்கு அதிபதி சனியும் 8 க்கு அதிபதி செவ்வாயும் ஒன்றையொன்று சந்தித்துக் கொள்ளும் இந்த நேரத்தில் விபரீத இராஜயோகம் அடிப்படையில் சில செயற்பாடுகளும் நடைபெறலாம். திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். திடீர் திருப்பங்கள் உருவாகலாம். சொத்து விற்பனையால் தனலாபம் கிடைக்கும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்துசேரும்.

**உச்ச புதனின் சஞ்சாரம்!**

செப்ரெம்பர் 2 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம்பெறப் போகிறார். இது ஒருவழிக்கு நன்மைதான். இராசிநாதன் ராசியில் உச்சம் பெறும் இந்த நேரத்தில் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தொழில் வளம் மேலோங்கும். துணையாக இருப்பவர் தோள் கொடுத்து உதவுவர்.

**சுகம் தரும் சுக்ரப்பெயர்ச்சி!**

செப்ரெம்பர் 7 ஆம் திகதி துலாம் இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இது ஒரு அற்புதமான காலமாகும். 2,9 க்கு அதிபதி 2 ஆம் இடத்திலேயே சஞ்சரிப்பது யோகம்தான். திரண்ட செல்வம் வந்து சேரும். திடீர் தனலாபங்களும் உண்டாகும். குடும்பத்தில் சுபநிகழ்வுகள் வந்து சேரும். கொடுக்கல்- வாங்கல்கள் சீராகும். வண்டி வாகன வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். வாய்ப்புகள் அதிகரிக்கும்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனிபகவானையும் அனுமனையும் வழிபட்டு வருவது நல்லது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சி.றெபேக்கா, மட்டுவில்

அன்பின் வியாசர்!

தென்னிந்திய திரைப்படத்தை பார்த்த இளசுகள் அதில் வருவது போன்று கொலை குற்றம் செய்வது ஏன்?

அண்மையில் விஜயின் தலைவா பட வெளியீட்டில் அவர் படத்திற்கு நம் யாழ்ப்பாணத்தில் பால் ஊற்றினார்கள் என்கின்ற செய்தியை நினைக்கும் போது நம் தேசம் எங்கே போகின்றது எனும் நினைப்பே வருகின்றது. படத்திற்கு ஊற்றிய பாலை நான்கு ஏழைகளின் வயிற்றில் ஊற்றியிருந்தால்... சினிமாவை வாழ்க்கையாக்கும் சின்னத்தனம் எம்மிடம் மட்டும்தான் இருக்கின்றது.

வே.வே. அகிலேஸ்வரன், மருதங்கேணி

வியாசர் அண்ணா!

பெண்களின் கண்ணீரால் அழிவுகள் அதிகமாம். அவர்கள் கண்ணீர் விடாமல் இருக்க வழி சொல்லுங்கள்?

சன் ரீவி தொலைக்காட்சியை நிறுத்தி விட்டாலே போதும்.

தர்சிகா, யாழ்ப்பாணம்

வியாசர் அண்ணா!

நீங்கள் பெண் பார்க்கச் சென்ற போது பெண்ணைப் பாடச் சொல்லிக் கேட்டீர்களா?

*கேட்டேன். அவளும் பாடினாள். பாடலைக் கேட்டபடியே நாம் அனைவரும் நித்திரை யாகி விட்டோம். விழித்துப் பார்த்தால் பொலிஸ்ரேசன். பின்பு தான் தெரிந்தது நாம் பெண் பார்க்க வீடு மாறிச் சென்று விட்டோம் என்று...*

பாமரர்களுக்கு இருக்கும் அறிவு படித்தவர்களிடம் இல்லையே. இதுபற்றி உமது கருத்து!




கே.எஸ்.சிவஞானராசா, கொக்குவில்

வியாசர் அண்ணா!

மண் வீடொன்று கட்டி அதில் வாழ விரும்பும் எனக்கு நீங்கள் என்னதை சொல்லப் போகிறீர்கள்?

*சின்ன வீடுதானே? மழைக்காலம் அந்த சின்ன மண்வீடு ஆஹா.. சொல்ல முடியா இன்பம். நினைக்கும் பொழுதே அந்த வீட்டிற்கு குடி புகுந்து விட வேண்டும் என ஆவல் குடிகொள்கிறதே!*

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

வியாசர் அண்ணா!

உண்மையான காதலர்களை தாங்கள் எங்காவது கண்டதுண்டா?

உண்மையான காதலர்கள் கண்களுக்கு தெரிவதுமில்லை. கண்ட கண்ட இடங்களில் ஒதுங்குவதுமில்லை.

மண் வீடொன்று கட்டி அதில் வாழ விரும்பும் எனக்கு நீங்கள் என்னதை சொல்லப் போகிறீர்கள்?

க.முத்துராசா, கட்டைக்காடு

வியாசர் அண்ணா!

பாமரர்களுக்கு இருக்கும் அறிவு படித்தவர்களிடம் இல்லையே. இதுபற்றி உமது கருத்து!

கற்றது கைமண் அளவு கல்லாதது உலக அளவு எனும் பழ மொழியை திரும்பத் திரும்பச் சொல்லிப்பாரும் புரியும்.

டி.சாய்கஜி, கொக்குவில்.

வியாசர் அண்ணா!

திருமணம் முடிந்து மூன்றாவது நாள் பெண் வீட்டிலிருந்து கொழுக்கட்டை கொண்டு செல்வது ஏன்? அதற்கான பழைய சம்பிரதாய கதை தெரியுமா? உங்களுக்கு.

*திருமணம் முடிந்து விட்டது. மணமகனே இது தாண்டா நீ இறுதியாய் சாப்பிடும் நல்ல சாப்பாடு. (இது என் வாழ்வின் அனுபவம்)*

***கொஞ்சம் சிரிங்கப்பா...***

**புன்னகைப் பக்கம்**

"இருந்தாலும் அவருக்கு ஞாபக மறதி ஓவர்!"

"என்னாச்சு...?"

"மனைவியை டைவர்ஸ் பண்ணினதை மறந்துட்டு காணோம்னு புகார் கொடுக்க வந்திருக்கார்!"



ச.புவித்ரா, சாவகச்சேரி

அன்பின் வியாசரே!

பெண்ணும் பெண்ணும் நட்புக்கொள்ளலாம். ஆணும் ஆணும் நட்புக் கொள்ளலாம். அதற்கு ஒருவரும் ஒன்றும் சொல்வதில்லை. ஆனால் ஆணும் பெண்ணும் நட்புக் கொண்டால் தப்பா?

*தப்பு நடக்காத வரைக்கும் தப்பு இல்லை. தப்பு நடந்து விட்டால் அதற்கு நட்பு பொறுப்பு இல்லை.*

எஸ்.விஜிதபாமா, கோண்டாவில்

வியாசர் அண்ணா!

பணத்தை கண்டால் கடவுளை கண்ட மாதிரி என்று கண்ணில் ஒற்றி கொள்கிறார்களே எதற்கு?

பணம் மட்டுமல்ல எதை கஷ்டப்பட்டு அடைகின்றோமோ அது கடவுளாகவே தெரியும்.

**அன்பு வாசகர்களே....!**

**உங்கள் கேள்விகளை**

ஆசிரியர், வியாசர் பதில்கள்

இல.3, 2 ஆம் ஒழுங்கை,

பிறவுண் வீதி , யாழ்ப்பாணம் என்ற

முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

# தீவிரவாதிகள் இந்தியாவிற்கு எதிராக இலங்கையை பயன்படுத்துகின்றனர்

## இந்திய ஊடகம் சுட்டிக்காட்டு

தீவிரவாதிகள் இந்தியாவிற்கு எதிராக இலங்கையைப் பயன்படுத்திக் கொள்வதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

லக்ஷ்ர் இ தொய்பா, தெஹ்ரீக் ஈ தலிபான் மற்றும் த்மிழீழ விடுதலைப்புலிகள் ஆகிய பயங்கரவாத அமைப்புக்கள் ஒன்றிணைந்து செய்ற்பட்டு வருவதாக அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.


இந்த இயக்கங்களினால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என புலனாய்வுப் பிரிவினரை ஆதாரம் காட்டி அந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறான அச்சுறுத்தல்களை எதிர்நோக்க நேரிடும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புக்கள் இலங்கையைக் களமாகப் பயன்படுத்திக் கொண்டு இந்தியாவிற்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வாறான தகவல்கள் எதுவும் தமக்கு கிடைக்கவில்லை என இந்திய உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது. (அ-2)

# மொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

கற்கோவளம் பருத்தித்துறையைச் சேர்ந்த இராசேந்திரம் வைகுந்தவாசன் தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்பாளராக யாழ். மாவட்ட நீதிபதி ஆனந்தராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் அகில இலங்கை சமாதான நீதவானும் யாழ்.மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்து அபிவிருத்தி உதவியாளரும் ஆவார். (செ-5-19)

# மெட்ராஸ் கபே திரைப்படத்திற்கு தடை கோரிய மனு நிராகரிப்பு

மெட்ராஸ் கபே என்ற ஹிந்தி திரைப்படத்துக்கு தடை கோரிய மனுவை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை இரத்துச் செய்துள்ளது.

சட்டத்தரணி எழிலரசு தாக்கல் செய்த மனுவை நீதிபதி எஸ். மணிக்குமார் விசாரித்தார். மனுவில் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு தகுந்த ஆதாரங்கள் தாக்கல் செய்யப்படவில்லை எனக் கூறி மனுவை நீதிபதி இரத்துச்செய்தார். மனுவிபரம்ஹிந்தி நடிகர் ஜான் ஆபிரகாம் நடத்த மெட்ராஸ் கபே திரைப்படம் ஓகஸ்ட் 23 ஆம் திகதி வெளியாகவுள்ளது.

இந்தத் திரைப்படத்தில் இலங்கைத் தமிழர்களைத் தீவிரவாதிகள் போன்று சித்திரித்து காட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்திய அமைதிப் படைக்கு எதிராகதமிழர்கள் செயற்படுவது போன்ற காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.

இந்தப் படம் வெளியிடப்பட்டால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படும்.

எனவே திரைப்படத்தை தமிழக அரசும் மத்திய அரசும் இணைந்து மறு தணிக்கை செய்ய வேண்டும். அதுவரையில் படத்தை வெளி யிடத் தடை விதிக்க வேண்டும் என மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. (அ-2)

# தேர்தல் பிரசார கட் அவுட்டுக்களை அகற்ற பொலிஸாருக்கு பணிப்பு

(கொழும்பு)

புதிதாக சிற்றூழியர்களை நியமித்து தேர்தல் பிரசார பதாகைகள், புகைப்படங்கள் மற்றும் கட் அவுட்டுக்களை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் நடைபெறும் பிரதேசங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதற்கான அனுமதியைத் தேர்தல் திணைக்களம் வழங்கியதோடு இதற்கென9மில்லியன்ரூபாவையும் ஒதுக்கியுள்ளது. இதன்படி தேர்தல் நடைபெறும் வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களிலுள்ளபதாகைகள், புகைப்படங்கள், கட் அவுட்கள் என்பன அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தலைமையகபொலிஸ்நிலையங்களுக்குநால்வர், நகரப்பகுதிபொலிஸ் நிலையங்களுக்கு மூவர், சிறிய பொலிஸ் நிலையங்களுக்கு இருவர் என்ற அடிப்படையில் சிற்றூழியர்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது.

சிற்றூழியர்கள் நியமிக்கப்பட்ட பின்னர் மூன்று மாவட்டங்களிலும் உள்ள சகல சட்டவிரோத சுவரொட்டிகள், பதாகைகள் கட் அவுட் டுக்களை புகைப்படங்கள் என்பவை அகற்றநடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(அ-2)

# மாநகரசபைக்கு புதிய கொம்பக்ற் லோடர்



யாழ்.மாநகரசபையின் சுத்திகரிப்பு பணிக்கென இரண்டு புதிய கொம்பக்ற் லோடர்கள் ஒரு கோடியே 30 இலட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.யாழ்.மாநகர சபையினால் மேற் கொள்ளப்பட்டு வரும் சுத்திகரிப்பு பணிகளை துரிதப்படுத்தும் நோக்கோடு மேலும் புதிதாக இரண்டு கொம்பக்ற் லோடர்கள் மாநகர சபையின் நிதிமூலம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இவ்விரு புதிய கொம்பக்ற் லோடர் களும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவினால் பொதுச் சுகாதார பொறியியற் பிரிவின் பொறுப்பதிகாரியிடம் கையளிக்கப்பட்டன. (அ-6)

# இர. சிவலிங்கத்தின் நினைவுப் பேருரை

(கொழும்பு)

இர.சிவலிங்கத்தின் 14 ஆவது நினைவுப் பேருரையை கொழும்பு தமிழ் சங்கத்தில் எதிர்வரும் 24 ஆம் சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடத்த ஏற்பாடு செய்துள்ளது என ஞாபகார்த்த குழு தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்விற்கு தோட்ட உட்கட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் எம்.வாமதேவன் தலைமையில் நடைபெற உள்ள இந்நிகழ்வில் **இலங்கையின் அரசியல் கலாசாரமும் சிறுபான்மையினரின் உள்முரண்பாடுகளும்** என்ற தலைப்பில் கொழும்பு பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எஸ்.அனீஸ் சிறப்புரை நிகழ்த்தவுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலய சூழலில்...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவத் தமிழ் பண்பாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் தெய்வீகப் பேருரை கலை நிகழ்வு, மாணவர் சொற்பொழிவு, கலைஞர் கௌரவிப்பு நிகழ்வுகள் மஹோற்சவ காலங்களில் தினமும் பிற்பகல் 6.30 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெறும்.

இதன்படி இன்று ஞாயிற்றுக்கிழமை சைவப்புலவர் நவராஜ் வழங்கும் ஆன்மீக வாழ்வு எனும் விடயப் பொருளிலான சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு உற்சவ காலத்தில் தினமும் மாலை 6.45 முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

மஹோற்சவத்தின் ஏழாம் நாளான இன்று கே.பத்மநாதன், பி.காயத்திரி ஆகியோரின் வயலின் பண்ணிசை நிகழ்வு இடம்பெறவுள்ளது. இவ் இசைக் கச்சேரியில் அணிசெய் கலைஞர்களாக மிருதங்கம் திரு.பி. சியாம் கிருஷ்ணா, கடம் அ.செல்வரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து இடம்பெறும் எஸ்.துஸ்யந்தன் வழங்கும் பாடலுடனான இசையரங்கில் அணிசெய் கலைஞர்களாக வயலின் எ.ஜெயராமன், மிருதங்கம் கே.பிரணவன், கடம் கே.ரவிசங்கர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சிந்தனை, சமயச் சொற்பொழிவு, கலை நிகழ்வுகள் என்பன உற்சவகாலத்தில் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை நல்லூர் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றன.இன்றைய நிகழ்வுகளாக இளம் சொற்பொழிவாளர் திரு.சி.உமாசுதன் வழங்கும் முருக அன்பு என்னும் விடயப் பொருளிலான சிறப்பு சொற்பொழிவு இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க அறநெறிப் பாடசாலை, மாதகல் காந்திஜி அறநெறிப்பாடசாலை,அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (அ)

## சுதுமலை பிரதேச அபிவிருத்தி குறித்து அங்கஜன் ஆராய்வு

(சுதுமலை)



வடக்குமாகாண சபைத் தேர்தலில் ஐ.ம. சு. முன்னணியை வெற்றி பெறச் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அரசாங்கம் குடாநாட்டு இளைஞர்களுக்கு வழங்கிவரும் வேலைவாய்ப்புக்களின் தற்காலநிலை, எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள தொழில்வாய்ப்பு முன்னெடுப்புக்கள் என்பன தொடர்பிலும் வடமாகாண சபைத் தேர்தலில் மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டிய தருணம் தொடர்பிலும் ஐ.ம.சு. முன்னியின் யாழ்.மாவட்ட வேட்பாளராக போட்டியிடும்அங்கயன் இராமநாதன் விளக்கியுள்ளார். சுதுமலை புவனேஸ்வரி அம்மன் கோவிலில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்ட விபரங்களை விளக்கினார்.

இதில், சுதுமலை பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டங்களில் எவ்வாறான நிலை காணப்படுகின்றது என்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. மேலும் வடமாகாண சபைத் தேர்தல் குறித்த தமது அபிப்பிராயங்களை மக்கள் தெரிவித்ததுடன் தமது சந்தேகங்களை கேட்டு தெளிந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## திருமண பதிவாளரை தேடி பொலிஸார் வலைவீச்சு

(கரவெட்டி)

யாழ். மாவட்டத்தில் ஒரு நபருக்கு நான்கு பதிவுத் திருமணங்களை செய்து வைத்த பெண் திருமணப் பதிவாளர் ஒருவரை பொலிஸார் வலை வீசி தேடி வருகின்றனர்.

வரணிப் பிரதேசத்தை சேர்ந்த குறித்த பெண் திருமணப் பதிவாளர் ஒரு நபருக்கு வெவ்வேறு இடங்களைச் சேர்ந்த நான்கு பெண்களைத் திருமணம் செய்து வைத்ததாகவும் நான்கு பெண் வீட்டார்களிடமிருந்தும் அதிகளவான சீதனங்களைப் பதிவாளர் அவர் அந்நபருக்குப் பெற்றுக் கொடுத்துள்ளதாகவும் விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணின் பெற்றோர் கொடுத்த முறைப்பாட்டையடுத்து யாழ்.பொலிஸார் பெண் திருமணப் பதிவாளரையும் மணமகனையும் கைது செய்வதற்கு தீவிரமான தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ள னர். (அ-9-24-60)



காணி நகர அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக் கான பயிற்சி முகாம் யாழ்.நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இக் கூட்டுத்தாபன த்தின் யாழ்.மாவட்டப் பொறுப்பதிகாரி இ.ராஜ்குமார், பயிற்சியை நிறைவு செய்துகொண்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

## விளையாட்டுக் கழகங்கள் பதிவுகளை மேற்கொள்க

(கரவெட்டி)

தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழகம் நடாத்தும் வடமராட்சி பிரதேசங்களைச் சேர்ந்த விளை யாட்டு கழகங்களுக்கான அணிக்கு 16 ஓவர் 11 பேர் கொண்ட கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் இடம் பெற்று வருகின்றது.

இதில் பதிவுகளை மேற்கொள்ளாத விளையாட்டுக்கழகங்களை நேரடியாக பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அல்லது 0773760604 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறும் விவேகானந்தா விளையாட்டுக்கழகம் அறிவித்துள்ளது. (அ-9-24)

## ஸ்ரீவாகீஸ்வரி முன்பள்ளி விளையாட்டு விழா

(கோண்டாவில்)

கோண்டாவில் வடக்கு ஸ்ரீவாகீஸ்வரி முன்பள்ளி மழலைகளின் விளையாட்டுவிழா இன்று பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி முன்றிலில் நடைபெறவுள்ளது.


ஸ்ரீ வாகீஸ்வரி நிலைய தலைவர் கு.முருகையா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் மற்றும் அவரது பாரியார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

## இளங்கோ முன்பள்ளி விளையாட்டு விழா


அல்வாய் வடக்கு இளங்கோ மழலைகள் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி, இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இளங்கோ விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இளங்கோ சனசமூகத் தலைவர் வே.சிவயோகன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கிழக்கு பல்கலைக் கழக விரிவுரையாளர் த.கிருபாகரன், சிறப்பு விருந்தினர்களாக அல்வாய் வடக்குகிராம அலுவலர் சோ.கிருஸ்ணராஜா, அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலய அதிபர் வி.இந்திரலிங்கம், இளங்கோ சனசமூக நிலைய சுவிஸ் கிளை போஷகர் கா.யோகராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-9-10)

# நல்லூரான் திருவடிக்கு ஏழாம் திருவிழா



## வருவான் வேலன்



நல்லை நகர்ப் பெருமானே
நலமுடன் நாம் வாழ
வேலாட்சி புரிந்து வரும்
பச்சை மயில் வாகனனே
குன்றின் மேல் அமர்ந்திருந்து
குறைகளை தீர்த்து வரும்
குறத்தி மணாளனே
சீரற்ற சமூகத்தை
சீர்படுத்த சீக்கிரமே
மயிலேறி வேலோடு வருவாயா?

க.மலர்
சிறுவர் இல்லம்

## இன்பமெல்லாம் தந்திட திருவீதி வலம் வரும் வேல்முருகா

அருளான மயிலேறி அதிகார நடமாடி
திருவீதி வலம் வரும் திருமுருகா
ஆறுபடை வீடுடையாய் இன்பமெல்லாம் தந்திட
திருவீதி வலம் வரும் வேல்முருகா
பேரிகை உடுக்கு வானைப் பிளக்க பஜனை முழங்க
திருவீதி வலம் வரும் மால் மருகா
அல்லலுறும் அடியவர் அவலத்தை போக்கிட
திருவீதி வலம் வரும் நல்லை நாதா

தொல்புரத்தூர்
க.லோகேஸ்வரன்

## நல்லூரானே என்றும் உன்நாமம் ஓதிடுவேன்

நல்லூர் என்னும் நற்பதியிலே
நல்லாரோடு இணைந்து
நல்லாட்சி புரியும் நல்லூர்க் கந்தனே
உன் நாமம் முருகா என்று என்றுமே ஓதிடுவேன்

என்றும் உன்னை வணங்கிடவே என் மனம் நினைக்குதே
அழகிய மயிலினை வாகனமாய் கொண்டவனே
என்றுமே உன் நாமம் என் நாவினிலே



அருணகிரிக்கு நாவில் உரைத்தாய் செந்தமிழை
முருகா என்னும் உன் நாமத்தை
என்றுமே நான் ஓதிடுவேன்
நல்லூரானே நற்சிந்தனையை தந்திடுவாய்

எம்மைத் தீண்டிடும் வேதனைகளை
வேரோடு அழிப்பவனே
கதிர்வேலா என்னும் உன் நாமம்
என்றும் என் நாவில் ஒலிக்கும்.

கௌசிகா செல்வகிருஸ்ணன்,
பருத்தித்துறை.

## நல்லூர் கந்தன் அநுபூதி

வஞ்சச் செயல்கள் மலிந்தெம் நாட்டில்
அஞ்சப் படுதல் அரங்கே றிடுதே
துஞ்சப் படுமெம் துயர்நீக் கியுடன்
பஞ்சந் தீர்த் "தாள்" பதிநல் லூரா!

கலாபூஷணம், சந்தக் கவிஞர். நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிம்பாவே கிரிக்கெட் வீரர்கள் போராட்டம்

சிம்பாப்வே கிரிக்கெட் வீரர்கள் ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி திடீர் போராட்டத்தில் குதித்துள்ளதுடன் சிம்பாப்வே கிரிக்கெட் சபையுடன் இதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்த வீரர்கள் புதிய சங்கத்தையும் தொடங்கி இருக்கிறார்கள்.

ஊதிய உயர்வு, அடுத்த ஆண்டு நடைபெறும் 20 ஓவர் உலக கிண்ணப் போட்டியில் பங்கேற்பதற்காக சிம்பாப்வே கிரிக்கெட் சபைக்கு ஐ.சி.சி. அளிக்கும் கட்டணதொகையில் 10 சதவீதத்தை வீரர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அவர்கள் இந்த போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

### கரீபியன் பிறீமியர் லீக் தொடர்

## சென்லூசியஸ் அணி வாகை

கரீபியன் பிறீமியர் லீக் தொடரின் அன்ரிகுவா, சென் லூசியா அணிகளுக்கிடையிலான போட்டியில் சென் லூசியா அணி வெற்றிபெற்றுள்ளது. மழை காரணமாகப் பாதிக்கப்பட்ட இப்போட்டியில் சென் லூசியா அணி டக் வேர்த் லூயிஸ் அடிப்படையில் 17 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சேர் வியன் றிச்சர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென் லூசியா அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென லூசியா அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களைக் குவித்தது.


சிறந்த ஆரம்பமாக முதலாவது விக்கெட்டுக்காக 5.4 ஓவர்களில் 46 ஓட்டங்களைப் பகிர்ந்த சென் லூசியா அணி, அதன் பின்னர் தொடர்ச்சியாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தது. சென் லூசியா அணி சார்பாக இறுதி 5 ஓவர்களில் 69 ஓட்டங்கள் குவிக்கப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் சென் லூசியா அணி சார்பாக அன்ட்ரூ பிளெற்சர் 53 பந்துகளில் 76 ஓட்டங்களையும், டெரன் சமி 20 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும், டெவோன் ஸ்மித் 20 பந்துகளில் 29 ஓட்டங்களையும், தமிம் இக்பால் 19 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அன்ரிகுவா அணி சார்பாக மார்லன் சாமுவேல்ஸ், றஹீம் கோர்ன்வெல் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

180 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அன்ரிகுவா அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும் போது 10 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டது. மீண்டும் போட்டி ஆரம்பிக்கப்பட்டபோது 10.4 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டு, போட்டி கைவிடப்பட்டது. இதன் போது சென் லூசியா அணி 17 ஓட்டங்களால் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

துடுப்பாட்டத்தில் அன்ரிகுவா அணி சார்பாக ஜேமர் ஹமில்ற்றன் 30 பந்துகளில் 24 ஓட்டங்களையும், மார்லன் சாமுவேல்ஸ 23 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும் பெற்றனர். போட்டியின் நாயகனாக அன்ட்ரூ பிளெற்சர் தெரிவானார்.





ஸ்டீவோ அறக்கட்டளை திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளை பார்வையிடுவதற்காக அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரும் அதிரடி வீரருமான ஸ்டீவோ இந்தியாவின் கொல்கத்தாவிற்கு அண்மையில் விஜயம் செய்திருந்தார். இதன்போது பாராக்பூரில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை சந்தித்தார்.

## விலகினார் ரிம் பிரெஸ்னன்

இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் ரிம் பிரெஸ்னன் உபாதைக்குள்ளாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது உபாதை காரணமாக அவர் இங்கிலாந்தின் இந்தப் பருவகாலம் முழுவதும் போட்டிகளில் இருந்து விலகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெற்றுவரும் ஆஷஷ் தொடரின் முதலாவது போட்டியில் பங்குபற்றியிருக்காத ரிம் பிரெஸ்னன், 2ஆவது போட்டியில் ஸ்ரீவன் ஃபின் இற்குப் பதிலாக அணியில் சேர்க்கப்பட்டார். இதுவரை சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ள ரிம் பிரெஸ்னன், 4ஆவது போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெறுவதற்கு முக்கியமான பங்களிப்புகளை வழங்கியிருந்தார்.

இந்நிலையில் 4ஆவது போட்டியின் பின்னர் ரிம் பிரெஸ்னனின் கீழ் முதுகுப் பகுதியில் உபாதை ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக 5ஆவது ஆஷஷ் டெஸ்ட், அதன் பின்னரான ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், ருவென்ரி ருவென்ரி சர்வதேசப் போட்டிகளிலும் ரிம் பிரெஸ்னன் பங்குபற்ற முடியாது போயுள்ளது.

### இங்கிலாந்து கிரிக்கெட் லீக் போட்டியில்

## ஆண்களுடன் இணைந்து ஆடி பெண் சாதனை

இங்கிலாந்து கிரிக்கெட் லீக் போட்டியில் ஒரு பெண் வீராங்கனை, ஆண் வீரர்களுடன் இணைந்து ஆடி புதிய வரலாறு படைத்துள்ளார்.

20 வயதான கோலே வால்வொர்க் போல்டன் அசோசியேஷன் லீக் போட்டியில் கலந்து கொண்டு வால்ஷா அணி சார்பாக விளையாடினார்.

இந்த அணி கோல்போர்ன் அணிக்கு எதிரான போட்டியில் மோதியது. வால்ஷா அணியில் சக வீரர்கள் அனைவரும் ஆண்களே. கோலே மட்டும்தான் பெண் ஆவார். இதன் மூலம் முதல் தர கிரிக்கெட் போட்டி ஒன்றில் ஆண்களோடு இணைந்து ஆடிய முதல் பெண் என்ற பெருமை கோலேவுக்குக் கிடைத்தது.

போல்டன் அசோசியேஷன் லீக் 125 ஆண்டு கால வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதாகும். இந்த வரலாற்றில் முதல் முறையாக பெண் ஒருவர் ஆண்களுடன் இணைந்து ஆடியது இதுவே முதல் முறையாகும். பந்து வீச்சாளரான கோலே, 11 ஓவர்கள் பந்துகளை வீசி 4 விக்கெட்களையும் பறித்து சாதனை படைத்தார். இதன் மூலம் தனது அணிக்கும் அவர் வெற்றி தேடித் தந்தார். வெற்றிக்குப் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், நான் ஆட வந்தபோது அனைவரும் என்னைப் பார்த்து சிரித்தனர். ஆனால் எனக்குக் கிடைத்த வாய்ப்பை நான் சரியாகப் பயன்படுத்திக் கொண்டேன். அணியில் நான் மட்டுமே பெண்ணாக இருந்ததை எண்ணி நான் கவலைப்பட வில்லை என்றார்.

மேலும் அவர் கூறுகையில், நான் பந்து வீச முயன்றபோது என்னை அவர்கள் கேலி கிண்டல் செய்தனர். ஆனால் அதைப் பொருட்படுத்தவில்லை" என்றார். கோலே, தனது 8 வயது முதலே வால்ஷா அணிக்காக ஆடி வருபவர் ஆவார். மேலும் அவர் காற்பந்திலும் விளையாடுகிறார்.

## அமெரிக்க டெனிஸ் காலிறுதிக்கு பெடரர், நடால் தகுதி





அமெரிக்காவில் நடைபெற்று வரும் சின்சினாட்டி மாஸ்டர்ஸ் டெனிஸ் போட்டியின் காலிறுதிச் சுற்றில் நடப்புச் சம்பியனான சுவிட்சர்லாந்தின் ரோஜர் ஃபெடரர் மற்றும் ஸ்பெயினின் ரஃபேல் நடால் மோதவுள்ளனர்.

இந்த பருவகாலத்தில் ஹார்ட் கோட் எனப்படும் மைதானத்தில் நடைபெற்ற டெனிஸ் போட்டிகளில் அசைக்க முடியாத நாயகனாக வலம் வரும் நடால், சின்சினாட்டி காலிறுதியைக் கடப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப் போட்டியில், இதற்கு முன்பு 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் அதிகபட்சமாக நடால் அரையிறுதியை எட்டியுள்ளார்.

தான் கலந்து கொண்ட 11 போட்டிகளில் 10இல் இறுதிச்சுற்றை எட்டியுள்ள நடால், 8 போட்டிகளில் கிண்ணத்தை வென்றுள்ளார்.

அதேசமயம், சின்சினாட்டி டெனிஸ் கிண்ணத்தை 6ஆவது முறையாக கைப்பற்றும் முனைப்பில் ஃபெடரர் விளையாடி வருகிறார். ஆனால், சமீப காலமாக லீக் அல்லது காலிறுதிச் சுற்றுகளோடு ஃபெடரர் தோல்வியைத் தழுவி வருவது அவருக்குப் பின்னடைவு.

இவர்களைத் தவிர முன்னணி வீரர்களான சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், பிரிட்டனின் ஆன்டி முர்ரே, ஆர்ஜென்டீனாவின் மார்டின் டெல் பொட்ரோ, அமெரிக்காவின் ஜான் இஸ்னெர், செக் குடியரசின் டாமஸ் பெர்டிச் மற்றும் ரஷ்யாவின் திமித்ரி துருஸ்னோவ் ஆகியோர் காலிறுதிச்சுற்றில் விளையாடவுள்ளனர்.

இப்போட்டியின் மகளிர் பிரிவு காலிறுதிச் சுற்றுக்கு அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், பெலாரஸின் விக்டோரியா அசரென்கா, செர்பியாவின் ஜெர்சி ஜான்கோவிச், சீனாவின் லீ நா, போலந்தின் அக்னீஸ்கா ரத்வான்ஸ்கா, ருமேனியாவின் சிமோனா ஹலீப் மற்றும் டென்மார்க்கின் வோஸ்னியாகி ஆகிய வீராங்கனைகள் முன்னேறியுள்ளனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிப் போட்டியில் இந்தியாவின் லியாண்டர் பயஸ்-செக் குடியரசின் ரடெக் ஸ்டெபானெக் ஜோடி, இந்தியாவின் ரோஹன் போபண்ணா-பிரான்ஸின் ரோஜர்-வெஸ்ஸலின் ஜோடியுடன் மோதுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவடைந்து செல்கின்றது வெடிவைத்தகல் கிராமம்

**பல்நெடுங்காலமாய் தமிழர் வாழ்ந்த பல பகுதிகள், இன்று ஆய்வுக்குட்படுத்தப்படும் நிலையிலுள்ளதோடும் தற்போது பல கிராமங்கள் மக்களால் கைவிடப்பட்ட நிலையில் அழிவடைந்து செல்கின்றமையையும் காணக்கூடியதாகவுள்ளது.**

வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வெடிவைத்தகல் கிராம மக்கள் குடியேறாமை மற்றும் அக் கிராமத்தில் ஆரம்பத்தில் வாழ்ந்த மக்கள் மீள அங்கு செல்ல விரும்பாமையினாலும் இக்கிராமங்கள் அழிவடைந்து செல்லும் நிலையை எட்டியுள்ளன.

1985 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் சுமார் 45 குடும்பங்கள் வாழ்ந்த இக் கிராமம் செல்வச்செழிப்புடன் காணப்பட்ட நிலையில் அதன் பின்னர் ஏற்பட்ட யுத்தம் காரணமான இடப்பெயர்வுகளினால் மக்கள் சிறுகச் சிறுக வெளியேறி நகர்ப்புறங்களை நோக்கி சென்றுவிட்டதாக அயல் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

பராக்கிரமபுர எனும் சிங்கள மக்கள் வாழும் கிராமத்தில் இருந்து 14 கிலோ மீற்றர் தூரத்திலும் ஓமந்தை எனும் தமிழ் கிராமத்தில் இருந்து 24 கிலோமீற்றர் தூரத்திலும் உள்ள இக் கிராமத்தில் தற்போது அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாத நிலையினால் அக் கிராமத்தை சேர்ந்த மக்கள் மீளக்குடியேற விருப்பம் அற்ற நிலையில் காணப்படுவதனால் அங்கு இந்திய அரசின் நிதியுதவியுடன் கட்டப்பட்டுள்ள பாடசாலை கவனிப்பாரற்று காணப்படுவதுடன் பாரிய வீடுகள் சிதைவடைந்தும் காணப்படுகின்றன.

அக் கிராமத்தை சூழவும் காடுகள் வளர்ந்து காணப்படுவதனால் யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் மின்சார வசதிகள் மற்றும் வீதி செப்பனிடப்படாமை போன்ற காரணங்களால் அக் கிராமத்தில் மக்கள் மீள்குடியேற விருப்பமின்றி உள்ளதாகவும் சிலர் தமது வயல் நிலங்களில் நெற்செய்கை காலங்களில் மாத்திரம் விவசாயம் செய்து விட்டு செல்வதாகவும் அயல் கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வெடிவைத்தகல் கிராமத்திற்கு மக்கள் குடியேறாமையினால் அருகில் அமைந்துள்ள கோவில்புளியங்குளம் கிராமத்திற்கும் பாதிப்புகள் ஏற்படுவதாக தெரிவிக்கும் அக்கிராமத்தவர்கள் தங்களது கிராமத்திலும் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படாத காரணத்தினால் 35 குடும்பங்கள் வசித்து வந்த நிலையில் தற்போது 9 குடும்பங்கள் மட்டுமே வசிக்கும் நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.



இவ்வாறான நிலை தொடர்ந்தும் ஏற்படுமாயின் கோவில்புளியங்குளம் கிராமமும் அழிவடைந்து செல்லும் எனவும் அவர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

எனவே, அதிகாரிகள் இது தொடர்பில் கவனமெடுத்து வெடிவைத்தகல் தமிழ் கிராமத்தை அழிவில் இருந்து மீட்கவேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

(அ-250-266)

## சதுரங்க திறந்த போட்டி

தடையற்ற சிப்பாய் சதுரங்க கழகத்தினால் நடத்தப்படும் கொழும்பு சர்வதேச சதுரங்க 6 ஆவது திறந்த போட்டி நாளை-சனிக்கிழமை முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை வரை ஒன்பது சுற்றுக்களாக கொழும்பு 07, பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதன்படி நேற்று தொடக்கம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வரை தலா இரு சுற்றுக்களாகவும் 21 ஆம் திகதி ஒரு சுற்றுமாக இப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் வடமாகாண சதுரங்க வீரர்களும் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சுந்தரர் குருபூசை

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அனந்தலெட்சுமி மாணிக்கராஜசர்மா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் கந்தையா நீலகண்டன் கலந்துகொள்ளவுள்ளார். இதில் ஆசியுரையை சிவஸ்ரீ கு.குமாரக்குருக்கள் வழங்கவுள்ளார்.

சுந்தரரும் வாழ்வும் எனும் பொருளிலான சிறப்புச் சொற்பொழிவை நி.பாபுதரன் வழங்கவுள்ளார். தொடர்ந்து நெல்லண்டை அம்மன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.(அ)

## வேகக்கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வயலுக்குள் பாய்ந்தது

### இருவர் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்



வீதியில் சென்ற வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வயலுக்குள் பாய்ந்துள்ளது.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று முற்பகல் 9.45 மணியளவில் யாழ்ப்பாணம் நாவற்குழிப் பாலத்தடியில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்து, கோர விபத்துச் சம்பவமாக காணப்பட்ட போதும் வாகனத்தில் சென்ற சாரதி உட்பட இருவரும் இருக்கைப்பட்டி அணிந்திருந்தமையினால் தெய்வாதீனமாக காயமேதுமின்றி உயிர் தப்பியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, முழங்காவில் பகுதியிலிருந்து மீன்களை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் வந்த பிக்கப் ரக வாகனம் யாழில் மீன்களை சந்தையில் கொடுத்து விட்டு ஐஸ் கட்டிகளுடன் மீண்டும் முழங்காவில் நோக்கி திரும்பிக் கொண்டிருந்தது.

இதன் போது நாவற்குழி பாலத்தடியில் குறித்த பிக்கப் ரக வாகனம் வீதியை விட்டு விலகி தடம் புரண்டு வீழ்ந்துள்ளது.

இவ்விபத்தில் வாகனம் அதிகளவில் சேதமடைந்துள்ள போதிலும் சாரதிக்கும் மற்றைய நபருக்கும் எவ்வித காயமும் ஏற்படவில்லை. இருவரும் இருக்கைப்பட்டி அணிந்து சென்றமையாலேயே காயங்கள் எதுவுமின்றி உயிர் தப்பியுள்ளனர்.

வாகனம் வீதியிலிருந்து விலகி தலைகீழாக வீழ்ந்து புரண்டமையால் வாகனத்தின் முன் பகுதியும் பின் பகுதியும் மிக மோசமாக சேதத்திற்குள்ளாகியுள்ளது.

இதேவேளை, குறித்த இடத்தில் வந்து கொண்டிருக்கும் போது மழை பெய்து கொண்டிருந்ததாகவும் அதனால் தான் வாகனத்தின் சில்லுகள் சறுக்கி வாகனம் வீதியை விட்டு விலகி வயலுக்குள் புரண்டது எனவும் வாகனச் சாரதி தெரிவித்தார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-4)

## கவனிப்பாரற்ற நிலையில் கிளி.அம்பாள்குள கிராமம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள்குள கிராம வீதிகள் புனரமைப்பு உட்பட எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாது புறக்கணிக்கப்படுவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த கிராமத்தைச் சூழவுள்ள கனகபுரம், செல்வாநகர், உதயநகர் போன்ற பகுதிகளில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் கூட செயற்படுத்தப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் 600 குடும்பங்கள் வரை வாழும் குறித்த கிராமத்தின் வீதிகள் கோடைகாலங்களில் புழுதி படிந்தும் மழை காலங்களில் சேறும் சகதியுமாக அல்லது வெள்ளக்காடாகவும் காணப்படும் நிலையில் வீதிகளின் புனரமைப்பு தொடர்பில் தொடர்ந்து அலட்சியப் போக்கு கடைப்பிடிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக குறித்த கிராமத்தின் முருகன் கோவில் வீதியில் இவ் வீதியை செப்பனிடுவதற்கான கற்கள் மற்றும் வெள்ளம் பாய்வதற்கான பாலங்கள் அமைக்கும் பொருட்கள் என்பன இரு வருடங்கள் முன்னதாகவே வருவிக்கப்பட்டுள்ள போதிலும் இன்னமும் இவ் வீதியின் புனரமைப்பு வேலைகள் இடம்பெறாத நிலையிலேயே காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இதற்கு முன்னரும் பல தடவைகள் இவ்விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள போதிலும் இது குறித்து உரியவர்கள் நடவடிக்கை எதுவும் எடுக்காதிருப்பது தொடர்பில் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இதுபோன்ற அசமந்தப் போக்கே இக்கிராமத்தின் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் கைக்கொள்ளப்பட்டு வருவதாக அம்மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

இந்நிலைமைகளில் நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தல் காலத்திலேனும் தமது கிராமத்தின் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தப்படுமா என கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதேவேளை, ஒவ்வொரு தேர்தலின்போதும் தமது கிராம அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என உறுதிமொழி கூறப்படுவதும் பின்னர் தாம் ஏமாற்றப்படுவதும் வழமையாகிவிட்டது. மேலும் இம்முறை வடமாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதில் தமக்கு ஈடுபாடு எதுவும் இல்லாத நிலைமைக்குத் தாம் தள்ளப்பட்டிருப்பதாகவும் இம் மக்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

(அ-5)

## மின்சாரம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது

### உருத்திரபுரம், சிவநகர் மக்கள் ஆதங்கம்

(கிளிநொச்சி)

உருத்திரபுரம், சிவநகர் பகுதிகளில் வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாகவும் இதனைத் தாம் அரசியல் பழிவாங்கலாகவே கருத வேண்டியுள்ளதாகவும் பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

உருத்திரபுரம் மேற்கு, உருத்திரபுரம் வடக்கு, சிவநகர் பகுதிகளிலேயே மேற்படி மின்சாரம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

உருத்திரபுரம் மேற்கு, உருத்திரபுரம் கிழக்கு ஆகிய பிரதேசங்களில் சில வீடுகளுக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய வீடுகளுக்கு அதனை வழங்குவதில் அலட்சிய போக்கு கடைப்பிடிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. அதிலும் உருத்திரபுரம் வடக்கு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் பலகாலமாக அங்கு வசித்து வரும் மக்களின் வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்படாமையால் அவ் வீடுகள் இராப் பொழுதுகளில் இருளில் மூழ்கிக் கிடப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சிவநகர் பகுதிகளில் எந்தவொரு வீடுகளுக்கும் இன்னமும் மின்சாரம் வழங்கப்படாத நிலையில் தொடர்ந்தும் அம்மக்கள் ஏமாற்றப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், உரிய அதிகாரிகள் தென்னிலங்கையில் இருந்து குறித்த பகுதிகளைப் பார்வையிட வரும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என அனைவருக்கும் இப்பிரச்சினை பிரதேச மக்களால் எடுத்துக் கூறப்பட்டுள்ள போதிலும் விரைவில் மின்சாரம் வழங்கப்படும் என்ற அவர்களின் உறுதிமொழியுடனேயே அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்து வருவதாகவும் இதனால் அரசியல் ரீதியில் தாம் பழிவாங்கப்படுவதாக கருத வேண்டியுள்ளதாகவும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றனர்.

எனவே, போரினால் அதிகம் பாதிக்கப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்ட தமது பிரதேசத்தின் அபிவிருத்தியில் உரியவர்கள் இவ்வாறான அலட்சியப் போக்கையும் பாரபட்ச நிலையையும் தவிர்த்து தமக்கு மின்சாரம் வழங்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறித்த பிரதேச மக்கள் வலுத்த கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

(செ-5-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய உச்சிமாநாட்டை இந்தியா புறக்கணிக்காவிட்டால் போராட்டம்

## கருணாநிதி எச்சரிக்கை



(சென்னை)

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்க வருமாறு பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு நேரில் அழைப்பு விடுப்பதற்காக இன்று இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் டில்லி வருகிறார். இந்நேரத்தில் இந்தியப் பிரதமரிடம் தமிழர்களின் கோரிக்கையை அலட்சியப்படுத்தாது இம்மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளாது என்று திட்டவட்டமாகத் தெரிவிக்க வேண்டும் என தி.மு.க. தலைவர் முத்துவேல் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கை விடுதலை அடைவதற்கு முன்பும் விடுதலை அடைந்த பின்னரும் ஈழத் தமிழர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட எந்த ஒப்பந்தத்தையும் நிறைவேற்றாது அவற்றை மீறி, சர்வதேசக் கண்ணோட்டத்தில் நம்பகத்தன்மையை முழுவதுமாய் இழந்து நிற்கிறது இலங்கை. இந்தியாவுக்கும் தமிழர்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும் எதிராகவே இலங்கை தொடர்ந்தும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

ராஜீவ்காந்தி -ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தின்படி உருவான இலங்கை அரசமைப்பின் 13ஆவது சட்டத் திருத்தத்தை நீர்த்துப் போகச் செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் இலங்கை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது எல்லை தாண்டியதாக இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 49 இந்திய மீனவர்களில் 8 பேர் மட்டுமே விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். எஞ்சிய 41 பேருக்கு ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி வரை சிறைக் காவலை நீடித்து மன்னார் மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழக மீனவர்களைக் கைது செய்வதும் அவர்களை இலங்கைக்குக் கொண்டு சென்று நீதிமன்றத்தில் நிறுத்துவதும், அண்மைக் காலமாக இலங்கை கடற்படையினர் தொடர்ந்து கடைப்பிடித்து வரும் நடைமுறையாகும்.

தமிழக மீனவர்களின் கதி பற்றி, நமது வேண்டுகோளின்படி இந்திய அரசு இலங்கைக்குப் பல முறை கடிதங்களை எழுதியும், தூதுவரை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தியும் அதைப்பற்றி இலங்கை அரசு இம்மியளவு கூட காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை.


இந்தச் சூழ்நிலையில்தான் தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சியினரும் ஏன் அனைத்துத் தமிழ்மக்களும், உலகத் தமிழர்களும் ஒருமனதாக இந்திய அரசு எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஆனால், இம் மாநாட்டின் கூட்டத்தில் பங்கேற்க வரும்படி பிரதமர் மன்மோகன் சிங்குக்கு நேரில் அழைப்பு விடுப்பதற்காக இன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் டில்லிக்கு வருவதாக செய்தி வந்துள்ளது.

இந் நேரத்தில் இந்தியப் பிரதமர் தமிழர்களின் கோரிக்கையை அலட்சியப்படுத்தாது மனதில் கொண்டு இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளாது என்று திட்டவட்டமாகவும் வெளிப்படையாகவும் தெரிவிக்க வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வேண்டுகோளையும் இந்திய அரசு புறக்கணிக்குமானால் இம் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்கின்ற நிகழ்வைக் கண்டித்து, தமிழ் மக்களின் உணர்வையும், கண்டனத்தையும் வெளிப்படுத்த அந்நாளில் மக்கள் தமிழர் இல்லங்கள் தோறும், வணிக நிலையங்கள் தோறும் கறுப்புக் கொடி ஏற்றுதல், ரயில் நிறுத்தப் போராட்டம் போன்றவைகளில் ஈடுபட நேரிடும் என்பதை மத்திய அரசுக்கு தெரிவித்துக் கொள்கிறேன் என கருணாநிதி குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இந்தியாவின் விண்கலம் விண்ணுக்கு பாய்கிறது



(சென்னை)

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கிரையோஜெனிக் என்ஜினுடன் ஜி.எஸ்.எல்.வி. டி-5 விண்கலம் நாளை திங்கட்கிழமை விண்ணில் செலுத்தப்படுகிறது.

**தகவல் தொடர்பு செயற்கைகோள்**

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து அடிக்கடி விண்வெளி ஆராய்ச்சிக்காக பி.எஸ்.எல்.வி. மற்றும் ஜி.எஸ்.எல்.வி. விண்கலங்களை விண்ணுக்கு செலுத்தி வருகிறது.

இதன் பிரகாரம் நாளை ஏவப்படும் ஜி.எஸ்.எல்.வி. டி-5 விண்கலத்தின் எடை 114 தொன் ஆகும். இது 160 அடி உயரம் கொண்டது. இதன் மூலம் ஜிசாட் -14 என்ற தகவல் தொடர்பு செயற்கைகோளும், இந்தியாவில் தகவல் சேவை வழங்குவதற்காக 6 கே.யூ.பேண்ட் டிரான்ஸ்பான்டர்களும், 6 விரிவுபடுத்தப்பட்ட சி பேண்ட் டிரான்ஸ்பான்டர்களும் செலுத்தப் படுத்தப்படவுள்ளன.

**மூன்று ஆண்டுகளுக்கு பின்னர்...**

தற்போது ஏவப்பட்டுள்ள விண்கலமானது 3 ஆண்டுகளுக்கு பின் இந்தியாவின் சொந்த என்ஜினுடன் ஏவப்படுகிறது. பூமியின் ஈர்ப்பு சக்தியை மீறி விண்கலத்தை விண்ணில் செலுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பது கிரையோஜெனிக் என்ஜின்தான். இதுதான் விண்கலத்தை விண்ணை நோக்கி செலுத்துகிறது.

**விண்ணில் ஏவப்படுகிறது**

இந்த கிரையோஜெனிக் என்ஜினுடன் செலுத்தப்படும் ஜி.எஸ்.எல்.வி. டி-5 விண்கலம் நாளை திங்கட்கிழமை மாலை 4.50 மணிக்கு ஆந்திரா மாநிலம் ஸ்ரீஹரி கோட்டாவில் இருந்து ஏவப்படுகிறது.

இந்தியா தயாரித்த கிரையோஜெனிக் என்ஜினுடன் செல்லும் இந்த விண்கலம் வெற்றி பெற வேண்டும் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்க்கிறனர். (அ-2)

## நாசா அனுப்பிய விண்கலம் 2016 இல் வியாழனை அடையும்

(வோஷிங்டன்)

வியாழன் கோள் பற்றிய ஆராய்ச்சிக்காக அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனம் நாசா அனுப்பிய விண்கலம், பூமியிலிருந்து 135 கோடி கிலோமீற்றர் தொலைவுவரை பயணம் செய்து சாதனை படைத்துள்ளது.

சூரிய குடும்பத்தில் உள்ள கோள்களைப் பற்றிய ஆராய்ச்சியில், அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவன ஆய்வாளர்கள், தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் சூரிய குடும்பத்தின் மிகப் பெரிய கோளான வியாழன் கிரகத்தை பற்றிய தகவல்களை அறிய நாசா விஞ்ஞானிகள் 2011ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி ஜூனோ என்ற விண்கலத்தை அனுப்பி வைத்தனர். இந்த விண்கலம் பூமியிலிருந்து, 9.464 ஆஸ்ட்ரானமிகல் யூனிட் தொலைவு வரை பயணம் செய்துள்ளதாக, நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி நாசா அனுப்பிய ஜூனோ விண்கலம் 135 கோடி கிலோமீற்றர் தூரம் பயணம் செய்துள்ளது.

இந்த விண்கலம், எதிர்வரும் 2016ஆம் ஆண்டு ஜூலை மாதம் வியாழன் கோளின் சுற்றுவட்டப் பாதையை சென்றடையும் என நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த விண்கலம் வியாழன் கோளை 33 முறை வலம் வந்து அதில் பொருத்தப்பட்டுள்ள எட்டு அதி நவீன கமராக்களின் உதவியுடன் அந்த கிரகத்தை பற்றிய தகவல்களை படம் எடுத்து அனுப்பும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# துருக்கிக்கான தூதுவரை மீள அழைத்தது எகிப்து

(அங்காரா)

துருக்கி நாட்டிற்கான எகிப்து தூதுவர் திரும்ப அழைக்கப்பட்டுள்ளார். துருக்கி நாட்டின் ஜனாதிபதி அப்துல்லா குல் உத்தரவின்படியே அவர் திரும்ப அழைக்கப்பட்டார்.

இதற்கு பதிலடி தரும் வகையில் எகிப்து நாடும் துருக்கி நாட்டில் இருந்து தங்கள் தூதுவரைத் திரும்ப அழைத்துக்கொண்டது.

எகிப்து நாட்டில் நடைபெற்று வரும் மோதலுக்கு துருக்கி ஜனாதிபதி அப்துல்லா குல், பிரதமர் ரெஸிப் தயீப் எர்டோகான் ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் சொந்த நாட்டிற்கு திரும்பிய துருக்கி தூதர் ஹூசைன் அவின் போட்சாலி இஸ்தான்புல் விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், எகிப்து நாடு விரைவில் ஜனநாயக பாதைக்கு திரும்பும் என நம்புவதாக கூறினார். (அ-2)

# ஹீத்ரு விமான நிலையத்தில் குண்டுவெடிக்கும் என எச்சரிக்கை

## உஷார் நிலையில் பொலிஸார்

(லண்டன்)

பிரிட்டனின் ஹீத்ரு விமான நிலையத்தில் குண்டு வெடிக்கும் அபாயம் உள்ளதாக வந்த தகவலையடுத்து அங்கு பொலிஸார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

லண்டனிலுள்ள ஹீத்ரு விமான நிலையத்தில் தினமும் ஆயிரக்கணக்கான சர்வதேச விமானங்கள் வந்து செல்கின்றன. இலட்சத்துக்கும் அதிகமான பயணிகள், இந்த விமான நிலையத்தை தினமும் பயன்படுத்துகின்றனர். இதற்கிடையே பயணிகள் வேடத்தில் ஒரு பெண் தன் மார்பகத்துக்குள் வெடிகுண்டை மறைத்து வைத்து வெடிக்க திட்டமிட்டுள்ளதாக பிரிட்டன் புலனாய்வுத் துறையினருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதன் காரணமாக, இந்த விமான நிலையத்தில் அதிக பட்ச பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது. அனைத்து பயணிகளும், அவர்களது உடைமைகளும் தீவிரமாக சோதனையிடப்பட்டன.

பாகிஸ்தான் சிறையிலிருந்து தப்பிய அல்-கொய்தா பயங்கரவாதிகள் இந்த விமான நிலையத்தை தகர்க்க சதி திட்டம் தீட்டியுள்ளனர். இதற்காக தற்கொலை படையை சேர்ந்த ஒரு பெண்ணின் மார்பகத்துக்குள் வெடிகுண்டை வைத்து தைத்து மற்றொரு ஊசி மூலம் மருந்தை செலுத்துவதன் மூலம் இந்த வெடிகுண்டை வெடிக்க செய்ய பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக, பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிலும் ஓர் ஒழுங்கைக் கடைப்பிடியுங்கள்.
சீரியமுறையில் அணி வகுத்து வைக்கப்பட்டிருக்கும் படையே எதிரிக்கு பயத்தைக் கொடுக்கும்.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பொலிஸார் தீவிரமாகாவிட்டால் யாழில் மக்கள் நடமாட முடியாமல் போகும்

சட்டம், ஒழுங்கு என்பன வடபகுதியில் கணிசமான அளவில் சீர்குலைந்து போயுள்ளன.

களவு, கொள்ளை, விபத்து மரணம் என எங்கும் பதற்றமான சூழ்நிலை. பட்டப்பகலில் வீடு உடைத்து பலமணிநேரம் தேடுதல் நடத்தி களவு எடுக்கும் அளவில் எங்கள் யாழ்ப்பாண மண்ணில் திருடர்களின் பலம் பல மடங்கு அதிகரித்துள்ளது.

எனினும் களவெடுக்கப்பட்ட உடைமைகள் மீட்கப்பட்டதான வரலாறுகள் மிகக்குறைவு.

இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கும் போது திருடர்கள் இத்துணை துணிவுடையவர்களாக இருப்பதற்குக் பலமான பின்னணி இருக்கலாம் என்ற ஐயுறவு எழுவதும் நியாயமானதே.

யாழ்ப்பாணத்தில் வீடுடைத்துத் திருடுதல் என்பதற்கு அப்பால், சைவாலயங்களை உடைத்துப் பெறுமதிவாய்ந்த விக்கிரகங்கள், வாகனங்கள் என்பவற்றை கபளீகரம் செய்யும் கொடுமையும் சர்வ சாதாரணமாக நடந்தேறுகிறது. இதற்கு மேலாக சட்டம், வீதி ஒழுங்கு முறை என எதுவும் இன்றி வீதிகளில் வாகனம் செலுத்துவோர், அதிவேகமாக மோட்டார் சைக்கிள் ஓடுவோர் என்ற நடைமுறை சாதாரணமாகி நாளுக்கு நாள் இரண்டு மூன்று பேர் விபத்தில் பலியாகிப் போகின்ற சம்பவங்கள் இதயத்தை கருக்கவல்லன.

இவ்வாறாக விபத்து மரணங்கள், கொள்ளைகள், களவுகள், மாணவர்களிடையே போதைப் பொருள் பாவனைகள் என எல்லாவுமே சேர்ந்து அருமந்த யாழ்ப்பாணத்தை நிர்மூலமாக்குகின்றன.

இத்தகைய சம்பவங்கள் தடுக்கப்படவேண்டும். இதுவிடயத்தில் பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுப்பது அவசியம்.

மதுபோதையில் தலைக்கவசம் அணியாமல், குறைந்தது மூன்று பேர் மோட்டார் சைக்கிளில் அதிவேகமாக பயணிப்பது என்பது இப்போது மலிந்து போய் விட்டது.

இதற்கான காரணம் என்ன? மதுபோதையில் அதிவேகமாக பயணிப்பவனுக்குத் தன்னுயிர் பெறுமதி அற்றதாக இருக்கலாம். ஆனால் அவனின் ஒழுங்கினத்தால் வீதியில் பயணிப்பவர்கள் உயிர் விடநேர்ந்தால் அது கொலைக்குற்றம் அல்லவா?

இருந்தும் நிலைமையை புரிந்து கொள்ள முடியாத அளவில் இளைஞர்கள் சிலர் நடந்து கொள்வது வேதனைக்குரியது.

ஒரு காலத்தில் கட்டுக்கோப்புடன் வாழ்ந்த தமிழ் இளைஞர்கள் இன்று தங்களை இழப்பவர்களாக நடந்து கொள்கின்றனர். புதிதாக திரையிடப்படும் சினிமாப் படத்திற்கு வாத்தியம் இசைத்து, மகர தோரணம் கட்டி, பால் வார்க்கும் மடமைத்தனம், நாம் எங்கு செல்கின்றோம், எங்களின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதை கணிப்பீடு செய்வது போதுமான சுட்டிகளாகும்.

ஆகவே யாழ்ப்பாணம், மக்கள் நடமாட முடியாத ஒரு பிரதேசமாக மாறுவதைத் தடுக்கின்ற முழுப்பொறுப்பும் பொலிஸாருக்கே உண்டு. எனவே பொலிஸார் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும்.

## மஞ்சவனப்பதியானின் தேர் பவனி நாளை

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் இரதோற்சவம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 5.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி 7.00 மணிக்கு வசந்த மண்டபபூசை இடம்பெற்று காலை 9 மணிக்கு முருகப்பெருமான் தேரில் ஆரோகணிப்பார். (அ)

## தேர்தலில் வாக்களிக்க மாற்று திறனாளிகளுக்கு விசேட போக்குவரத்து

வடமாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்கவுள்ள மாற்றுத் திறனாளிகளுக்காக விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன.

மாகாண சபை தேர்தல்கள் சட்டத்தின் 84(4)ஈ பிரிவிற்கமையவே மாற்றுத் திறனாளிகளுக்கு விசேடமான போக்குவரத்துசேவைஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் வாக்களிக்கவுள்ள மாற்றுத் திறனாளிகள் ஒவ்வொருவரும் தமது கிராமசேவையாளரிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து கையளிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-9-19)

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி
### இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

17.08.2013க்கான வினாவும் விடையும்:-

வினா:- ஒவ்வொரு இந்துவும் காலையில் ஸ்நானத்தின் பின் சுவாமி அறையில் செய்யவேண்டிய மூன்று கருமங்கள் எவை?

விடை: வடக்குத் திசைநோக்கியோ அல்லது கிழக்குத் திசை நோக்கியோ அண்ணார்ந்து பார்த்து சிவசிவ என்று சொல்லிக்கொண்டு விபூதி தரித்து இறைவனை வணங்கி இறைபாடல்களைப் (தேவாரம், புராணம்) பாராயணம் செய்தல் வேண்டும். நிலத்தில் ஆசன விரிப்பின் மேல் நேராக அமர்ந்திருந்து கைகளில் சின்முத்திரையைப் பிடித்து மூக்கு நுனியைப் பார்த்து கண்களை மூடி ஓங்காரம் (மூச்சை வெளிவிடும்போது) குறைந்தது மூன்று தடவையாவது சொல்லுதல் வேண்டும். தொடர்ந்து இறைவனை (சிவனை) தியானித்து ஓம் நமசிவாய என்ற பஞ்சாட்சர மந்திரத்தை ஜெபித்தல் வேண்டும்.

18.08.2013: வினா:- இறைவனை குறிக்கும் ஒலி வடிவம் யாது? அதன் பொருள் யாது?


விடை நாளை...

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி (01.09.2013) நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 4 மணிக்கு (நேரம் மாற்றப்பட்டுள்ளது). இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்ட பத்தில் கையளிக்கும் போது துணுக்குகளில் வரும் கேள்விகளுக்கு சரியான பதிலைச் சொல்லும் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். 18 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

சின்மயா மிஷன்
யாழ்ப்பாணம்

இல.9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை
### ஒடுங்குவதாங்கே



உலக முதித்தது மாங்கே– இந்த
உலக முதித்து ஒடுங்குவ தாங்கே
சலன முதிப்பது மாங்கே– இந்தச்
சலன முதித்து ஒடுங்குவ தாங்கே
நீர்நிலம் தீகாற்று மாங்கே– நெடு
வானொடு சந்திர சூரியர் ஆங்கே
சீர்பெறு சித்தரும் ஆங்கே– நல்ல
தேவரும் முனிவரும் பக்தரும் ஆங்கே
இல்லையுண் டென்பது மாங்கே– எங்கும்
ஏது மறியாமல் நிற்பது மாங்கே
வல்லாரும் மாட்டாரும் ஆங்கே– வளம்
வாய்ந்த இலங்கையில் வாழ்வாரும் ஆங்கே

## நீராடிய சிறுவர்கள் மூவரை காணவில்லை

கிண்ணியா, கங்கை ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த மூன்று சிறுவர்கள் காணாமல் போயுள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியா பைஸல் நகரைச் சேர்ந்த 16 வயது மதிக்கத்தக்க ஜுனைதீன் முகமட் இஜாஸ், ஜமால்தீன் ரவூப் றொஷான், அப்துல் மனாப் பர்ரீதுல்லா இம்ரான் ஆகியோரே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இவர்கள் நேற்று காலை உணவை உண்டுவிட்டு கங்கையாற்றிற்கு குளிக்கச் சென்றதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். மேற்படி சிறுவர்களை தேடும் பணியில் கிண்ணியா பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ஏ-11)

## நாம் எந்தத் தீயை ஏற்பது? தீர்மானிப்போம்?

### பரமபிதா காட்டிய பாதை

'மண்ணுலகில் தீ மூட்ட வந்தேன். மண்ணுலகில் அமைதியை ஏற்படுத்த வந்தேன் என்றா நினைக்கிறீர்கள்? இல்லை, பிளவு உண்டாக்கவே வந்தேன் என உங்களுக்குச் சொல்கிறேன் என்று இன்று நமக்கு தரப்படும் பைபிள் பகுதியில் காண்கின்றோம்" இயேசுவை நாம் அமைதியின் அரசர், சமாதானத் தூதுவர் என்று அழைக்கின் றோம் இயேசுவும் இவ்வுலகை விட்டுப் பிரிவதற்கு முன்னர், 'அமைதியை உங்களுக்கு விட் டுச் செல்கிறேன் என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன்" என வாக்களித்தார். அமைதியை வாழ்த்திய இயேசு "பிளவு உண்டாக்க வந்தேன்" எனக் கூறுகிறார். இயேசுவிடமிருந்து சற்றும் எதிர்பாரத வார்த்தைகள் இவை.

இங்கு இயேசு கொண்டுவந்த அமைதி எது, அவர் கொண்டுவந்த பிளவு எது என்னும் கேள்வி நமக்கு எழுகிறது. இயேசு தம் சீடர்களுக்கு வாக்களித்த அமைதி கடவுளுக்கும் நமக்கும் இடையே உருவாகின்ற நல்லுறவையும் பிறரோடு நாம் கொள்கின்ற நல்லுறவையும் குறிப்பதாகும். ஆனால இயேசு நாம் வாழும் உலகில் 'பிளவையும் உணடாக்குகிறார." இயேசு கொண்டு வருகின்ற பிளவு பற்றி இயேசுவின் குழந்தைப் பருவத்தின் போதே அறிவிக்கப்பட்டது.

சிமியோன் என்னும் இறைவாக்கினர் இயேசு மக்களிடையே பிளவு கொண்டு வருவார் என முன்னறிவிக்கிறார் 'இதோ, இக் குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும்..." ஒருசிலர் இயேசுவை ஏற்பர், வேறு சிலர் அவரை எதிர்ப்பர். இவ்வாறு மனிதரிடையே பிளவு உணடாகும்.


இன்றைய உலகிலும் இயேசுவை ஏற்போரும் அவரை எதிர்ப்போரும் உள்ளனர். இயேசுவின் மதிப்பீடுகளின்படி நடப்போரும் அவருடைய போதனைகளைப் புறக்கணிப்போரும் உள்ளனர். ஏன்,இயேசுவின் சீடர்களாகத் தம்மை அடையாளம்காட்டுவோர்கூட சிலவேளைகளில் அவருடைய போதனையை மறந்து விடுகிறார்கள்.

ஆகவே, இயேசு 'முரண்பாட்டு அறிகுறியாக" இன்றும் உள்ளார் என்ப தில் ஐயமில்லை எனலாம். இயேசு கொண்டு வந்த அமைதி ஒரு விதமான மயான அமைதி அல்ல. கடவுளையும் மனிதரையும் ஒருங்கிணைக்கின்ற அமைதி.

இயேசுவை நாம் ஏற்கிறோமா அல்லது எதிர்க்கிறோமா என்பதைப் பொறுத்தே நம் வாழ்விலும் நாம் வாழ்கின்ற சமுதாயத்திலும் அமைதி நிலவும் என்பதே உண்மை.

'மண்ணுலகில் தீ மூட்ட வந்தேன். என்று இயேசு கூறும் பகுதியையும் நோக்கினால் இன்றைய காலகட்டத்தில் பலவிதமான நெருப்புகள் நம்மைச் சுற்றி எரிந்து கொண்டிருக்கின்றன.

வீட்டைச் சுற்றி பொறாமை தீ, வீதியில் வாக்குகை நோககி தீ, சமூகத்தில் சாதியத் தீ நாட்டுக்குள் மத வெறி தீ, நாடுகளுக்குள் பொருளாதார போட்டி தீ, உலகில் தீவிரவாத தீ, வன்முறை தீ, அடக்குமுறை தீ, ஆணவத் தீ. இப்படி பலவித தீகள் சுவாலைவிட்டு எரிந்து உலகைஉருக்குலைத்துக் கொண்டிருகின்றன. இந்த சூழலில் இயேசுவும் ஒரு தீ பற்றி எரிய வேண்டுமென்று விரும்புகி றார். எல்லா தீ போல இதுவும் இழப்புகளை பிரிவினையை ஏற்படுத்தக் கூடியது. ஆனாலும் இந்த இழப்பும் பிரிவினையும் ஆக்கபூர்வமானது. தனி மனிதனையும் சமுதாயத்தையும் கட்டி எழுப்புவது. வாழ்வில் நிறைவையும் நிம்மதியையும் கொடுப்பது. இயேசுவின் சாட்சியம், புது மைகள், போதனைகள் இவைகளை வைத்துப் பார்க்கின்ற போது அவர் கொண்டுவந்த நெருப்பு - தீ- ஒளி - சண்டைக்காக அன்று சமாதானத்திற்காகத்தான் என்பது புலனாகிறது எனவும் ஒரு சிலர் குறிப்பிடுகின்ற னர்.



**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

இயேசு சொன்ன நெருப்பு தூய்மை செய்கிற பழையதைப் போக்குகின்ற ஒன்றாகும். அதர்மத்தை அழிக்கின்ற இன்னொரு தர்மம் என்று கூட சிலர் அதைச் சொல்வதுண்டு. நெருப்பால் சுளகைத் தம் கையில் கொண்டு கோதுமையையும் பதரையும் பிரித்துக் கொடுப்பார் என்பதன் வாயிலாக ஒருபுறம் உலகைத் தீர்ப்பிட வந்த தீயாகவும் அது இருக்கலாம். மறு புறம் திருத்தூதர்கள், கன்னி மரியா மீது இறங்கி வந்து வல்லமையைக் கொடுத்த தீப்பிழம்பாகவும் இருக்கலாம். நாம் எந்தத் தீயை ஏற்பது? தீர்மானிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'அப்பிள் பெண்ணே' என்ற படத்தில் நீண்ட இடை வெளிக்குப் பின்னர் ரோஜா 'கிளாமர்' வேடத்தில் நடிக் கிறார். இதுவரை ஏற்றிராத வித்தியாசமான காவல் அதி காரி வேடத்தில் தம்பி ராமைய்யா நடிக்கிறார்.

இப்படம் குறித்து இயக்குநர் ஆர்.கே.கலைமணி கூறுகை யில், "இன்றைய தலைமுறையினருக்கு அம்மா, அப்பா வைப் பற்றிய புரிதல் குறைவாகவே உள்ளது. பெற்றோர்க ளின் பாசம்கூட அவர்களுக்குப் புரியாமல் போய்விடுகிறது. அம்மா, அப்பாவின் அணுகுமுறையைத் தவறாகப் புரிந்து கொண்டு ஓடிப்போகிற இன்றைய தலைமுறையினரைப் பற்றிய படமே 'அப்பிள் பெண்ணே'.

இப்படத்திற்காக ரோஜா நடத்தும் ஹொட்டல் ஒன்றை சுமார் 20 லட்ச ரூபாய் செலவில் குற்றாலத்தில் அரங்காக அமைத்துப் படப்பிடிப்பை நடத்தினோம். அம்மா- மகள் பாசத்தை மையப்படுத்தி காதலை இதில் புது மாதிரியான விதத்தில் சொல்லி இருக்கிறோம் என்கிறார் இயக்குநர்.




## நவீன தொழில்நுட்பத்துடன் பாசமலர்

நடிகர் திலகம் சிவாஜி கணேசன், சாவித்திரியின் நடிப்பில் வெளியாகி மாபெரும் வெற்றி பெற்ற படம் பாசமலர்.

கடந்த 1961ஆம் ஆண்டு சிவாஜி கணேசன்- சாவித்திரி நடிப்பில் வெளியான பாசமலர், அந்த காலம் மட்டுமின்றி இந்த காலத்திலும் அண்ணன்- தங்கை பாசத்துக்கு ஓர் உதாரணம் தான்.

இந்நிலையில் இப்படம் டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் வெளியாகியுள்ளது.

பீம்சிங்கின் இயக்கத்தில், விஸ்வநாதன்- ராம்மூர்த்தி இசையில் பாடல்களும் சக்கை போடுபோட்டன. குறிப்பாக மலர்ந்தும் மலராத பாடல் அனைவரின் மனதையும் கொள்ளை கொண்டது என்றால் அது மிகையல்ல.

ஏற்கனவே சிவாஜி கணேசனின் நடிப்பில் உருவான கர்ணன் படம் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் வெளியானது.


தமிழகத்தின் பல்வேறு நகரங்களிலும் வெளியான இப்படம், சென்னையில் 100 நாட்கள் ஓடியது மட்டுமின்றி வசூலிலும் சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது.




## தனுசின் 25 ஆவது படம்

தனுஷ் நடிக்கவிருக்கும் 25ஆவது படத்திற்கு 'வேலை யில்லா பட்டதாரி' என பெயர் வைத்திருக்கின்றனர்.

பிரபல ஒளிப்பதிவாரள ரான வேல்ராஜ் இந்த படத் தின் மூலம் இயக்குனராக அறிமுகமாகிறார். இவர், பொல் லாத வன், சிறுத்தை, ஆடு களம், 3, எதிர் நீச்சல் உள்ளிட்ட பல படங்களுக்கு ஒளிப் பதி வாளராகப் பணியாற்றியவர்.



படத்தில் தனுசுக்கு ஜோடி யாக அமலா பால் நடிக்கிறார். தனுஷின் "வொண்டர்பார் பிலிம்ஸ்" நிறுவனம் தயாரிக் கிறது. அனிருத் இசையமைக் கிறார்.

## கடின உழைப்பாளியாகும் ஹன்சிகா

ஹன்சிகா மொத்வானி இந்த வருடம் நடித்து வெளி வந்த 'தீயா வேலை செய்யணும் குமாரு', 'சிங் கம் 2' ஆகிய படங்கள் பெரும் வெற்றி பெற்றதைய



டுத்து ஹன்சிகாவை திரை உலகினர் அதிர்ஷ்ட தேவதை என அழைக்க ஆரம்பித்துள்ளனர்.

இதுகுறித்து ஹன்சிகா கூறும்போது,

இதை வெறும் அதிர்ஷ்டம் என கூற முடியாது. என்னை பொறுத்த வரை அதிர்ஷ்டம் என்பது வாய்ப்பு வரும்போது அதை இரண்டு கைகளாலும் பற்றிக் கொள்ள தயார் நிலையில் இருப்பதுதான்.

ஒரு நடிகையாக மழை, வெயில் என பாராமல் உழைப்பதும், இரவு பகல் என தூக்கமின்றி உழைப் பதும், நல்ல கதை, நல்ல தயாரிப்பு நிறுவனம், நல்ல இயக்குனர் தேர்ந்து எடுப்பதும், என் பலம் மற்றும் பலவீனத்தை உணர்ந்து நடிப்பது என என் கடமையை ஆற்றுகிறேன்.

இதற்கும் மேலாக என் தாயின் அறிவுரையும், ஊக்கமும் என் வெற்றியை உறுதி செய்கிறது. இதை எல்லாவற்றையும்விட நான் தத்து எடுக்கும் குழந்தை களின் மூலம் எனக்கு கிடைக்கும் ஆசியும் எனக்கு இந்த பட்டத்தை அளித்திருக்கலாம் என புன்னகை யோடு கூறினார்.

கொலிவுட்டின் தற்போதைய எதிர்பார்ப்பாக இருப்பது ஷங்கர் இயக்கத்தில், விக்ரம், எமிஜாக்சன் நடித்து வரும் 'ஐ' படத்தைப் பற்றியதுதான்.

'ஐ' படத்தின் ஷூட்டிங் 75சதவிகிதம் நிறைவடைந்துள் ளதாக கொலிவுட் வட்டாரம் தெரிவிக்கிறது.


அந்தவகையில் 'ஐ' திரைப்படத்தினை 17 மொழிகளில் வெளியிட திட்டமிட்டுள்ளார்கள். இதற்குமுன் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் வெளியான 'எந்திரன்' படத்தினை 9 மொழிகளில் வெளியிட்டார்கள்.

ஷங்கர் இயக்கிவரும் 'ஐ' படத்திற்கு, நீண்ட இடை வெளிக்குப் பின்பு இந்தியாவின் சிறந்த ஒளிப்பதிவாளர்க ளில் ஒருவரான பி.சி.ஸ்ரீராம் ஒளிப்பதிவு செய்ய, ஸ்ரீகர் பிரசாத் எடிட்டிங்கை கவனிக்கிறார். அதேபோல் 'ஒஸ்கார்' வின்னர் ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார்.

இப்படம் தாமதமாவதற்கு காரணம் என்னவென்று விசாரித்தபோது, விக்ரமிற்கு பிசிகல் சேஞ்ச், மோல்டிங், ஸ்கேனிங், செயற்கை உறுப்புக்கான பொருட்களை தயார் செய்தல் என கிட்டத்தட்ட இப்படத்தின் ஷூட்டிங் ஆரம்பித்து ஒருவருடம் ஆகிவிட்டதாம்.

'ஐ' டீம் தற்போது சென்னை மருத்துவமனையில், கிளைமாக்ஸ் காட்சியை படமாக்கி வருகிறது.

## 17 மொழிகளில்.....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்குலியின் கனவு அணி



1983-ம் ஆண்டு உலக கோப்பையை வென்ற கபில்தேவ் கடந்த வியாழன் ஒரு நாள் போட்டிக்கான இந்தியாவின் சிறந்த கனவு அணியை அறிவித்தார். இதில் அவர் தனது பெயரை தேர்வு செய்யவில்லை. அதோடு 1983-ம் ஆண்டு உலக கோப்பையை வென்ற அணியில் இருந்தவர்களில் ஒருவர் கூட இடம்பெறவில்லை.

கபில்தேவை போலவே இந்திய அணியின் முன்னாள் தலைவரான கங்குலியும் தனது கனவு அணியை அறிவித்து உள்ளார். இந்தியாவின் சிறந்த டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிக்கான அணியை அவர் அறிவித்துள்ளார். இந்த இரண்டு அணியிலும் கங்குலி தனது பெயரை தேர்வு செய்து இருக்கிறார்.

தற்போதைய வீரர்களில் வீராட் கோலி, ரவீந்திர ஜடேஜா ஆகியோர் ஒரு நாள் போட்டிக்கான அணியில் இடம் பெற்றுள்ளார்கள்.

தன்னையும், டெண்டுல்கரையும் தொடக்க வீரர்கள் வரிசையில் சேர்த்துள்ளார்.

2011-ம் ஆண்டு உலக கோப்பையை வென்ற அணியில் இருந்த யுவராஜ் சிங், ஜாகீர்கான் ஆகியோரும் இதில் இடம் பெற்றுள்ளனர்.

டெண்டுல்கர், ஷேவாக், கபில்தேவ், டிராவிட், தோனி, ஜாகீர்கான், சிறிநாத், கும்ப்ளே மற்றும் கங்குலி ஆகியோர் இரண்டு அணியிலும் இடம் பெற்றுள்ளனர்.

இரண்டு அணிக்கு யார் அணித் தலைவர் என்பதை கங்குலி தெரிவிக்கவில்லை. கப்டன் பதவியில் தோனியை யாருடனும் ஒப்பிட முடியாது என்று கங்குலி சமீபத்தில் தெரிவித்து இருந்தார். கங்குலி தேர்வு செய்த இந்தியாவின் சிறந்த அணி வருமாறு:

ஒருநாள் போட்டி: டெண்டுல்கர், கங்குலி, ஷேவாக், வீராட் கோலி, டிராவிட், யுவ ராஜ் சிங், தோனி, கபில்தேவ், ரவிந்திர ஜடேஜா, கும்ப்ளே அல்லது சிறிநாத், ஜாகீர்கான்.

டெஸ்ட்:கவாஸ்கர், ஷேவாக், டிராவிட், தெண்டுல்கர், கங்குலி அல்லது குண்டப்பா விஸ்வநாத், தோனி, கபில்தேவ், ஹர் பஜன் சிங், கும்பளே, சிறிநாத், ஜாகீர்கான் 12-வது வீரர் வி.வி.எஸ்.லட்சுமண்.

## சிம்பாவே வீரர்களின் போராட்டம் முடிந்தது

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி சிம்பாவேக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாட உள்ளது.

இவ்விரு அணிகளும் இரண்டு 20- 20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாட உள்ளது.

இந்த நிலையில் கடும் நிதி நெருக்கடி காரணமாக சிம்பாவே வீரர்களுக்கு அந் நாட்டு கிரிக்கெட் வாரியம் சம்பளம் வழங்கவில்லை, சமீபத்தில் நடந்த போட்டி களுக்கு ஊதியமும் வழங்கப்படவில்லை.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், ஜிம்பாப்வே வீரர்கள் ஒரு சங்கத்தை தொடங்கியுள்ளனர். சங்கத்தில் உள்ள வீரர்கள் அனைவரும் பாகிஸ்தான் தொடருக்கான பயிற்சியை புறக்கணித்தனர்.

தங்களுக்கு சம்பளம் வழங்கும் வரை பயிற்சியில் ஈடுபடமாட்டோம் என்றும் தெரிவித்தனர். இதனால் பாகிஸ்தான் தொடர் நடக்குமா என்ற கேள்வி எழுந்தது.

இதையடுத்து ஜிம்பாப்வே கிரிக்கெட் வாரியம் வீரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. வீரர்கள் தரப்பில் ஒரு டெஸ்ட் போட்டிக்கு 5 ஆயிரம் டொலரும், ஒரு நாள் போட்டிக்கு 3 ஆயிரம் டொலரும், 20- 20 போட்டிக்கு 1500 டொலரும் வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர். இருதரப்பிலும் நடந்த பேச்சுவார்த்தையில் சுமூக உடன்பாடு ஏற்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிம்பாவே கிரிக்கெட் வாரியத்தால் வீரர்கள் எதிர்பார்க்கும் ஊதியத்தை கொடுக்காவிட்டாலும் கூட அவர்களை திருப்திப் படுத்தும்வகையில்சம்பளம்வழங்க முன்வந்துள்ளது.

இதனை வீரர்கள் ஏற்றுக்கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் தங்களது போராட்டத்தையும் வாபஸ் பெற்று பயிற்சியை தொடங்கியிருக்கிறார்கள்.

இதனால் திட்டமிட்டப்படி பாகிஸ்தான் தொடர் நடைபெறும் என்று சிம்பாவே கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

# வேட்பாளர்களுக்கு வடக்கில் அச்சுறுத்தல்

## கபே அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜேவிபி, ஐ.தே.க உள்ளிட்ட மூன்று அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் அச்சுறுத்தப்பட்டிருப்பதாக முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகத் கபே என்ற சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

வவுனியாவில் வேட்பாளர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிய கபே இயக்குநர் கீர்த்தி தென்னக்கோன் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அதேபோல், புத்தளம், அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இடம்பெயர்ந்த நிலையில், சொந்த இடங்களில் இருந்து தொலைவில் இருக்கின்ற 14 ஆயிரம் பேர் தாங்கள் இலகுவாக வாக்களிப்பதற்கான வசதிகளைச் செய்து தருமாறு தேர்தல் திணைக்களத்திடம் கோரியிருப்பதாகவும் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இவர்கள் தமக்குரிய வாக்குச் சாவடிகளில் இருந்து அதிக தூரத்தில் போக்குவரத்து வசதிகளின்றி இருப்பதனால், அந்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது தேர்தல் திணைக்களத்தின் பொறுப்பாகும் என்றும் அவர் கூறினார்.

வடக்கில் பல இடங்களில் வேட்பாளர்கள் சுதந்திரமாகச் சென்று தமது பிரசார நடவடிகைகளிலும், அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாத நிலைமை நிலவுகின்றது.

வாக்களிப்பு நடைபெறுவதற்கு முன்னர் கடைசி நான்கு வார காலத்திற்குள்ளாவது இத்தகைய நிலைமைகளைப் போக்கி, வேட்பாளர்கள் வாக்காளர்களை சுதந்திரமாகச் சந்தித்து தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் கபே பணிப்பாளர் கோரியுள்ளார்.

இதற்கிடையே, மத்திய மாகாணத்தில் கொத்மலை பகுதியில் இராணுவத்தினர் அரசாங்கம் சார்ந்த வேட்பாளர்களுக்காக தேர்தல்பிரசார பணிகளில்ஈடுபடுவதாக கபே அமைப்புக்கு முறைப்பாடுகள் வந்துள்ளன. (எ-11)

## அரச சார்பற்ற...

அம் மகஜரில் முன்னாள் புலி உறுப்பினர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களை நேரில் சென்று பார்வையிடுமாறு நவநீதம்பிள்ளையிடம் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

வடக்கு மக்களை தனிப்பட்ட ரீதியில் சந்தித்து விசாரணை நடத்துமாறும்,

நீதிமன்ற அறிக்கை, பொலிஸ் அறிக்கை மற்றும் அரசாங்கத்தின் இரகசிய ஆவணங்களை பார்வையிடுமாறு கோரியுள்ளனர்.

வடக்கு விஜயத்தின்போது இலங்கை இராணுவத்தினதோ அல்லது பொலிஸாரினதோ உதவியைப் பெற்றுக் கொள்ளக் கூடாது எனவும் தெரிவித்துள்ளனர். (எ-11)

## இந்தியா - இலங்...

என்றும் இந்த நாடுகள் அறிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் இது தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்துள்ளதுடன் இந்த செய்தியை அமெரிக்காவுக்கு தெரியப்படுத்தியிருப்பதாக ராஜதந்திர வட்டார தகவல்கள் தெரிவித்தன. (எ-11)

## வடக்கில்...

பிரசாரங்களை மேற்கொள்வதற்கு தேவையான கீழ் மட்டத்திலான அமைப்புகளை வலுப்படுத்தவுள்ளோம்.

அதற்கு தகுதியான பிரதிநிதிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை வடக்கு தவிர்ந்த ஐக்கிய தேசியக்கட்சி போட்டியிடும் வடமேல் மற்றும் மத்திய மாகாண சபை தேர்த்தல்களில் அரசாங்கம் ஆச்சரியம் அடையும் வகையிலான தேர்தல் முடிபுகளை எம்து கட்சி பெறும் என்றார். (எ-11)

## ஜெயலலிதா...

உறுமய கவலையடைகிறது.

இலங்கை அரசாங்கம் அமைதியாக இருந்தால், தமிழகத்தின் அழுத்தங்களை இலங்கை நேரடியாக எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும்.

தமிழகத்தையும் இந்திய மத்திய அரசாங்கத்தையும் ஒப்பிடும் போது, நாய் வாலாட்டுவதற்கு பதிலாக நாயை வால் ஆட்டுவிக்கின்றது என்றார்.

சென்னையில் நடைபெற்ற இந்திய சுதந்திர தின விழாவில் உரையாற்றிய ஜெயலலிதா, கச்சதீவில் தமிழகத்திக்குள்ள உரிமை நிலை நாட்டப்படும் என்ற நம்பிக்கை தனக்கு இருக்கிறது எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## மகிந்த அரசை கலை...

பால்மாவில் டி.சி.டி இரசாயனம் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, அந்த பால்மாவை சந்தையில் இருந்து அப்புறப்படுத்தியது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்திருந்தால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க மாட்டாது.

அதேவேளை மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை எதிர்வரும் தேர்தல்களில் கவிழ்ப்பதாக நாட்டுக்கு எதிரான சக்திகள் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்துள்ளன.

சிங்கள - முஸ்லிம் மக்கள் இடையில் முறுகலை ஏற்படுத்தி முஸ்லிம் மக்களின் வாக்குகளை அரசாங்கத்திற்கு எதிராக திருப்ப இவர்கள் முயற்சித்து வருகின்றனர்.

அரசாங்கம் முஸ்லிம் மக்களின் உரிமைகளை மட்டுமே பாதுகாக்கின்றது. சிங்கள மக்களின் உரிமைகளை பாதுகாப்பதில்லை என்ற தோற்றத்தை ஏற்படுத்தி சிங்கள மக்களின் வாக்குகளை பிரிக்க முயன்று வருகின்றனர்.

அடுத்த கட்டமாக சிங்கள பௌத்த மற்றும் கிறிஸ்தவர்கள் இடையில் மோதல்களை தோற்றுவித்து, அரசாங்கம் கிறிஸ்தவர்களுக்கு எதிராக செயற்படுகிறது என்ற நிலைமையை ஏற்படுத்தி, கிறிஸ்தவர்களின் வாக்குகள் அரசாங்கத்திற்கு கிடைப்பதை தடுக்க இந்த சக்திகள் திட்டங்களை வகுத்துள்ளன என்றார். (எ-11)

## ஷிராணியை சந்தி...

காரணமாக அந்த உரையை ஆற்ற முடியாது போனது.

மனித உரிமை ஆணையாளருடன் நடைபெறும் பேச்சுவார்த்தையில் நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பான விடயங்கள், அடுத்த கட்ட செயற்பாடுகள் மற்றும் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்தும் பேசப்படும் என தெரியவருகிறது.

இந்தப் பேச்சுவார்த்தை எங்கு நடத்தப்படும் என்பது குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. ஷிராணி பண்டாரநாயக்கவின் வீட்டில் இந்த சந்திப்பு இடம்பெறலாம் எனத் தெரியவருகிறது.

அதேவேளை இலங்கை வரும் நவநீதம்பிள்ளை, அரச தரப்பினரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட சிறுபான்மை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்திக்க உள்ளார்.

அத்துடன் வெலிவேரிய ரத்துபஸ்வல பிரதேச மக்களையும் அவர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளதுடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உயர் அதிகாரிகளையும் சந்திக்க உள்ளார். (எ-11)




கடுகதி வேகத்தில் மின்சார ரயில்கள் பறக்கும் நவீன யுகத்தில்
30 வருடமாக ரயிலையே காணாமல் இங்கே ஒரு சந்ததி

இந்த நிலையை மாற்றி
60 வருடப் போராட்டங்களால் சீர்குலைக்கப்பட்ட
இளைஞர்களுடைய வாழ்வை மீட்டு
நலிவடைந்துபோன எமது கல்வியையும்,
பொருளாதாரத்தையும் தூக்கி நிறுத்தி

தொழில்வாய்ப்பு, திருப்தியான வருமானம்,
வாழ்க்கை வசதிகளென

இளைஞர்களது வாழ்வு வளம்பெற
இம்முறை தேர்தலை
சரியாகப் பயன்படுத்துவோம்!

- கோடீஸ்வரன் றுஷாங்கன் -
ஊடகவியலாளர், சிகரம் பணிப்பாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எதிர்காலத்தை வெற்றிகொள்ள நிரந்தர வேலைவாய்ப்புகள்**

கப்பல் புனர்நிர்மாணித்தல் பிரிவுக்கு கொழும்பு துறைமுகம் (தனியார்) சாதாரண ஊழியர்கள்/வெல்டிங்/வெல்டிங்கெல்பர்/பெயின்டர் விமான நிலையம் (தனியார்) சுத்திரிகரிப்பாளர்/கேற்டரிங் 18-48 ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/- 45,000/- (தொழிலடிப்படையில்) உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் எதிர்காலத்தை வெற்றிகொள்ள உடனே தொடர்புகொள்ளுங்கள். **0775561883**

(C-4351)



3 மாதகால பயிற்சி நெறி

**அக்ஷயா**

பயிற்சிக் கட்டணம் ரூ 20,000/=

பேசியல், மேக்கப், கெயாஸ்ரைல், தலைமுடி அயன்பண்ணுதல், தலைமுடிசுருட்டுதல், கேளிங், சாறி பிளவுஸ் கட்டிங், சாறிவேக் மேற்படி பயிற்சிகள் நடைபெறுகின்றன. பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். *ஒட்டிய கன்னங்களை குண்டு கன்னங்களாக மாற்றும் குளிசை, உடல் எடை கூட்டும் குளிசை. * உடல் எடை குறைக்கும் பால்மா, குளிசை, கோப்பி. * கருவளையம், நாட்பட்ட பருக்கள், இளநரை, முடி கொட்டுதல் அனைத்துக்குமான குளிசை, தலைமுடி வளரச்செய்யும் ஆயுர்வேத எண்ணெய். *கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நாட்பட்ட வடுக்கள், பருக்கள் அனைத்தையும் மாற்றும் ஒறியினல் வைத்நிங் கிறீம். *வைத்நிங் பேசியல், தலைமுடி அயன் பண்ணுதல், சுருட்டுதல், கேளிங் செய்து கொள்ளலாம், முகம் கழுத்தில் உள்ள காய்கள் அகற்றப்படும்.

அக்ஷயா-நாவலர் வீதி,
பிறவுண்றேட் சந்தி அருகில்,
யாழ்ப்பாணம்.

பதிவு இல:16168.
T.P : 0772106155

(3638)



Workroom Based Practical..............

**SPOKEN ENGLISH**

After A/L | Dip. In English

100%பேச்சுபயிற்சி
Video&Audio தொழிநுட்பமுறை

1st class free

- பிரபல்யமானகொழும்பு (British Council Special) ஆசிரியர்குழாமின் வழிகாட்டல்.
- விசேடதனிப்பட்டகவனம். விரும்பியநேரம்
- சிறியவர்முதல்உயர்அலுவலர்கள் வரைதனித்தனிவகுப்புகள்

CALL 0777 442254 225

**IiSEEES NALLUR CAMPUS**

762, Point Pedro Road, Nallur.0212224728



தற்போது யாழ் நகரில்...



சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்

BTEC HND in
**BIOMEDICAL SCIENCE**

Leadind to BSc (Hons) from UK universities

- ஆய்வுகூட பரிசோதனைகளை உள்ளடக்கிய முழு நேர பாடநெறி
- உயிரியல் துறையில் தொழில் சார் Biomedical Scientist களாக UK இல் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம்
- சர்வதேச ரீதியில் அதிக தொழில் வாய்ப்புக்களுக்கு இட்டுச் செல்லும்
- பாடநெறி முடிவில் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி
- உயிரியல் துறையில் நவீன வசதிகளுடனான கற்றல் சூழல்

September Intake Now on

மருத்துவ / உயிரியல் / உயிர் இரசாயனவியல் துறையில் ஆராய்ச்சியாளர்களை உருவாக்கும் பாடநெறி

ISO 9001:2008 CERTIFIED

14 Years of Trust & Excellence in Higher Education

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Building Careers - Transforming Lives

Macro Ads

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar


## பொய்முறை...

எமமால் மீண்டும் இனங் காணப்பட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

இதேவேளை சுயேட்சை குழுவில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பா ளர் ஒருவரே பொய்யான தகவல்களினை வழங்கி அச்சுறுத்தல் என முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இவ்வாறு அச்சுறுத்தல் என கூறி பொய்யான முறைப்பாடுகளினை மேற்கொள்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்என பொலிஸார் ஏற்கெனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-4)


**Dutch, Deutsch, French**



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன்-Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து- Dutch (டச்) புதிய பிரிவுகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

✱ French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.

✱ வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.

✱ Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.

✱ Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

Tel: 0213216928, 0774842464

(Gov. Reg.No: W/A 76795)

(C-4360)



**Jet D Express**
**Courier Service**



விரைவு பாதுகாப்பு உத்தரவாதம்

| | | |
|---|---|---|
| Sweeden | Over 5 Kg 1000/- | |
| Canada | Over 5 Kg 1100/- | |
| Norway | Over 5 Kg 1000/- | |
| Italy | Over 5 Kg 1000/- | |
| France | Over 5 Kg 1000/- | Over 11 Kg 750/- |
| Germany | Over 5 Kg 900/- | Over 11 Kg 700/- |
| London | Over 5 Kg 800/- | Over 11 Kg 650/- |
| Australia | Over 5 Kg 900/- | Over 11 Kg 750/- |
| Netharland | Over 5 Kg 1000/- | Over 11 Kg 800/- |
| Swiss | Over 5 Kg 1000/- | Over 11 Kg 850/- |
| Denmark | Over 5 Kg 1000/- | Over 11 Kg 800/- |

Note : 25Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு.

உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடையும்..

Note : கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும். வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

உலகின் முன்னணி சேவையின் ஊடாக உங்கள் உறவுகளுக்கு பொருட்களை அனுப்பிக்கொள்ளலாம்

(C-4350)

இல. 27, முதலாம் மாடி,
நவீன சந்தை (தனம்ரெக்ஸ் மேல்)
யாழ்ப்பாணம். 021 221 9150, 0772187 301

No. 77E, Manning Place,
Wellawatta, Colombo - 06.
T.P : 0112363873, 0776509909.



காலத்தை வீணடிக்காதீர்கள்...



**மலேசியாவில் வேலைவாய்ப்பு**

(நீண்டகால தொடர்புள்ள கம்பனிகள்)

- British American Tobacco Company
- Samsung Company
- Sony Company
- Solar Company
- Genting plantation Company

இதுபோன்ற சர்வதேச கம்பனிகளுடான விருப்பத்துக்க வேலைகள் ஒழுங்குபடுத்தித் தரப்படும். (தங்குமிட வசதிகள் உண்டு) அடிப்படை வருமானம் 48.000/- இருந்து 60.000/- பகுதிநேரம் மற்றும் மேலதிக நேர வேலைகளும் உண்டு. (மேலதிக வருமானம்)

10 நாட்களுக்குள் அனுமதி
கல்வித் தகைமை முக்கியமானதல்ல
நம்பிக்கை மிக்க நிரந்தர கம்பனிகள்

மேலதிக தொடர்புகளுக்கு :
0777 80 52 86, 0754 09 94 88

உங்களால் நம்பக்கூடிய உறுதிப்பாட்டுடன் கூடிய தொடர்பு

788, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(3635)



**YOGI'S**

Acadamy of Beauty Therapy, Hair Dressing & Home Science

1. அழகுக்கலை (Advanced Beauty Theorapy & Hair Dressing - (Diploma Course)}
2. Air Brush மூலமாக நவீன ஒப்பனை முறைகளும் தலை அலங்காரங்களும் (Advanced Bridal Make up&Hair Styles)
3. 10 வகை வித்தியாசமான சாறி கட்டும் முறைகள்
4. கேக் ஐசிங் பயிற்சி வகுப்புகள் (Brithday Cakes, Fondant Structures & Sugar Flowers)

புதிய பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளது 31.08.2013 சனிக்கிழமை

ஆசிரியை : *Mrs. Yogini Shanmuganathan*
Dipin High tec Aesthetics & Cosmetology (India)
Dip.in Advanced Bridal Make up & Charater make up (India)
Dip.in. Home Economics (Srilanka& India)

75, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2796,
0777164923

(C-4357)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.